
கல்கி



KALKI ஜூன் 3, 1956 4 அ


நான் சலவை செய்யவே துணியாத துணிகளை—இப்போது
லக்ஸ் உபயோகித்து நிர்ப்பயமாக சலவை செய்கிறேன்
உதாரணமாக, புடவைகள், உங்களிடமுள்ள மிகமிக மென்மைவாய்ந்த அருமையான சேலைகளைக்கூட—நேர்த்தியான பட்டு, பருத்தி, ஜார்ஜெட்டுக்கள், க்ரேப்புகள், ரிப்பன்கள், சீனுன்கள் — அநேகமாக எல்லாவற்றையும் வீட்டிலேயே பத்திரமாகவும், சலபமாகவும் சலவை செய்து வெற்றி காணமுடியும். அதற்கு நீங்கள் உபயோகிக்க வேண்டியது தூய்மையுள்ள மென்மையான லக்ஸ்.
இலவசம்!
உபயோகமுள்ள சிறு சிறு புத்தகங்களான "நேர்த்தியான துணிகளைச் சலவைச் செய்ய சரியான வழி", "சேலைகளை சலவை செய்ய சரியான வழி" என்பவை உங்களுக்கு இலவசமாகக் கிடைக்கும். தபால் பெட்டி நம்பர் 409, பம்பாய் 1, என்ற விலாசத்துக்கு எழுதி, லக்ஸ் அட்டைப்பெட்டியின் மேல் மூடியிலுள்ள பாப்பா படம் போட்ட பாகத்தைக் கடிதத்துடன் இணைத்து அனுப்புங்கள்.
LUX
அழகான ஆடைகளுக்கு நெடுங்காலம் புதுமைத்தோற்றம் அளிப்பது லக்ஸ்
L.X. 133-50 TM

மலர் 15

கல்கி


இதழ் 44

ஜூன் 3, 1956

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

நாஸ்திக விமோசனம்



காஞ்சியில் நடைபெற்ற சர்வோதயத் திருநாளன்று பேசிய ராஜாஜி ''அகலிகைக்குச் சாபம் தீர்ந்தது போல் விநோபாஜியின் விஜயத்தினால் தமிழ் நாட்டின் சாபம் தீரும்'' என்றார்.



மலர் 15 | இதழ் 44

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

துன்முகி ௵ வைகாசி 21

பாகிஸ்தானில் குழப்பம்

"பாகிஸ்தான் தலைவர்கள்தான் துவேஷ மனப்பான்மை கொண்டு, இந்தியாவுக்கு விரோதமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். உண்மையில் பாகிஸ்தான் மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் எவ்வித விரோத பாவமும் இல்லை."

இவ்விதம் சில தினங்களுக்கு முன் பாரதத் தலைவர் ஜவாஹர்லால் நேரு மக்கள் சபையில் கூறினார்.

நேருஜி கூறியது முற்றிலும் உண்மை என்பது பாகிஸ்தானில் நிகழ்ந்து வரும் சம்பவங்களிலிருந்து உறுதியாகி யிருக்கிறது.

சென்ற சில தினங்களாகக் கிழக்கு பாகிஸ்தானிலும் மேற்கு பாகிஸ்தானிலும் அரசியல் குழப்பம் தொடங்கி யிருக்கிறது.

கிழக்கு பாகிஸ்தானில் சென்ற பொதுத் தேர்தலின் போது மூண்ட குழப்பம் இன்னும் அடங்கியதாகத் தெரியவில்லை.

அங்கு உணவுப் பஞ்சமும் அதைக் கண்டித்து உண்ணாவிரதங்களும் தாண்டவமாடி வருகின்றன.

போதாக் குறைக்குச் சில தினங்களுக்கு முன் கிழக்கு பாகிஸ்தான் சட்ட சபையையும் கலைக்கும்படி நேர்ந்து விட்டது.

பாகிஸ்தான் புதிய அரசியல் சட்டத்தின்படி மந்திரி சபைக்கு அதிகார பீடத்தில் இருக்க உரிமையில்லை என்று சபாநாயகர் தீர்ப்புக் கூறியதே மந்திரி சபை வீழ்ச்சியுற்றுச் சட்டசபை கலைந்ததற்குக் காரணம்.

அதன் விளைவாக அங்கு ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்டுள்ளது.

* * * *

அதே சமயம் மேற்கு பாகிஸ்தானிலும் நிலைமை திருப்திகரமாக இல்லை.

பாரத நாட்டுக்கு விரோதமாகத் துவேஷப் பிரசாரம் செய்வதையே தங்களுடைய குறிக்கோளாகக் கொண்ட முஸ்லிம் லீக் தலைவர்களுக்குப் பாகிஸ்தான் பொது மக்களிடையே செல்வாக்கு குன்றிவிட்டது.

எனவே, தங்கள் தவறை உணர்ந்த முஸ்லிம் லீக் பிரமுகர்கள் ஒருவர் பின் ஒருவராக டாக்டர் கான்சாகிப் உருவாக்கியுள்ள குடியரசுக் கட்சியில் சேர்ந்து வருகிறார்கள்.

303 அங்கத்தினர்கள் கொண்ட மேற்கு பாகிஸ்தான் சட்ட சபையில் 170 அங்கத்தினர்கள் குடியரசுக் கட்சியில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கார்மேகங்களால் குழப்பட்டுள்ள பாகிஸ்தான் அரசியல் வானில், கான் சாகிபின் புதிய கட்சி மின்னொளி போல் நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது.

"யோக்கியப் பொறுப்பும் நேர்மையும் உயர்ந்த இலட்சியங்களும் வாய்க்கப் பெற்ற ஒரு தலைவர் இப்போது பாகிஸ்தான் சர்க்கார் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருப்பது நம்முடைய அதிர்ஷ்டமாகும்" என்று பாகிஸ்தான் பிரதிநிதிகள் டாக்டர் கான் சாகிபைப் பாராட்டி வருகிறார்கள்.

மக்களை விசாரணையின்றிச் சிறையில் தள்ளும் அடக்கு முறைச் சட்டங்களை மேற்கு பாகிஸ்தான் சர்க்கார் ரத்து செய்யத் தீர்மானித்திருப்பதாக டாக்டர் கான் சாகிப் அறிவித்திருப்பதன் பலனாக அவருக்கு மக்களிடையே இன்னும் அதிக ஆதரவு ஏற்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் மக்களுக்குத் தொல்லையைக் கொடுத்து வந்த சர்வாதிகாரச் சட்டங்களை ரத்து செய்யத் தீர்மானித்திருப்பதன் மூலம் கான் சாகிப் ஜனநாயக

தர்மத்தில் தமக்குள்ள பற்றுதலையும் தளரா உறுதியையும் நிரூபணம் செய்திருக்கிறார்.

"பாகிஸ்தான் மக்களிடையே அறநெறியை வளர்க்கவும் அரசாங்கத்தைப் புனிதப்படுத்தவும் பாடுபடுவேன்" என்று டாக்டர் கான் சாகிப் பதவியேற்றபோது உறுதி கூறினார்.

இப்போது அவரது கட்சி பலமடைந்து வருவதால், அவர் தமது உறுதி மொழியை நிறைவேற்றி பதவி ஆசை, அரசியல் குழப்பம், பித்தலாட்டப் பிரசாரம் முதலியவற்றிற்கு முற்றுப்புள்ளி வைப்பாரென நம்பலாம்.

பாகிஸ்தான் ஏற்பட்டதிலிருந்து அதன் தலைவர்கள் பதவி வேட்டையில் நாட்டம் கொண்டதாலேயே, அங்கு அரசாங்கம் நிலையற்றதாகி விட்டது.

பிரதமர்கள் திடீரென்று பதவி யிழப்பதும், கவர்னர்கள் மின்னல் வேகத்தில் மாறுவதும் சகஜமாகி விட்டன.

பாகிஸ்தானில் சிறுபான்மையோர் விஷயத்திலும் பாகிஸ்தான் சர்க்கார் இதுவரை சரிவர நடந்து கொள்ளவில்லை.

இந்தியாவுக்குக் கொடுக்க வேண்டிய கடன் தொகையிலிருந்து காஷ்மீர் பிரச்னை வரையில் ஒரு விஷயத்திலாவது பாகிஸ்தான் தலைவர்கள் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை.

இத்தகைய அவல நிலைக்கு இனி இடமிராது என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

டாக்டர் கான் சாகிப் நேருஜியின் அரிய நண்பர். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தேசத் தொண்டு புரிந்து வரும் பழம் பெரும் தேச பக்தர். முஸ்லிம் லீகர்களின் கொடுங்கோன்மைக்கு இலக்காகிப் பல ஆண்டுகள் சிறையில் கஷ்டப்பட்டவர்.

தாங்கள் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறவும், பொது ஜனங்களின் கோரிக்கைக்கு இணங்கவுமே முஸ்லிம் லீக் சர்க்கார் கான் சாகிபுக்கு விதித்திருந்த நிபந்தனைகளை அகற்றி, அவருக்கு மந்திரி சபையில் ஸ்தானம் அளித்தார்கள்.

அப்படியிருந்தும் அவர்கள் இழந்த செல்வாக்கைப் பெற முடியவில்லை.

முஸ்லிம் லீகில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதைச் சென்ற தேர்தலின் போது கிழக்கு பாகிஸ்தான் மக்கள் சந்தேகத்துக்கு இடமின்றிப் பிரகடனம் செய்தார்கள்.

முஸ்லிம் லீகர்களின் கோட்டை என்று கருதப்பட்ட மேற்கு பாகிஸ்தானிலும் மக்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள் என்பதையே இப்போது அங்கு நிகழ்ந்து வரும் சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்தியாமீது துவேஷப் பிரசாரமோ, அமெரிக்காவிடமிருந்து பெற்று வரும் ஆயுத உதவியோ முஸ்லிம் லீகர்களுக்குப் பொது மக்களின் ஆதரவைத் தேடிக் கொடுக்கவில்லை.

அதற்கு மாறாக அவர்களின் நிலைமை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக முடிந்திருக்கிறது!

எனினும், இந்நிலைமை பற்றி இந்திய மக்கள் மகிழ்ச்சியடைய மாட்டார்கள்.

ஏனெனில், அண்டை நாட்டில் அடிக்கடி அரசியல் நெருக்கடியும் அமைதியின்மையும் நிலவுவது இந்தியாவின் நலனுக்கு ஏற்றதல்ல.

எனவே, டாக்டர் கான் சாகிபின் தலைமையிலே பாகிஸ்தானில் அரசியல் குழப்பங்களும் துவேஷப் பிரசாரமும் மறைந்து, அமைதியும் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் நட்பு ஏற்படுவதற்கான நல்ல சூழ்நிலையும் உண்டாகும் என்று நம்புகிறோம்.

மதுரையில் பொன் விழா

ரசிகமணி டி. கே. சி. அவர்கள் "ஒரு நல்ல பாடல் கிடைத்துவிட்டால் போதும். அதற்காக ஒரு விழாவே கொண்டாடலாம்" என்று கூறுவார்கள்.

அருமையான பாடல்கள் பல நிறைந்த முத்தொள்ளாயிர நூல், தமிழுலகத்துக்கு முதன் முதலில் எடுத்துத் தந்தது, மதுரைத் தமிழ்ச் சங்கம். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழா இப்பொழுது நடைபெற இருக்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் கடைச் சங்கம் இருந்தது. அதில் நாற்பத்தொன்பது புலவர்கள் வீற்றிருந்தார்கள். தெய்வத் திருக்குறளை உலகத்துக்கு தந்து பெருமை கொண்டார்கள்.


அந்தப் பண்பையே மேற்கொண்டு இன்றைய மதுரைத் தமிழ்ச் சங்கமும் சென்ற 50 ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்கு அரும்பணி யாற்றி வந்திருக்கிறது. வித்வான் பரீட்சைக்கு நுழைவுப் பரீட்சை நடத்தி மாணவர்களைத் தமிழில் ஊக்கமும் ஆர்வமும் கொள்ளச் செய்திருக்கிறது. பல தமிழ் நூல்களை வெளியிட்டிருக்கிறது. பல தமிழறிஞர்களை ஆதரித்து வந்திருக்கிறது. திரு பி. டி. ராஜன் அவர்கள் தமிழ்ச் சங்கத்தைப் பற்றி ஒரு கட்டுரை தந்திருக்கிறார். அது இந்த இதழில் இடம் பெற்றிருக்கிறது.

மதுரைத் தமிழ்ச் சங்கம் இந்த ஐம்பது ஆண்டுகளில் செய்துள்ள சேவையைக் குறித்து ஒவ்வொரு தமிழனும் பெருமை கொள்ளலாம். அம் முறையில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் பொன் விழா பெரியார் பி. டி. ராஜன், எம். எல். ஏ. அவர்களை வரவேற்புக் குழுத் தலைவராகக் கொண்டு மதுரையில் மே மாதம் 30-ம் தேதி முதல் ஜூன் மாதம் 5-ம் தேதி முடிய வெகு சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

ராஜாஜி 30-ம் தேதி பொன் விழாவை ஆரம்பித்து வைக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்.

சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா, திருவாளர்கள் ஓ. வி. அழகேசன், எம். பக்தவத்ஸலம், டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ. முத்தையச்செட்டியார், திருக்குறள் முனுசாமி, சி. என். அண்ணாத்துரை, ப. ஜீவானந்தம், டி. வி. சதாசிவப் பண்டாரத்தார், ரா. பி. சேதுப்பிள்ளை, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, கருமுத்து தியாகராச செட்டியார், ஓ. பி. ராமசாமி ரெட்டியார், நீதிபதி சோமசுந்தரம், ச. சோமசுந்தர பாரதியார். சுவாமி சித்பவானந்தா, மந்திரி மாணிக்க வேலர், இலங்கை

ஓட்டைக் கப்பல்!



பலவீனமடைந்து வரும் முஸ்லிம் லீக் கட்சியிலிருந்து பெரும்பான்மையான அங்கத்தினர்கள் டாக்டர் கான்சாகிபின் குடியரசுக் கட்சியில் சேர்ந்து வருகின்றனர்.

எஸ். நடேசப் பிள்ளை, உ. முத்துராமலிங்கத் தேவர், டாக்டர் ப. சுப்பராயன், மேடைத் தளவாய் குமாரசாமி முதலியார், இலங்கை கந்தையா வைத்தியநாதன், மந்திரி சண்முக ராஜேசுவர சேதுபதி, ம. பொ. சிவஞானம், நெடுஞ்செழியன், ஈ. வே. இராமசாமிப் பெரியார் முதலியோரும் இன்னும் அனேக பண்டிதர்களும், புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும், ஒரு கட்சியையும் சேராதவர்களும் கலந்து கொள்ளுகின்றனர்.

இசை அரங்குகளில் எம். எம். தண்டபாணி தேசிகர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, டி. கே. பட்டம்மாள், எம். எல். வசந்தகுமாரி, கமலா லட்சுமணன், வீருசாமி சகோதரர்கள். ஆகியோரும், நாடக அரங்குகளில் என். எஸ். கிருஷ்ணன் குழுவினர், கே. ஆர். இராமசாமி குழுவினர், எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர், டி. கே. எஸ். குழுவினர் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இயல், இசை, நாடகம் மூன்றிலும் சிறந்தவர்கள் எல்லாம் மதுரையில் கூடப் போகிறார்கள். இன்றைய மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழா கடைச் சங்க காலத்தையும் நம் நினைவில் கொண்டு வந்து நிறுத்தி மகிழ்வூட்டும்.

மதுரையையும் தமிழையும் பற்றி நினைத்தால் மதுரை நகரின் நடுவிலே கொலுவீற்றுக் கோயில் கொண்டிருக்கும் சோமசுந்தரக் கடவுளும், வானளாவி நிற்கும் கோபுரங்களும் மனத்தில் எழும்.

சேரநாட்டில் அரச குடும்பத்தில் தோன்றி, சகோதரனுக்காக அரச பதவியைத் துறந்த இளங்கோ அடிகளின் உயர்ந்த பண்பின் நினைவு வரும். அவர் சோழ நாட்டு வணிகர் குலத்தில் தோன்றியவர்களாகிய கோவலனையும்—கண்ணகியையும் கதாபாத்திரங்களாகக் கொண்டு புனைந்த காவியத்தின் சிறப்பு தமிழ் மக்களின் மனத்தில் ஊர்ஜிதமாகும். அக்காவியத்திலே, தான் நீதி வழுவியதை உணர்ந்த மாத்திரத்தில் ஆற்றமாட்டாது அக்கணமே அவ்விடத்தே உயிர் நீத்த பாண்டிய மன்னனின் சீரிய அற நெறி முறை நெஞ்சை உருக்கும். கற்புத் தெய்வத்துக்காகச் சேரநாட்டிலே கோயில் எடுப்பித்த சேர மன்னன் செங்குட்டுவனின் அறப்பண்பு மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இப்படி மூத்தமிழ் நாட்டு மகான்களை ஒரு பெரும் காவியத்தில் இணைத்த பெருமை இளங்கோ அடிகளுக்கே அல்லவா!

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகார'த்தைத் தமிழ்த் தாய்க்குத் தந்த இளங்கோ அடிகளையும், எந்நாட்டவர்க்கும் இறைவனுமியும், தென்னாட்டைக் கோயிலாகக் கொண்ட சொக்கேசர் கோபுர தரிசனத்தையும் ஓவியர் மணியம் இவ்வார அட்டைச் சித்திரமாகத் தருகிறார்.

என்ன சேதி?

சிறுகதைப் போட்டி

மே மாதக் "கல்கி" சிறுகதைப் போட்டி மிக வெற்றிகரமாக நடந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நூறு ரூபாய் பரிசு பெற்ற சிறுகதை அடுத்த "கல்கி" இதழில் பிரசுரமாகும்.

போட்டிக்கு வந்த கதைகளைப் படிக்கும் போது தமிழ் நாட்டில் இப்படி விதம் விதமாக எழுதுகிறார்களே என்று வியக்கத்தான் வேண்டியிருக்கிறது. தமிழ் நாட்டில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இந்த இலக்கிய விழிப்பை மேலும் வளர்ப்பதற்காகத்தான் 'கல்கி'யில் மாதச் சிறுகதைப் போட்டியை ஏற்படுத்தியிருக்கிறோம்.

ஒவ்வொரு மாதப்போட்டிக்கும் அந்தந்த மாதம் இருபதாம் தேதி தான் கடைசி தினம். இருபதாம் தேதிக்குள் நமது காரியாலயத்துக்கு வரும் கதைகளை அந்த மாதச் சிறுகதைப் போட்டியில் சேர்த்துக் கொண்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம். அதற்கு அடுத்த நாள் முதல் வரும் கதைகளை அடுத்த மாதப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

போட்டிக்கு அனுப்பும் கதைகளுக்குத் தயவுசெய்து இன்னொரு நகல் எடுத்துக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். கதைகளுடன் தபால் தலை வைத்து அனுப்ப வேண்டாம். எந்தக் காரணத்தை முன்னிட்டும் கதைகளைத் திருப்பி அனுப்புவது சாத்தியமில்லை.

பரிசுபெற்ற கதை அடுத்த மாத இரண்டாவது வாரத்திலேயே பிரசுரமாகிவிடும்.

வள்ளுவர் திருநாள்

திருவள்ளுவர் பிறந்த சென்னை நகரில், தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் மே மீ 24உ அன்று வள்ளுவர் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

மயிலாப்பூரில் உள்ள வள்ளுவர் கோயிலைப் புதுப்பிக்க வேண்டும் என்றும், திருவள்ளுவர் திருநாளான வைகாசி அநுஷ தினத்தைச் சர்க்கார் விடுமுறையாக விட்டு, புத்தர் திருநாளைப் போல அகில உலகிலும் தெய்வப்புலவரின் திருநாளைக் கொண்டாட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

இத் திருவிழாவுக்குத் திரு வே. சாமிநாத சர்மா தலைமை தாங்கினார். திரு ம. பொ. சிவஞான கிராமணியார், திரு அ. மு. பரமசிவானந்தம், திரு சிவகுமாரன், திரு ஆர். மகாதேவன், திரு அழ. வள்ளியப்பா முதலியவர்கள் திருவள்ளுவரின் சிறப்பை வெவ்வேறு கோணங்களில் எடுத்துக் காட்டிப் பேசினார்கள். ஏராளமான தமிழ் எழுத்தாளர்களும், தமிழ் அன்பர்களும் அன்றைய வைபவத்தில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.

வள்ளுவர் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடிய தமிழ் எழுத்தாளர் சங்க நிர்வாகிகளுக்குத் தமிழ்ப் பெரு மக்கள் சார்பாக வாழ்த்துக் கூறுகிறோம்.

பம்பாயில் தமிழ் முழக்கம்

நாளது ஜூன் மாதம் 2-ம் தேதி சனிக்கிழமை, கவி சுப்பிரமணிய பாரதியார் தமது சூட்சம சரீரத்தில் பம்பாய்—மாதுங்காவுக்கு வந்து பார்ப்பாரானால், தமது கவி வாக்கு எவ்வளவு அற்புதமாய்ப் பலித்து விட்டது என்பதை அறிந்து, ஆச்சரியக் கடலில் மூழ்கி விடுவார். அன்று மாலை பம்பாய்த் தமிழ்ச் சங்க மணி மண்டபத்திறப்பு விழா நடைபெறப் போகிறது. சென்னை ராஜ்ய முதல் அமைச்சர் திரு காமராஜ் மணி மண்டபத்தைத் திறந்து வைக்கப் போகிறார். பம்பாய் ராஜ்ய கவர்னர் திரு ஹரி கிருஷ்ணமேதாப் விழாவுக்குத் தலைமை தாங்கப் போகிறார். சென்னை மந்திரிகள் திரு சி. சுப்பிரமணியம் திரு பக்தவத்ஸலம் ஆகியவர்கள் விழாவில் கலந்து கொள்ளப் போகிறார்கள்.

பம்பாயில் உள்ள தமிழ் இளைஞர்கள் எல்லாம் மாதுங்கா வீதிகளில் தமிழ் முழக்கம் செய்து தமிழ்ச் சங்க மணிமண்டப விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடப் போகிறார்கள். "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!" என்ற பாரதியாரின் வாக்கை இவ்வளவு விமரிசையாக நடத்தி வைக்கப் போகும் மாதுங்கா பம்பாய்த் தமிழ்ச் சங்க அன்பர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

மீண்டும் வழிகாட்டுகிறார்

இந்தோ சீனா சண்டை நிறுவதற்கு நமது பாரதப் பிரதமர் காட்டிய வழியைப் பின்பற்றியதால் அந்த நாட்டில் சண்டை ஓய்ந்திருக்கிறது. நீடித்த சமாதானம் நிலவலாம் என்றும் எதிர்பார்க்க இடமிருக்கிறது.

இப்பொழுது பிரஞ்சு குடியேற்ற நாடாகிய அல்ஜீரியாவில் சமாதானம் நிலவுவதற்கான திட்டம் ஒன்றை நேருஜி பார்லிமெண்டில் சமர்ப்பித்திருக்கிறார்.

டியூனிஸ், மொராக்கோ இரண்டுக்கும் சுதந்திரமளித்த பிரான்ஸ் அல்ஜீரியாப் பிரச்னையையும் அம்மாதிரியே தீர்க்க

முடியாததற்குக் காரணம் அந்த நாட்டின் ஜனத்தொகையில் ஏழில் ஒரு பங்கு மக்கள் பிரஞ்சுக்காரர்களாயிருப்பதுதான். நேருவின் ஐந்து அம்சத் திட்டப்படி இரு சாராரும் பலாத்காரத்தைக் கட்டாயம் கைவிட வேண்டும்; அல்ஜீரியா மக்கள் சுதந்திரம் பெற உரிமையுள்ளவர்கள் என்பதைப் பிரஞ்சு அரசாங்கம் ஒப்புக் கொள்ள வேண்டும்; அங்குள்ள பிரஞ்சுக்காரர்கள் அல்ஜீரியாவே தங்கள் தாய்நாடு என மதித்து, அந்நாட்டுப் பழங்குடி மக்களும் தாங்களும் சமம் என்று ஏற்க வேண்டும். இந்த அடிப்படையில் இரு சாராரும் சமாதானமாகப் போக முற்பட வேண்டும்.

பிரஞ்சு சர்க்கார் இந்தத் திட்டத்தை ஏற்காவிட்டாலும் நேருவின் நல்லெண்ணத்தைப் பாராட்டி யிருக்கின்றனர். பிரஞ்சு மந்திரி மெண்டஸ் பிரான்ஸ் இந்தப் பிரச்னை சம்பந்தமாகத் தமது பதவியை ராஜிநாமாச் செய்திருப்பதிலிருந்து இந்த விவகாரத்தின் முக்கியத்துவத்தைப் பிரஞ்சுக்காரர்கள் உணர்ந்திருக்கின்றனர் என்றே ஏற்படுகிறது.

உலகமெங்கும் காலனி ஆட்சி முறை மறைந்து வரும் இந்த சகாப்தத்தில் பிரஞ்சுக்காரர்கள் அல்ஜீரியா தங்கள் பிடியிலிருந்து நழுவாமல் எவ்வளவு காலம்தான் பாதுகாத்து வர முடியும்?

எனவே, நேருஜியின் திட்டத்தைப் பிரஞ்சுக்காரர்கள் அப்படியே ஒப்புக் கொள்ளாவிட்டாலும் அதை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதுதான் விவேகமாகும்.

ஏ. எஸ். ஐயங்காரின் மறைவு

விதியைப் போல் கொடுமையானது வேறு ஒன்றுமில்லை. தமிழ் நாட்டுக்கு, குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்துக்கு அரிய தொண்டாற்றி வந்த விலையுயர்ந்த மனித உயிர் ஒன்றைச் சென்ற வாரம் காலன் கொண்டு போய் விட்டான். ஸ்ரீ ஏ. எஸ். ஐயங்கார் மரணமடைந்த செய்தி அவரை அறிந்தவர்கள் எல்லாரையும் திடுக்கிட்டு விடும்படி செய்து விட்டது. ஸ்ரீ ஏ. எஸ். ஐயங்கார் பழைய பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் சுதந்திர இயக்கத்துக்காகப் பல பத்திரிகைகளின் மூலம் தொண்டாற்றிப் பெயர் பெற்றவர். நமது இந்திய சர்க்காரின் செய்தி விளம்பர ஸ்தாபனத்தை அமைத்து அதைத் திறமையான முறையில் செயலாற்றுவதற்கு ஏற்பாடு செய்து புகழ் பெற்ற பிரமுகர் அவர். சர்க்கார் அதிகாரத் துறையில் மட்டும் இன்றி நாட்டின் சமூக வாழ்க்கையிலும் அவர் பிரபலமடைந்து விளங்கினர்.

ஜீவ நதியாக இருந்த பாலாறு மணலாறாகி விட்ட உண்மையைக் கண்டு மைசூரில் நீரைத் தேக்கி வைத்திருக்கும் அக்கிரமத்தை அம்பலப்படுத்தினர். தண்ணீர் கொண்டுவரப் பகீரதப் பிரயத்தனம் செய்தார். பாலாற்றில் தண்ணீர் விட வேண்டும் என்பதை இந்திய சர்க்காரும், மைசூர் சர்க்காரும் உணர்ந்து செயலாற்றும் சமயத்தில் அவர் மறைந்து போய் விட்டது வட ஆற்காடு மாவட்ட வாசிகளுக்கு மாபெரும் நஷ்டமாகும்.

திரு ஏ.எஸ். ஐயங்கார் அவர்களின் எதிர் பாராத மரணத்தினால் துயரப்பட்டுக் கொண்டிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எண்ணற்ற நண்பர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மைசூரின் நஷ்டம்

மைசூர் ராஜ்யத்தை உருவாக்குவதற்குச் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தொண்டாற்றி வந்த அரும்பெரும் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீ கே. டி. பாஷ்யம் காலமான செய்தி கேட்டுத் தேசபக்தர்கள் யாவரும் வருந்தியிருப்பார்கள். ஸ்ரீ கே. டி. பாஷ்யம் மிகச் சிறந்த சட்டசபை வல்லுனர். மைசூர் மக்களின் அன்புக்கும் பெரு மதிப்புக்கும் பாத்திரமாக விளங்கி வந்தவர். மைசூர் ராஜ்யத்தில் தொழிலாளர் இயக்கத்தை ஆரம்பித்துத் தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்ட உத்தமர். சொந்த வாழ்வில் மட்டுமல்லாது பொது வாழ்விலும் மாசற்ற தூய்மை வாழ்க்கை நடத்தியவர்.



ஸ்ரீ பாஷ்யம் ஐயங்காரின் சடலத்தின் இறுதி யாத்திரையில் மைசூர் ராஜ்யத்தின் முதன் மந்திரியும், பல்லாயிரக் கணக்கான மக்களும் கலந்து கொண்டு மரியாதை செய்தனர். ஆயுதப் படை மரியாதை செய்தது. இந்தச் செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கும் போது ஸ்ரீ பாஷ்யத்தினிடம் மைசூர் மக்கள் கொண்டிருந்த மதிப்பு நன்கு தெரிகிறது.

மிகப் பெரிய தேசபக்த பரம்பரையில் தோன்றிய ஸ்ரீ கே. டி. பாஷ்யத்தைப்போல் இனி யார் மைசூர் ராஜ்யத்தில் தோன்றப் போகிறார்களோ? ஸ்ரீ பாஷ்யத்தினுடைய மறைவு மைசூர் ராஜ்யத்துக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமேயாகும்.

சர்வோதயக் காட்சிகள்





சர்வோதயபுரத்தில் விநோபாஜி தங்கியிருந்த அழகிய குடிலின் வெளித் தோற்றம். குடிலுக்குள் ராஜாஜியும்—வினோபாஜியும் அந்தரங்கமாக அளவளாவும் அற்புதக் காட்சி.

⁂



வினோபாஜியின் குடிலில் ஜெயப் பிரகாச் நாராயண், தீரேந்திர மஜூம்தார் முதலிய தலைவர்கள் வினோபாஜியின் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வினோபா அடிகள் திருக்குறளைக் கூர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார். மூக்குக் கண்ணாடியுடன் உட்கார்ந்திருப்பவர்தான் மகாநாட்டின் தலைவர் அப்பா சாகேப் பட்டவர்த்தன்.

சர்வோதயப் பொருட்காட்சியின் முகப்புத் தோற்றம்.

நான் மாடக் கூடலில் நாலாவது தமிழ்ச் சங்கம்


பி.டி.ராஜன் எம்.எல்.ஏ.

இப்பொழுது நாம் கொண்டாடுவது மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழா. இதை ஒரு பெருவிழா என்று சொல்லலாம். மதுரை மாவட்டமும் மதுரை மக்களும் மட்டுமின்றி, எல்லா மாவட்டங்களிலுமுள்ள தமிழ் மக்களும் தங்கள் விழாவாகவே கொண்டாட வேண்டும்.

மதுரை வெகு காலமாகவே மூன்றாவது சங்கத்தின் இருப்பிடமாக இருந்து வந்தது. ஆங்கிலேயர்களுடைய வாழ்க்கைக்குப் பாராளு மன்றம் எத்தகைய முக்கிய ஸ்தாபனமாக இருந்து வந்திருக்கிறதோ, அதேமாதிரி தமிழருக்குச் சங்கம் முக்கிய ஸ்தாபனமாக இருந்து வந்தது.

புலவர் நக்கீரர் வரலாற்றிலிருந்து தமிழ் மக்கள் உண்மை பேசுவதில் கடவுளுக்கும் பயப்படாதவர்களென்று தெரிகிறது. சங்கம் வளர்த்த தமிழனின் பெருமை, அயல் நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த மக்களைத் தம் மக்கள்போல் நடத்தியதே. தமிழ்நாடு எல்லா மதங்களுக்கும் சம உரிமை அளித்து வந்திருப்பதுடன், பேச்சுரிமையும் அளித்து வந்திருக்கிறது.

பிறரும் வாழவேண்டும், தானும் வாழவேண்டும் எனும் உயரிய பண்பின் பயனாக விருந்தோம்பல் தமிழர்களின் பிறவிக் குணமாக அமைந்திருக்கிறது. இயல்பாகவே நல்லகுணமுள்ள தமிழர்கள், கலையார்வமுள்ளவர்களாயுமிருந்திருக்கிறார்கள். கலைத் திறமை தற்காலத்தில் குன்றியபோதிலும் பரதநாட்டியம், நாகசுரம் ஆகிய இரண்டும் உலக மக்கள் பாராட்டும் வகையில் தமிழ்நாட்டில் வளர்க்கப்பட்டு வருகின்றன. முக்கியமாக, பரத நாட்டியத்தைக் கற்றுத் தேர்ச்சி பெற உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் பெண்களும், ஆண்களும் நம்முடைய நாட்டுக்கு வருகின்றனர்.



தமிழன் என்றால் வீரன் என்று மதிக்கப்பட்ட காலமொன்றிருந்தது. அவன் போரில் புறங்காட்டிப் போனதில்லை. அவன் வீரம் பிற நாட்டினரின் ஆட்சியின் காரணமாக மங்கியிருந்தது. அதிருஷ்டவசமாகச் சென்ற மகாயுத்தத்தில் போரில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்ட சமயம் தமிழன் தைரியத்துடனும், புத்திசாலித்தனத்துடனும் வெற்றிகரமாய்ப் போரில் ஈடுபட்டு வீர உலகில் தனி மதிப்பைப் பெற்றான்.

ஒரு காலத்தில் கடற்படையைத் திறமையுடன் நடத்தி வந்த தமிழர்கள் திரைகடலோடியும் திரவியம் தேடினார்கள். பிற்காலத்தில் இந்தத் துறையில் தமிழர் திறமை குறைந்தது. ஆங்கில ஆட்சியின் போது ஆங்கிலத்தில் பேசுவது பெருமை என எண்ணி ஆங்கிலம் கற்ற தமிழன் தன் பாஷையைக்கூட மறந்து விட்டான்.

இவ்வாறு பல துறைகளிலும் தமிழர் வாழ்வு அவல நிலை அடைந்த பொழுது பாண்டித்துரைத் தேவரவர்கள் 1901-ம் ஆண்டு மதுரையில் நான்காவது சங்கத்தை ஆரம்பித்தார்கள். அது சமயம் அவருக்குத் தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியாவிலும் இலங்கையிலும் வெளிநாடுகளிலிருந்தும் ஆசியும் ஆதரவும் கிடைத்தன.

தாய்மொழிப் பற்று மிகுதியான இச் சமயம் வெளிநாட்டு ஆதரவை நாம் எதிர்பார்க்க முடியாது. தமிழர்களில் கூடச் சிலர் குறுகிய பிரதேச உணர்ச்சியால், மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கும் தங்களுக்கும் என்ன தொடர்பு என்று நினைக்கிறார்கள். ஆனால் அத்தகையோரின் எண்ணிக்கை குறைவுதான். பொதுவாகச் சாதாரண மக்களிடம் இந்த மனப்பான்மை இல்லை என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சங்கத்தின் எதிர்கால நோக்கமும், சேவையும் மக்கள் முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியம். இந்தப் பொன் விழாவின் பயனாகப் பொது மக்களின் அன்பும் ஆதரவும் ஆசியும் நிதி உதவியும் தமிழ்ச் சங்கத்துக்கு நிச்சயம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

வாழ்க, தமிழ்! வாழ்க, சங்கம்!


மனம்கவர் மணம்...
Finest
Musk
Soap
Dralle
E.V. சரோஜா.
டிராலி
மஸ்க் சோப்



எட்டாம் அத்தியாயம்

குங்கும மாளிகை

உத்தரத்தைப் பார்த்தவாறு யோசனை செய்து கொண்டிருந்த சித்திராங்கன் விடுதித் தலைவனிடம் அவன் கேட்டபடியே உறுதிமொழி கொடுத்தான். தலைவனும் தான் சொன்னபடியே மறுநாட் காலையில் குதிரையும் அறிமுகச் சுருளும் கொடுத்துச் சித்திராங்கனைக் கொடும்பாளூருக்கு அனுப்பி வைத்தான்.

சித்திராங்கன் கொடுத்த உறுதி மொழியும், அதைத் தொடர்ந்து விடுதியின் நிர்வாக அறையிலே நடந்த பேச்சு வார்த்தைகளும், மிக மிக இரகசியமாக இருந்தன. அவற்றை இரகசியமாகவே விட்டு விட்டுக் கோனாட்டு எல்லைக்கு வருகிறோம்.

கோனாடு—இன்று புதுக்கோட்டை என்று வழங்கும் மாவட்டத்தில் பாழடைந்து போய்ப் பரிதாபமாகக் காட்சி தரும் கொடும்பாளூர் என்ற சிற்றூர்தான் அந்தக் காலத்தில் கோனாட்டின் தலைநகரமாகத் திகழ்ந்தது. 'கொடும்பை' என்றும் 'இருக்குவேளூர்' என்றும் சிலப்பதிகாரம் போன்ற பழந்தமிழ் நூல்கள் பெருமையோடு வர்ணிக்கிற அதே கொடும்பாளூர்தான்! எத்தனை பெரிய நகரமாகக் காட்சி தந்தது!

ஆமாம். மாபெரும் இந்திரலோகப் பட்டணமாக வனப்போடு காட்சி தரும் அந்தப் பிரும்மாண்டமான தலைநகரத்தை நோக்கிக் காற்று வேகத்தில் பறந்து வருகிறது அந்த வெள்ளைக் குதிரை. அதன் மேல் அமர்ந்து மிகவும் லாகவமாகக் குதிரையைச் செலுத்தி வரும் அந்த வீர வாலிபன் யார்? சந்தேகமென்ன? சித்திராங்க பூபதிதான்.

இதோ நகரத்தின் கோட்டை வாசலை நெருங்குகிறது குதிரை.



ஆனால் என்ன ஆச்சரியம்! காவலாளிகள் யாரும் அதைத் தடுத்து நிறுத்தக் காணோம்! அந்தக் குதிரையின் கொண்டையிலே செருகி யிருக்கும் வெள்ளித் திருகுப்பூவைப் பார்த்ததும் அந்தக் காவலாளிகள் ஒதுங்கி நின்று மிக்க பணிவோடு வழி விடுகிறார்கள்! சித்திராங்க பூபதிக்கே அந்த அநுபவம் ஆச்சரியமாக இருந்தது.

சித்திராங்க பூபதி தலைநகரத்துக்குள்ளே நுழைந்தான். நுழைந்து வலது பக்கமாகத் திரும்பியதும், ஒரு விசாலமான அரச மரம் சூரிய வெளிச்சத்தில் கல கல என்று தங்க இலைகளைக் கலகலத்துக் கொண்டு நின்றது. அதன் அடியில், இவனுடைய வரவை எதிர்நோக்கிக் கொண்டு ஒரு வீரன் வேறொரு சிவப்புக் குதிரையோடு நின்றான். ஏற்கனவே விடுதித் தலைவன் அரச மரத் தடியில் ஒரு வீரன் காத்திருப்பான் என்று சித்திராங்கனுக்குச் சொல்லி யிருந்ததால், சித்திராங்கன் தன்னுடைய குதிரையை அங்கே நிறுத்தினான். மரத்தின் அடியில் காத்துக்கொண் டிருந்த அந்த வீரன் சித்திராங்கனை நோக்கி வந்தான். உடனே, சித்திராங்கன் குதிரையிலிருந்து கீழே இறங்கினான்.

“உங்களுடைய வெள்ளைக் குதிரையை என்னிடம் கொடுத்து விடுங்கள். இந்தச் சிவப்புக் குதிரையில் ஏறி இனி இந்த ராஜ வீதி வழியாகச் செல்லுங்கள். சென்று மேற்குப் பக்கமாகத் திரும்பியதும், ஒரு பெரிய மாளிகை தெரியும். அதன் மேல் மாடத்தில் 'குங்கும வர்ணத்தினால் சாயம் பூசி யிருக்கும். அந்த மாளிகைக்கு முன்னால் குதிரையை நிறுத்திக் கொள்ளுங்கள். மற்றக் காரியங்கள் எல்லாம் சொல்லி வைத்தாற் போல் நடக்கும்!” என்றான் அந்த வீரன்.

“சரி” என்று சொல்லிச் சிவப்புக் குதிரையை வாங்கிக் கொள்ளும் போதே, சித்திராங்கனுக்குச் சந்தேகம் உதித்து விட்டது. 'விடுதித் தலைவன் நம்மிடம் சொன்ன செய்தியில் வெள்ளைக் குதிரையைக் கொடுத்து விட்டுச் சிவப்புக் குதிரையை வாங்கிக் கொள்ளும்படி கூறவில்லையே. இவன் ஏன்

இந்தக் குதிரை மாற்றுச் செய்கிறான்!' என்று யோசித்தவாறு, சந்தேகத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல், சிவப்புக் குதிரையின் மேல் ஏறி "விர்" என்று சென்றான் பூபதி.

கொடும்பாளூரின் ராஜ வீதி அபாரமான அழகோடு காட்சி தந்தது. மாளிகைகள் விதம்விதமான வர்ணங்களிலே நின்றன. சங்குச் சிப்பிகளைச் சுண்ணும்பாக நீற்றி, அந்தச் சுண்ணும்பையே மாடங்களில் தீற்றியிருந்தார்கள். அது, நிலவைக் கொண்டு பூசி விட்ட மாதிரி 'வெள்ளை வெளேர்' என்று இருந்தது! அந்த வெண்ணிறமான மாளிகைகளுக்குத் தங்க நிறத்திலே மேல் விதானம் அமைத்திருந்தார்கள். இன்னும் சில மாளிகைகள் நீலோத்பலம் பூத்தது போல் ஒரே நீல வர்ணத்தில் நின்றன. வேறு சில மாளிகைகள் மேனி முழுதும் பொன் முலாம் பூசி வனப்பான மஞ்சள் நிறத்தில் மின்னிக் கொண்டிருந்தன. அவற்றின் உயரத்தைப் பார்த்தால் வலம்புரித் தீவில் கலங்கரை விளக்கம் நின்றதல்லவா, அப்படியிருந்தது ஒவ்வொரு மாளிகையும். சூரியன் உதிப்பதும் அஸ்தமிப்பதும், சந்திரன் வளர்வதும் தேய்வதும், நட்சத்திரங்கள் மின்னுவதும் எல்லாம் வானத்தில் இல்லை, அந்த மாளிகைகளிலே தான் என்று சொல்லும்படியாக அத்தனை உயரத்தில் வானை அளாவி, சித்திராங்க பூபதியின் கண்முன்னே அந்த ராஜ வீதி எழுந்து நின்றது. வேகமாகச் செல்லுகிற குதிரையைச் சற்று இறுக்கிப் பிடித்து மெதுவாக ஓட்டிக் கொண்டே, அந்த மாளிகைகளைப் பார்த்து அவற்றின் அழகை அநுபவித்த வண்ணம் பூபதி சென்றான்.

இதோ! மேற்குப் பக்கம் திரும்பியதும், வெள்ளையும், மஞ்சளும், நீலமுமாக நிற்கும் அந்த மாளிகை மாடங்களுக்கு மத்தியிலே ஒரு மாடம், குங்கும வர்ணத்தில் கம்பீரமாக எழுந்து நிற்கிறது. சித்திராங்கன் அதைப் பார்த்ததுமே தீர்மானித்து விட்டான் — இந்த மாளிகைதான் தான் செல்லவேண்டிய இடம் என்று! உடனே குதிரையை அந்த மாடத்திற்கு முன்பாக நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான். இறங்கும் போதே மாடத்தை நோக்கி மேலே பார்த்தான். அப்படியே ஒரு கணம் திகைத்துப் போய் விட்டான் பூபதி. சூரிய வெளிச்சத்தில், பட்டப் பகல் நேரத்தில், சந்திரோதயம் ஆனதுபோல, அந்த மாடத்தின் முகப்



பிலே எழிலான ஒரு நங்கையின் முகம் தெரிந்தது. அந்த முகத்தின் எழில் சூரிய வெளிச்சத்தையே பிரதிபலித்து ஒளி வீசிக் கொண்டிருந்தது! ஒரு கணந்தான் சித்திராங்கன் அந்த அழகுப் பிம்பத்தைப் பார்த்தான். அதற்குள் அந்த நங்கை, மாடத்தின் உம்பரிலிருந்து மின்னல் போல உள்ளே சென்று மறைந்து விட்டாள்!

குதிரையிலிருந்து இறங்கியபோதே சித்திராங்க பூபதிக்கு இப்படி ஒரு புதுமையான அதிர்ச்சி. அந்த அதிர்ச்சியை ஒரு வகையாகச் சமாளித்துக் கொண்டு, குதிரையை எங்கே நிறுத்தலாம் என்று சித்திராங்கன் யோசிப்பதற்குள், மாளிகையின் உள்ளேயிருந்து ஒரு நடுத்தர வயது மனிதன்— பார்த்தால் ரதசாரதி போலத் தெரிந்தது — வெளியே வந்தான்.



"குதிரையை என்னிடம் கொடுத்து விட்டு, நீங்கள் உள்ளே போங்கள்!" என்றான் அந்த மனிதன்.

சித்திராங்க பூபதி குதிரையின் பிடிமானக் கயிற்றை அந்த மனிதனிடம் கொடுத்து விட்டுக் குங்கும மாளிகைக்குள்ளே நுழைந்தான்.

குங்கும மாளிகையினுள் சித்திராங்கனுக்காக எதிர்பாராத சம்பவங்கள் எத்தனையோ காத்திருந்தன. உண்மையில் அவனுடைய பிற்கால வாழ்வில் நடக்கவிருந்த அத்தனை சம்பவங்களுக்கும் அந்தக் குங்கும மாளிகைதான் காரணமாக அமையப் போகிறது என்பதை, ஓரளவாவது முன்கூட்டி யூகித்திருந்தால் அந்த மாளிகைக்குள்ளேயே அவன் நுழைந்திருப்பானோ என்னவோ! தன்னுடைய அருமை அன்னையிடம் கொடுத்த வாக்குறுதிகளைப் பற்றி மாமல்லபுரத்து விடுதியில் இருந்தபோது, எத்தனை முறை திரும்பத் திரும்ப யோசனை செய்தான் அவன்! சித்தருடைய வரவினால் ஏற்பட்ட அதிர்ச்சியின் போதும், பிறகு மாமல்லபுரத்துப் பாறையிலே ஒரு குதிரை வீரன் தன்னை வேவு பார்த்தபோதும், பின்னர் சமணத் துறவி வந்து ஆரூடம் சொன்ன போதும், எத்தனை பக்தி சிரத்தையோடு தந்தப் பேடகத்தின் உபதேசங்களை மனத்துக்குள்ளே உறுதிப் படுத்திக் கொண்டான் சித்திராங்கன்! ஆனால் விடுதித் தலைவனிடம் இரகசியமாக ஓர் உடன்படிக்கை செய்யப் போய், அதன் விபரீதம் இத்தனை தூரத்துக்கு அவனைச் சிக்கலிலே கொண்டு மாட்டி வைக்கும் என்று அப்பொழுதெல்லாம் அவன் எதிர்பார்த்தானா? இல்லை. விடுதித் தலைவன் பூபதியிடம் சொன்ன ஒரு விஷயம் மட்டும் அவனுக்கு விளங்கவில்லை. ஆதிரையனைப் போய்ச் சித்திராங்கன் சந்திக்க வேண்டியதில்லை என்றும், விடுதித் தலைவனே அந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து கொடுப்பதாகவும், அதன் பிறகு போய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்றும் அவன் சொன்னான். அதுதான் பூபதிக்கு எப்படியோ இருந்தது. ஆனாலும், பாவம், அதைப் பற்றியுங்கூட விபரீதமாக அவன் சந்தேகிக்க அப்பொழுது இடமில்லை. இப்பொழுது குங்கும மாளிகையில் நடந்த சம்பவங்களோ படிப்படியாகச் சித்திராங்க பூபதிக்குச் சந்தேகத்தை வலுப்படுத்துவனவாக இருந்தன. என்றாலும் என்ன பயன்? மோசம் போகிறோம் என்று தெரிந்தும் மோசம் போகக் கூடிய நிலை ஏற்பட்டதே! இதையெல்லாம் பார்க்கும்போது, எதிர்காலம் ஒரு மர்மமாக இருப்பதில் எத்தனையோ சௌகரியம் இருக்கிறது என்றுகூடத் தோன்றுகிறதல்லவா! சித்திராங்க பூபதிக்கு இத்தனை எதிர்கால நிகழ்ச்சிகளும் முன்னரே தெரிந்திருந்தால் அவன் அத்தனை உல்லாசத்தோடு அந்த

திருமணம்

திருவாரூர் பிரபல ஷராப் வர்த்தகம் ஸ்ரீ P. R. முருகையா செட்டியார் அவர்களின் குமாரன் செல்வன் நாகராஜனுக்கும் மாயூரம் கொரநாடு ஸ்ரீ G. M. கோவிந்தசாமி செட்டியார் அவர்களின் குமாரி செல்வி குணசேகரிக்கும் 16-5-56 புதன்கிழமை மணமகன் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க, மணமக்கள்!



ஜெனெக்ஸ் அலாரம்

இந்தியாவிற்கென்றே பிரத்தியேகமாக உண்டாக்கப்பட்டது



கெட்டி நிக்கல், சாதா டயலுடன் ரூ. 23/-

சொற்பம் கூடுதல் விலையில் சிவப்பு அல்லது தந்த வர்ணப் பட்டைப் பூச்சுள்ள நிறுகைகளும் கிடைக்கும்.

ரோலெக்ஸ் வாட்ச் கம்பெனி (ஈஸ்டர்ன்) பிரைவேட் லிமிடெட்

தென்னிந்தியாவுக்கு ஸோல்டிஸ்ட்ரிபியூட்டர்:

பி. ஆர். & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்

மவுண்டு ரோடு, சென்னை



உற்சாகம் செழித்திருக்க


புது சக்தியை அளிக்கும்

பை-கோலேட்ஸ்

முறையாக உபயோகியுங்கள்

விருத்து ஊக்கமூட்டுவதில் மிகச் சிறந்தது

கெடுக்க முடியாத புது சீருடன





ஜூன் 1௨ முதல்
சென்னை
நியூ குளோப்
பிராட்வே
ராக்ஸி மற்றும்
தென்னாடெங்கும்
பசந்த் பிக்சர்ஸ்
கேவா கலர் சித்திரம்
ஹாதீம் தாய்
தமிழ்
அல்லது மாய மோஹினி
டைரக்டர் • ஹோமி வாடியா
பிரபல நட்சத்திரங்கள் நடிப்பது
உரிமையாளர்:
ரத்னா பிக்சர்ஸ்
மதராஸ்-17
RKE
RELEASE THROUGH
ராதாகிருஷ்ணா பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட்
H.O. ஆலப்புழை. (சேர்மேன்: குமாரஸ்வாமி ரெட்டியார்) தி.நகர், மதராஸ்.

மாளிகைக்குள் அடியெடுத்து வைத்திருப்பானா? மாட்டான். அவன் அநுபவித்த அந்த அற்ப மன நிம்மதியுங் கூட அவனுக்கு அறவே கிட்டியிராமல் அல்லவா போயிருக்கும்!

குங்கும மாளிகையின் தாழ்வாரத்தைக் கடந்து சென்றதும், பளிங்குக் கற்களைக் கொண்டு பதித்த ஒரு விசாலமான அறை இருந்தது. அங்கே நவரத்தினங்கள் போல் மின்னுகிற பல இருக்கைகள், சாய்மானங்கள் போட்டிருந்தார்கள். பெரிய பிரபுக்கள் வந்து உட்கார வேண்டிய இடம். அதைத் தாண்டி உள்ளே சென்றால் ஒரு சிறிய கூடம். அதில் வளைவு வளைவாகச் சுற்றி ஏறும் ஒரு படிக்கட்டு இருந்தது.



சித்திராங்கன் அந்தப் படிக்கட்டை நெருங்கியதும் மேலேயிருந்து யாரோ ஒரு கிழவர் கீழே இறங்கி வந்தார்.

"வாருங்கள் தம்பி! உங்கள் வரவுக்காகத் தான் இந்த மாளிகையே காத்திருக்கிறது. மேலே செல்லுங்கள். யாரும் இல்லை. உங்களுக்கு என்று ஒரு தனி அறை இருக்கிறது. பணியாளர்கள் காவல் நிற்கிறார்கள். உங்களுடைய சொந்த மாளிகையாகவே இதைப் பாவித்துக் கொள்ளலாம். மேலே போங்கள்!"

இவ்வாறு சொல்லிவிட்டு அந்தக் கிழவர் கீழே இறங்கி மாளிகையின் உள் அறைகளுக்குப் போய் விட்டார்.

சித்திராங்கன் படிக்கட்டில் ஏறியவாறு யோசனையில் ஆழ்ந்தான்.

"பேரியாழின்மேல் உள்ள அளவு மீறிய பைத்தியத்தினால் மதியை இழந்து விட்டேனே! விடுதித் தலைவனிடம் அவசரப்பட்டு உறுதிமொழி கொடுத்து விட்டேனே! ஒரு நாள் இரண்டு நாள் யோசித்துச் சொல்வதாகக் கூறியிருக்கலாமோ! அப்பப்பா! அந்தத் தலைவன் யோசிப்பதற்கு எங்கே நமக்கு இடம் கொடுத்தான். எதிரே உட்கார்ந்து தன்னோடு எத்தனை சமத்காரமாகப் பேசி வேறு எவ்விதமான பதிலும் சொல்ல முடியாமல் அல்லவா செய்து விட்டான்!"

இப்படி யோசித்தவாறு படிக்கட்டின் அற்றத்துக்கு வந்ததும், நாலைந்து பணியாளர்கள் தலைமேல் இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு சித்திராங்கனை எதிர்கொண்டு வரவேற்றார்கள். ஒருவன் பாதத்தைத் தொட்டு ரட்சைகளைக் கழற்றினான். இன்னொருவன் அவசரம் அவசரமாக ஓடிச் சென்று, உட்காருவதற்கு உயரமான திண்டு இருக்கையை எடுத்து வந்தான். இன்னொருவன் பூபதியின் கால்களைப் பிடித்து விடுவதற்கு ஆயத்தமானான். மற்றொருவன் சித்திராங்கனின் அங்கியைக் கழற்றி விட்டு, ஆசுவாசப்படுத்த விசிறியும் கையுமாக நின்றான்.

சித்திராங்க பூபதிக்குத் தூக்கிவாரிப் போட்டது! மாமல்லபுரத்துக்கு வந்து சேர்ந்ததும் தமிழ் நாட்டு மக்களின் விருந்துபசரிப்பைப் பற்றி மெய்ம் மறந்து வியந்தான் அல்லவா! இந்த உபசாரம் அதை யெல்லாம் தூக்கியடிப்பதாக அல்லவா இருக்கிறது! என்றாலும் இந்த அபரிமித

மான உபசரிப்பின் நடுவே ஏதோ ஒன்று பூபதியை அச்சப்படுத்தியது. மாமல்லபுரத்திலே எல்லாருடைய உபசரிப்பும், மரியாதைகளும் இயல்போடு இருந்தன. ஆனல், இங்கே எல்லாம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது. அதுவே பூபதிக்குப் பயமாக இருந்தது!

ஆமாம்; பூபதி கொஞ்சம் நிதானத்தோடேயே அறைக்குள்ளே நுழைந்தான். . ஆனலும் பயனில்லை. அந்த நிதானம் அதிக நேரம் இருக்கவில்லை. கொஞ்ச நேரத்தில் அங்கே அவனுக்குச் செய்யப்பட்ட மரியாதைகளும் உபசரிப்புக்களும் சேர்ந்து அவனை மெய்ம் மறக்கச் செய்துவிட்டன. எத்தனையோ காத தூரம் கடலைத் தாண்டி வந்து, அன்னியர்களின் மத்தியிலே எப்படிப் பழகப் போகிறேம் என்று அஞ்சிக் கொண்டிருந்த ஒருவனுக்கு, இந்த எதிர்பாராத விருந்துபசரிப்புக்கள் கண்களை நன்ருக மயக்கி விட்டதில் ஆச்சரியமில்லை!

பூபதிக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறை விசாலமானது. அது மட்டுமில்லை. அதற்குப் பெயரே படிம விலாசம்! அதாவது நான்கு சுவர்களிலும் நிழல் விழுகிற பளபளப்பான தாமரத் தகடுகளைப் பதித்து, அவை சூரிய கிரணத்தையும், விளக்குகளின் ஒளியையும் பிரதிபலித்து மின்னக்கூடியவிதத்தில் அமைந்திருந்தது அந்த அறை! மேலே உத்தரத்திலிருந்து விதம் விதமான அலங்கார விளக்குகள், விசித்திர வடிவங்களில், சித்திர வேலைப் பாடுகளுடன், சிறு சிறு பதுமைகளோடு தொங்கிக் கொண்டிருந்தன. உட்காருவதற்கு, சாய்வதற்கு, ஒருச் சாய்வதற்கு, படுப்பதற்கு, உறங்குவதற்கு என்று விதம் விதமான ஆசனங்கள், பட்டு மெத்தைகளோடு கண்ணைப் பறித்தன. மனத்தைச் சொக்க வைத்தன!



கிழே சென்றிருந்த பெரியவர் மறுபடியும் மேலே வந்தார்.

"இந்த அறை உங்களுடைய அறை. மாமல்லபுரத்து விடுதித் தலைவர் தங்களைப் பற்றி எல்லா விவரமும் சொல்லி யனுப்பி யிருக்கிருர்—"

இப்படிக் கிழவர் பேச ஆரம்பித்த பிறகுதான், சித்திராங்க பூபதிக்குத் தான் கொண்டு வந்திருந்த அறிமுக நிருபம், அந்த ஓலைச் சுருள், ஞாபகத்துக்கு வந்தது. பிரமாதமான உபசரிப்புக்களுக்கு மத்தியில் அத்தனை தூரம் தன்னை மறந்திருந்தான் அவன் இதுவரை!

"ஓ! மறந்தே போய் விட்டேன். இந்தாருங்கள்; விடுதித் தலைவர் கொடுத்தனுப்பிய எழுத்து" என்று அங்கியின் செருகுக்குள்ளே பொதிந்து வைத்திருந்த சுருளை எடுத்துக் கொடுத்தான் பூபதி.


"இதைப் படித்துப் பார்த்துத்தான் உங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமா என்ன! பார்த்தாலே ராஜ களை அப்படியே சொட்டுகிறதே முகத்தில்! தவிர, நேற்று இரவு வேறு ஒரு தூதுவனிடமும் விடுதியி லிருந்து செய்தி வந்தது. தெரிந்து கொண்டோம்!"

இவ்வாறு சொல்லிக் கொண்டே பெரியவர் அந்த ஓலைச் சுருளை வாங்கி மடியில் வைத்துக்கொண்டு, மறுபடியும் பேச்சைத்தொடர்ந்தார்.

"இந்த ஓலைச் சுருளை இதற்கு உரிய இடத்தில் சேர்ப்பித்து விடுகிறேன். கவலைப்படாதீர்கள். நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்ல வந்தது என்னவென்ருல், இந்த அறை உங்களுக்கு என்றே ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இங்கேயே சற்றும் தயக்கமோ கூச்சமோ இல்லாமல் தங்கியிருக்கலாம். மாலை நேரங்களில் பல பிரமுகர்களும், அரசப் பிரதானிகளும், ராஜகுமாரர்களும் இந்தக் குங்கும

மாளிகைக்கு வருவார்கள். உங்களுக்குப் பிடித்தமாக இருந்தால் நீங்களும் அவர்களோடு சேர்ந்து கொள்ளலாம். இல்லையென்றால், இங்கேயே இந்த அறையிலேயே நீங்கள் தனியாக இருந்து கொள்ளலாம். யாரும் உங்களை வந்து தொந்தரவு செய்ய மாட்டார்கள்!"

இப்படிச் சொல்லி விட்டுக் கிழவர் மறுபடியும் படிகளின் வழியாகக் கீழே இறங்கிப் போய் விட்டார், ஓலைச் சுருளோடு!



சித்திராங்கனுக்கு ஒன்றும் புரியவில்லை. உபசரிப்பையும், பணியாளர்கள் நடந்து கொள்ளுகிற முறையையும், இந்தக் கிழவரின் பேச்சையும் பார்த்தால் அதிகமாகச் சந்தேகிப்பதற்கு இடம் இல்லை. ஆனால் எதற்காக இத்தனை உபசரணையும் செய்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை. சந்தேகத்துக்கு இடம் தருகிறது. ஒருவேளை விடுதித் தலைவன் அத்தனை தூரம் இவர்களுக்குச் சொல்லி யனுப்பி யிருக்கிறானோ என்னவோ! எதற்காக எடுத்த எடுப்பிலேயே இவர்களைச் சந்தேகிக்க வேண்டும்? ஆதிரையனைப் பார்க்க வேண்டியதில்லை என்று சொன்னது ஒன்றுதானே சந்தேகத்துக்கு இடம் தருகிறது! அதிலுமே விபரீதம் என்ன இருக்கக்கூடும்? விடுதித் தலைவனும் வேளிர் குடும்பத்தைச் சேர்ந்தவன்தானே? அவனே ஆதிரையனுக்கு நெருங்கிய உறவினன்தானே? தேச யாத்திரை போய்விட்டு இப்பொழுது தானே அந்த வாலிபன் ஊர் திரும்பி யிருக்கிறான், நாட்டின் குழப்பங்கள் எல்லாம் அவனுக்கு இன்னும் சரியாகத் தெரியாதே, என்று நினைத்து இப்பொழுது அயல் தேசத்து யாத்திரிகர்கள் யாரும் ஆதிரையனைச் சந்திக்கக் கூடாதென்று இந்த அரசாங்கத்தில் உத்தரவு போட்டிருக்கிறார்களோ என்னவோ? அதை உத்தேசித்தே விடுதித் தலைவன் அப்படிச் சொல்லி யிருக்கக் கூடும். நகரின் எல்லையில் வெள்ளைக் குதிரையை மாற்றிச் சிவப்புக் குதிரையைக் கொடுக்க ஏற்பாடு செய்ததற்கும், இப்படித்தான் ஏதாவது அரசாங்க முறையில் ஒரு காரணம் இருக்கக் கூடும். அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வருவானேன்?

இப்படி நினைத்துச் சித்திராங்க பூபதி அந்த அறையையும், அதற்கு வெளியே யிருந்த மாடத்தையும், அதன் சுற்றுப் புறங்களையும் ஆராய்ந்து பார்க்கலாம் என்று கருதி உள்ளே நடந்தான்.

"தாங்கள் குளிக்கலாமே?" என்றான் ஒரு பணியாள்.

"உடம்பு அலுப்பாக இருக்குமே! வெந்நீர் எடுத்து வைக்கட்டுமா?" என்றான் இன்னொரு பணியாள்.

"இங்கேயே பொங்கு புனல் இருக்கிறது. அதில் குளிப்பதானாலும் குளிக்கலாம்" என்றான் மூன்றாமவன்.

சித்திராங்கனுக்கு இந்தப் பணியாளர்களைச் சற்று நேரம் வெளியே அனுப்பி விட்டுத் தனியாக அந்த இடத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று தோன்றிற்று. ஒரு கணம் யோசித்தான். அடுத்த கணம் கம்பீரமான குரலில், நான்கு பணியாளர்களுக்கும் நான்கு வெவ்வேறு கட்டளைகள் கொடுத்தான்.

"வெந்நீரில் குளிக்கிறேன்!" என்றான் ஒருவனிடம்.

"எழுதுவதற்கு ஓலை கொண்டுவா" என்றான் இன்னொருவனிடம்.

"எழுத்தாணி ஒன்று கொண்டு வருகிறாயா?" என்றான் இன்னொருவனிடம். நான்காவது பணியாளைப் பார்த்து, "நான் கூப்பிடுகிற வரை இந்த அறைக்குள்ளே யாரையும் விடாதே. நீ வெளியே நின்று கொள்!" என்றான்.

அடுத்தகணம் சித்திராங்கன் அந்தப் படிம விலாசத்திற்குள்ளே ஒருதரம் வளைய வந்தான். வரும் போதே

கல்கி நேயர்களுக்கு

வணக்கம். பதினெட்டு மாதங்களுக்கு முன்பு "கல்கி" பத்திரிகையின் ஆசிரியர் பதவியை நான் ஒப்புக் கொண்டபோது, அகில இந்திய ரேடியோவிலும் உத்தியோகம் பார்த்து வந்ததால், அந்த ஸ்தாபனத்தின் அநுமதியோடு இந்தப் பொறுப்பையும் சேர்த்து ஏற்றுக் கொண்டேன். கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக இரண்டு உத்தியோகங்களையும் சேர்த்துப் பார்த்து வந்ததில் என் உடல் நிலை ஆரோக்கியம் இழந்து விட்டது. இது காரணமாக இப்பொழுது "கல்கி" ஆசிரியர் பதவியிலிருந்து விலகிக் கொள்கிறேன். ஆயினும் என்னுடைய 'கடல் கண்ட கனவு' என்னும் கதையைத் தொடர்ந்து எழுத ஒப்புக் கொண்டிருக்கிறேன்.

சோமு

கிழக்குப் பக்கம் ஒரு திறப்பு இருப்பது தெரிந்தது. அந்தத் திறப்பும் தாமரைத் தகட்டினால் பொருத்தப் பட்டுப் பளபள என்று மின்னியது. சித்திராங்கன் அந்தத் தகட்டை நெருங்கிப் பார்த்தான். அது ஒரு கதவு. அந்தக் கதவைக் கையினால் தள்ளினான். திறந்து கொண்டது. என்ன ஆச்சரியம்! உள்ளே ஒரே நீளமான பெரிய அறை தெரிந்தது. திண்டுகளும் தலையணைகளுமாகக் காட்சி தந்தது. சுவர்களில் எல்லாம் வர்ணாலங்காரமான ஓவியங்கள்.

சித்திராங்க பூபதி அந்தச் சித்திர சாலைக்குள்ளே அடியெடுத்து வைத்தானோ இல்லையோ, அப்படியே மெய் சிலிர்த்து நின்று விட்டான். அலங்காரமான ஒரு பெரிய பீடத்தில், அழகான பட்டு அணைகளுக்கு மேலே, மகோன்னதமான ஒரு வீணை வைக்கப்பட்டிருந்தது. இங்கிருந்து பார்த்தால் வீணையின் குடம் நன்றாகத் தெரிந்தது. வீணை தண்டத்துக்கு மேல் ஏகப்பட்ட தந்திகள் முறுக்கி ஓடிக் கொண்டிருந்தன. ஒன்று, இரண்டு என்று எண்ண முடியாதபடி அத்தனை தந்திகள் அந்த வீணையிலே ஓடின!

சித்திராங்க பூபதிக்கு மெய் சிலிர்த்ததோடு இல்லை. "ஆகா! பெரியாழ் என்று சொல்லப்படுகிற அந்த ஒப்பற்ற மாணிக்கம் இதுதானோ?" என்று எண்ணியதும், உள்ளத்தில் பேரின்பப் பரவசமே உண்டாயிற்று. அந்தப் பரவசத்தோடு அடுத்த அடி யெடுத்து வைத்தான். உடனே தீக்கங்கை மிதித்தவனைப் போல உடம்பை உதறிக் கொண்டு நின்றான். காரணம் அந்தச் சித்திரசாலையின் மூலையில் தெற்குச் சுவரின் கோடியிலே சாத்தி வைக்கப் பட்டிருந்த அந்தப் பிரம்புதான்! ஆகா! மாமல்லபுரத்திலே ஓசை செய்த அதே மாயப் பிரம்பு அல்லவா இது! பூபதி கண்களை இமைக்காமல் கூர்ந்து விழித்தான். சந்தேகமில்லை. அது சித்தரின் பிரம்புதான்! (தொடரும்)

வட்ட மேஜை

அன்புமிக்க சதாசிவம் அவர்களுக்கு,

கருணைக் கடல் கௌதம புத்தரை மேலட்டையில் பெருமையுடன் தாங்கி வந்த 'கல்கி' இன்று காலையில் கிடைத்தது.

மேலட்டைப் படத்தை உடனே கலங்காமல் எடுத்து பிரேம் போட்டு சுவாமி படங்களுக்குப் பக்கத்தில் மாட்டி விட்டேன்.

இந்த இதழில் வெளிவந்திருக்கும் கி. ரா. கோபாலன் எழுதியுள்ள "மகா ஜோதி" என்ற கதையைப் படித்தேன்.

சரித்திர உண்மை சிறிது கூட மாறாமல் உயர்ந்த கருத்துக்களைப் புகுத்தி ஒரு உயர்தரக் கற்பனைக் கதையையே நமக்குத் தந்திருக்கிறார். முற்றிலும் புதிய முறை! அபாரக் கற்பனை. அதை வர்ணிப்பதற்கு எனக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை.

கி. ரா. கோபாலன் ஏற்கனவே 'ராணி மாதவி' 'ராஜாளி மடம்' என்ற தொடர் கதைகளும், 'பட்டாக்கத்தி ஆறுமுகம்' போன்ற பல சிறுகதைகளும் எழுதிப் புகழ்பெற்றவர்.

அவர் 'கல்கி' வாசகர்களுக்கு நன்கு தெரிந்தவர்தான். மகாஜோதி என்கிற இந்த உயர்ந்த சரித்திரக் கதையின் மூலம் அவர் வாசகர்களின் மனத்தில் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டார் என்றே கூறுகிறேன்.

வேலூர் — கே. வி. ராமதுரை
25—5—56 — 'மித்ரா'

[திரு கி. ரா. கோபாலன் எழுதும் சமூகத் தொடர் கதை 'அபலை அஞ்சுகம்' ஜூலை மாதம் 8-ந் தேதி 'கல்கி' இதழில் ஆரம்பமாகிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். — ஆசிரியர்]

சர்வோதய புரத்தில்...

சாவி

"நீங்கள் சூரியோதயத்துக்குள் தயாராக இருக்க வேண்டும்."

"என்னத்துக்கு?"

"சர்வோதயத்துக்கு."

"சர்வோதயமா?"

"ஆமாம்; காஞ்சியில் நடைபெறும் சர்வோதய சம்மேளனத்துக்குத்தான்."

நானும் நண்பர்களும் திரு கண்ணன் ஓட்டிய காரில் காஞ்சிக்குப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தோம்.

"மணிக்கு எத்தனை மைல் வேகத்தில் போகட்டும்? ஐம்பதில் போகட்டுமா, அல்லது அறுபதில் போகட்டுமா?"

"கண்ணா! எனக்கு வயது நாற்பதுதான் ஆகிறது. இன்னும் கொஞ்ச காலத்துக்கு நான் இந்தப் பூவுலகில் வாழ ஆசைப்படுகிறேன். ஆகையால் நாற்பதிலேயே போங்கள்" என்றேன்.

திரு கண்ணன் எங்கள் இதோபதேசத்தைக் கேட்கவில்லை. அவர்பாட்டுக்கு வாயு வேகத்தில் போய்க் கொண்டிருந்தார். கண்ணன் காட்டிய வழியில் நாங்கள் காஞ்சியை அடைந்தோம்.

சர்வோதயபுரத்தை அடைந்த போது சூரியோதயமாகி வெகு நேரமாகி விட்டது.

காஞ்சி மாநகரம் ஏற்கனவே பிரக்யாதி பெற்ற பழம் பெரும் நகரம். ஸ்ரீ ஏகாம்பர நாதரும் வரதராஜப் பெருமாளும் இரு எல்லைகளில் கம்பீரமாகக் கோயில் கொண்டிருக்கும் புண்ணிய க்ஷேத்திரம். காமகோடி பீடாதிபதிகளின் வாசஸ்தலம். பல மதாச்சாரியர்களுடைய பாதம் பட்ட பூமி.

இத்தகைய பெருமையும் பிரக்யாதியும் பெற்ற காஞ்சி நகரத்துக்குச் சென்ற வாரம் மற்றொரு புண்ணிய மூர்த்தியும் பாதயாத்திரையாக நடந்து வந்து மேற்படி நகரைப் புனிதப்படுத்தினர்.

கடந்த வைகாசி பௌர்ணமி தினத்தன்று உலகெங்கும் புத்தோதயம் ஆயிற்று. அதை அடுத்தாற் போல் சென்ற ஞாயிற்றுக் கிழமையன்று காஞ்சியில் சர்வோதயம் ஆயிற்று. புத்தரைப் போலவே வினோபாஜி உலகெங்கும் ஒளி வீசுகிறார் அல்லவா?

எளிமையும் கவர்ச்சியும் பொருந்தி விளங்கிய சர்வோதயபுரத்தில் பிரவேசித்து வினோபாஜி தங்கியிருந்த ஆசிரமத்தை அடைந்தோம். வினோபாஜியின் குடில் குளுமையான ஒரு தென்னந் தோப்புக்குள் அமைந்திருந்தது. அந்தச் சின்னஞ் சிறு குடிலைக் கண்டபோது எனக்கு வேதகால ரிஷிகளின் ஆசிரமங்கள் நினைவுக்கு வந்தன.

வினோபாஜி அந்தக் குடிலுக்குள் வடநாட்டிலிருந்து சம்மேளனத்துக்கு விஜயம் செய்திருந்த பல தலைவர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்தார்

காலையில் நடந்த கூட்டத்தில் ராஜாஜி அவர்களும் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டம் முடிந்த பிறகு வினோபாஜியும் ராஜாஜியும் தலையோடு தலை மோதிய வண்ணம் நெருங்கி உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்த காட்சி நேரில் கண்டு ரசிக்க வேண்டிய அபூர்வக் காட்சியாகும். அந்த இரு பெரும் தலைகளும் உலகத்தின் முக்கிய விஷயங்கள் பற்றி என்னென்ன அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொண்டனவோ, யாரே அறிவார்?

வினோபாஜியின் குடிலை அடுத்து இரு பக்கங்களிலும் தலைவர்களுக்கு ஜாகை வசதி செய்து கொடுத்திருந்தார்கள். வினோபாவின் பூர்வாசிரமத் தோழர் சங்கரராவ் தேவ், பூதான இயக்கத்தில் பற்றுக் கொண்ட சோஷலிஸ்த் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண், காகா கலேல்கர், ராமேசுவரி நேரு, கமலா நய்யார், அப்பா சாஹிப் பட்டவர்த்தன் முதலானோரும் இன்னும் பல ஆசிரமத் தொண்டர்களும் அந்த விடுதிகளில் தங்கியிருந்தார்கள்.

பகல் இரண்டு மணிக்குச் சம்மேளனப் பந்தலில் சர்வோதய மகாநாடு நூற்பு யாகத்துடன் ஆரம்பமாயிற்று. மேடையிலும் பந்தலிலும் அமர்ந்திருந்த பலர் ஒரே சிந்தையுடன் நூல் நூற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பூதான முனிவர் மேடையில் நடுநாயகமாக அமர்ந்தபடி நூல் நூற்ற காட்சி மகாத்மாஜியை நினைவு படுத்தியது.

நானும் கூட்டத்தில் உட்கார்ந்தபடி நூற்பு யாகத்தைப் பக்தியுடன் கவனித்துக் கொண்டிருந்தேன்.

"தாங்கள் நூற்க வில்லையா?" என்று கேட்டார் என் பக்கத்திலிருந்தவர்.

"இல்லை" என்றேன்.

"தங்களுக்கு என்ன வேலை?"

"பத்திரிகையில் சரடு திரிக்கும் வேலை."

நூற்புயாகம் முடிந்ததும் 'சொல்லுவம் வைஷ்ணவன்' என்னும் பிரார்த்தனை கீதம் நடைபெற்றது. பின்னர் காகா கலேல்கர் பேசினர். அடுத்தாற்போல் மேடையில் இருந்தவர்கள் ராஜாஜியைப் பேசும்படி வற்புறுத்தினர்கள். ராஜாஜி எழுந்து வந்து 'மைக்' முன்னால் உட்கார்ந்தார்.

ராஜாஜி பேச ஆரம்பித்ததும் கீழே ஊசி விழுந்தால் சப்தம் கேட்கும் என்பார்களே, அத்தகைய நிசப்தம் நிலவியது.

"கிழவர்களின் சார்பாக இந்த சர்வோதய சம்மேளனத்தை வரவேற்று ஆசி கூறு

கிறேன்" என்று ராஜாஜி தமது பேச்சைத் தொடங்கினார். அப்போது எழுந்த ஆரவாரம் சபையில் நிலவிய நிசப்தத்தைக் கலைத்து விட்டது. அன்று ராஜாஜியின் பிரசங்கம் ஆரம்பத்திலேயே களை கட்டி விட்டது என்றே கூறவேண்டும். முக்கியமாக இரு விஷயங்களைப் பற்றியே அன்று முழுக்க முழுக்கப் பேசினார். அதாவது, பொது மக்கள் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டிய அவசியத்தையும் தெய்வ வழிபாட்டின் முக்கியத்தையும் வற்புறுத்தினார். கடைசியாக காந்திஜியின் அருமை பெருமைகளையும் விநோபாஜியின் மகிமையையும் பற்றிச் சாங்கோபாங்கமாக எடுத்துச் சொல்லித் தமது பிரசங்கத்தை முடித்தார்.

வட இந்தியர்களும் தென்னிந்தியர்களும் கூடியிருந்த மாபெரும் சபையினர் ராஜாஜியின் பொன்மொழிகளைக் கேட்டு ரசித்த காட்சியைப் போல் நான் இதற்கு முன் எப்போதும் கண்டதில்லை. ராஜாஜி பேசும் போது தமிழ் மக்கள் சிரித்து ரசித்தார்கள். அவர் பிரசங்கம் ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பட்ட போது வட இந்தியர்கள் வயிறு குலுங்கச் சிரித்து மகிழ்ந்தார்கள். ஸ்ரீ காகா கலேல்கரும் ஜயப்பிரகாசரும் தங்கள் இரு காதுகளையும் கூர்மையாக வைத்துக் கொண்டு ராஜாஜியின் பிரசங்கத்தைக் கேட்ட காட்சி மறக்க முடியாத காட்சியாகும். விநோபாஜியின் செவிகள் ராஜாஜியின் அமுத மொழி

களைப் பருகிக் கொண்டிருந்தன. எல்லோர் மனத்திலும் பசுமரத் தாணிபோல் பதியக் கூடிய வேதம் போன்ற கருத்துக்களை ராஜாஜி அன்று வெளியிட்டார். அழுத்தமாகவும் நிதானமாகவும் பேசிய அவர் பேச்சை மொழி பெயர்ப்பாளர் வெகு சிறப்பாக மொழி பெயர்த்தார். ஒன்றிரண்டு இடங்களில் மொழி பெயர்ப்பு சிறிது வித்தியாசப் பட்டாலும் ராஜாஜி விடவில்லை. அவ்வப்போது பிழைகளைத் திருத்திச் சரியாகச் சொல்லச் சொன்னார். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் ராஜாஜிக்கு ஹிந்தி பாஷையிலுள்ள ஞானமும் புலனாயிற்று. இத்தகைய கோலாகலத்துடன் தொடங்கிய அன்றைய சர்வோதயக் கூட்டம் விநோபாஜியின் பிரார்த்தனைக் கூட்டத்துடன் முடிந்தது.

* * *

"கண்ணன்! காரை எடுக்கலாமா? சந்திரோதயத்துக்குள் சென்னைக்குப் போய்ச் சேரவேண்டுமே!" என்றேன்.

"அதெல்லாம் முடியாது. காப்பி இல்லாமல் ஒரு அடியும் நகர முடியாது" என்றார் திரு கண்ணன்.

காப்பி ஓட்டலில் நான் பணம் கொடுக்கவில்லை. எனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது, பணம் கொடுக்க? ராஜாஜியின் உபதேசங்களைப் பின்பற்றிச் சிக்கனமாக இருந்து விட்டேன்!

வெள்ளித் திரை

வெறும் பேச்சல்ல

காந்தன்

தலையில் கதர்க்குல்லா வைத்திருப்பவர்களெல்லாம் நேருஜியாகிவிட முடியாது.

தாடி வைத்திருப்பவர்களெல்லாம் வினோபாஜியாகிவிட முடியாது.

பிறன் மனைவியைத் தூக்கிக் கொண்டு போவதாக வரும் கதையெல்லாம் ராமாயண காவியமாகி விடாது.

அதேமாதிரி வெள்ளித்திரையில் ஓடுவதெல்லாம் படமாகி விடாது.

இவையெல்லாம் வெறும் பேச்சல்ல. முற்றிலும் உண்மை.

வனப் பிரதேசத்தில் வாழும் பெண் மரகதம் சின்னஞ் சிறு வயதில் தாயை இழந்து தந்தையின் ஆதரவில் வளர்ந்தாள். மலரைத் துவைத்து மகிழும் மதயானையைப் போல், மரகதத்தின் பருவ எழிலை நுகர்ந்த மாபாவி அவளைக் கை விட்டுச் சென்றான். அவனை நேரில் கண்டு தன் மகளை ஏற்கும்படி கேட்டுக் கொண்ட தந்தையைத் துப்பாக்கிக்கு இரையாக்கினான் அந்தப் பாதகன். தந்தையை இழந்து அனாதையான மரகதம் தன் வயிற்றில் வளரும் மகனைக் கொண்டு பழிக்குப் பழி



வாங்குவதாகச் சபதங்கூறி, மகனைப் பெற்று விட்டு இறந்து விடுகிறாள்.

இந்த இடத்தில் ஒரு சந்தோஷச் செய்தி! படம் பார்ப்பவர்களுக்கு ஒரு சிரமமும் வைக்காமல் இருபத்தாறு ஆண்டுகள் உருண்டு ஓடி விட்டன. வாழ்க அவ்வாண்டுகள்!

நெஞ்சில் வைரத்தோடு வளர்ந்த வீர மகன், காட்டில் மலைக் குகையில் வாழ்கிறான்; பகைவனின் வளர்ப்பு மகள் இந்திராவைக் கவர்ந்து சென்று அவளைப் பணயமாக்கிப் பகைவனைத் தீர்த்துக் கட்டத் திட்டமிடுகிறான்.

மரகதத்தின் பாகத்தை ராகினி ஏற்று நடிக்கிறார். எந்தவித அபிப்பிராயத்துக்கும் இடங் கொடாமல் அவர் பாகம் முடிந்து விடுகிறது!

மரகதத்தின் வீர மகனாக டி. எஸ். பாலையா நடிக்கிறார். நன்றாய்த்தான் நடிக்கிறார். ஆனால் கானகத்தில் வாழும் கடும்புலியொன்று வீட்டில் வளரும் சாதுப் பசுவாக நடிக்க முயன்றது போல் இருக்கிறது அவர் நடிப்பு. எந்த நிமிஷத்திலும் புலி பாயலாம் என்று பயப்படுவதுபோல், பாலையா வருகிற கட்டங்களில் எந்த நிமிஷத்திலும் ஒரு பெண்ணை வற்புறுத்தலோ, அல்லது வேறு சதிச் செயல்களோ அவசியம் நடைபெறும் என்று எதிர்பார்க்கத் தோன்றுகிறது. காரணம், வில்லன் பாலையாவை நல்லவனாக ஏற்க நம் உள்ளம் மறுப்பதுதான். பகைவனின் வளர்ப்பு மகள் இந்திராவின் இளம் இதயத்தில் இம்மாபெரும் உருவம் எப்படி அன்புருவமாக இடம் பெற்றது என்று அதிசயம் உண்டாகிறது!

இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு இன்னொரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

ஒரு சிறந்த ஹாஸ்ய நடிகர், ஒரு நாடகத்தில் ஒரு குணசித்திர நடிகரின் பாகத்தை ஏற்றுப் பிரமாதமாக நடித்தார். தூக்குத் தண்டனையடைந்த மகனைக் கட்டிக் கொண்டு கண்ணீர் உகுத்து, உணர்ச்சி பரவசமாகிக் கதறிக் கதறி அழுதார். ரஸிகப் பெருமக்கள் கரகோஷம் செய்து, சிரித்து ரஸித்தனர். ஹாஸ்ய நடிகரின் ஹாஸ்ய நடிப்பைக் கண்டு சிரித்துப் பழகி விட்ட மகாஜனங்களால் அவரது சோக நடிப்பைக் கண்டு பரவசமாகிவிட முடியவில்லை. அதே கதிதான் பாலையாவுக்கு இந்தப் படத்தில் ஏற்பட்டிருக்கிறது.

ஹோட்டலில் சாப்பிடும் 'மிக்ஸர்' எப்படியிருந்தாலும் அதில் இங்கும் அங்கும் காணப்படும் முந்திரிப்பருப்பு நம்மைக் கை விட்டு விடாது; தனது இணையற்ற ருசியினால் நம்மைக் கவர்ந்துவிடும்.

அதே மாதிரிதான் பத்மினியும். உருப்படாத படமாயிருந்தாலும், அவரது கவர்ச்சி தரும் தோற்றமும், பேசும் விழிகளும் சாகஸப் பார்வையும், சாமர்த்தியப் பேச்சும் அடியோடு சோடை போய் விடுவதில்லை. ஆனால் இந்தப் படத்தில் நிலைமை மாறி விட்டது. பகைவன் மகள் இந்திராவாக வந்து பாலையாவோடு அவர் புரியும் காதலும் பரிவுப் பேச்சும் எடுபடவில்லை. கதாநாயகனாக வேறு ஒரு இளைஞர் வந்திருந்தால் இருவருமே சோபித்திருப்பார்கள்.



பத்மினிக்கு ஒரு வார்த்தை. "காலம் மாறிப் போச்சு" என்ற படத்தின் பிரசித்தி பெற்ற பாட்டான "ஏரு பூட்டிப் போவாயண்ணே" என்ற பாட்டுக்கு வஹிதா ரஹ்மான் பிடித்திருக்கும் அபிநயத்தை இந்தப் படத்தில் பத்மினியும் பிடித்து நடனமாடியிருக்கிறார். திரைப்பட உலகின் திலகமென விளங்கும் பத்மினி இம்மாதிரிக் காரியத்தால் தம் கீர்த்தியைக் களங்கப்படுத்திக் கொள்வானேன்!

நல்ல ஜாக்கெட்டுக்காக வாங்கிய வெல்வெட்டை, கைபோன போக்கில் வெட்டித் தள்ளிவிட்டது போல் இருக்கும் இந்தப் படம் ஓடா வரம் பெற்ற உத்தமமான படம்' இது வெறும் பேச்சு அல்ல, உண்மை!



நவ பாரத தரிசனம்

நவ பாரதத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சில புண்ணிய ஸ்தலங்களைப் பற்றி நேயர்களுக்குச் சொல்லப் போகிறேன்.

'என்ன! என்ன சொல்லப் போகிறீர்கள்! புண்ணிய ஸ்தலங்களைப் பற்றியா!' என்று ஆச்சரியப்படுகிறீர்கள் அல்லவா!

"ஆமாம்; புண்ணிய ஸ்தலங்கள் என்றால் பழைய காசி ராமேசுவரத்தைப் பற்றி அல்ல. இப்போது நிர்மாணமாகியுள்ள கோவில்களுக்கும் பழைய புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. நவ இந்தியாவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கோவில்களுக்கு ஸ்தூபிகள் இடையா. மூலக் கிரகம், உற்சவ விக்கிரகம், பிராகாரம், மூன் வாசல் கோபுரம் இதெல்லாம் ஒன்றும் இல்லை."

'என்ன ஐயா, புதிர் போடுவதுபோல் பேசுகிறீர்கள்!' என்கிறீர்களோ!

இதில் புதிர் எதுவும் இல்லை. பாரதத் தவப் புதல்வரான ஜவாஹர்லால் நேரு பல மாதங்களுக்கு முன் குறிப்பிட்டதையே திருப்பிக் கூறுகிறேன். அணைக்கட்டுகளும், தொழிற் சாலைகளும், ஆராய்ச்சி ஸ்தாபனங்களும், மின்சார உற்பத்தி நிலையங்களும் வெறும் வேடிக்கை பார்க்கும் இடங்கள் அல்ல, புண்ணிய ஸ்தலங்களாகும் என்று நேருஜி கூறியதையே மீண்டும் குறிப்பிடுகிறேன். மேற்படி இடங்களை யெல்லாம் நான் நேரில் பார்த்த போது நேருஜி கூறியது நூற்றுக்கு நூறு சரி என்பது எனக்குப்புலனாயிற்று.



ஆம், சகலருக்குரிய திருக் கோவில்கள் மறுமையில் மக்கள் பேரின்பம் பெறுவதற்கு வழிகாட்டியாக இருக்கின்றன.

ஆனால், நவ பாரதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கோவில்களோ வெனில், இன்றையச் சந்ததிகள் மாத்திரமல்ல, கோடானு கோடி எதிர்காலச் சந்ததிகள் இம்மையில் சுபிட்ச வாழ்வு என்ற அரிய இலட்சியத்தை அடையும் படி செய்கின்றன.

உயிர்த் தாரை போன்ற வான மழை யின்றேல், இப் புவியில் வாழ வழியில்லை என்று தமிழ் மறை முனிவர் கூறியதையே, நேருஜி வேறு விதமாகக் குறிப்பிட்டார்.

கடவுள் அருளால், கதிரவன் வெப்பத்தால், கடல் நீர் ஆவியாகி கார்மேகமாகி, மழை பொழிகிறது. பற்பல இடங்களில் அந்த மழைத் தண்ணீர் யாருக்கும் பயன் படாமல் மீண்டும் கடலில் போய்ச் சேர்ந்து விடுகிறது. ஆனால், இப்போது இந்தியக் குடியரசு சர்க்கார் அந்த மழை நீரை, சேதமாகி விடாமல் தேக்கி, வேளாண்மை பெருகும்படியும் மக்கள் வாழ்வு மலரும்படியும் செய்திருக்கிறார்கள். கட்டாந் தரையாகவும் பாலை வனமாகவும் கண்களை உறுத்தி வந்த பிரதேசங்கள் இன்று பசுமை நிறைந்த சுபிட்ச பூமியாகத் திகழ்ந்து கண்களுக்கு விருந்தளிக்கின்றன.

இருள் சூழ்ந்திருந்த ஆயிரக்கணக்கான ஏழைக் கிராமவாசிகளின் வீடுகளில் மின்சார விளக்குகள் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன.


பத்து ரூபாய் வாடகையில் தோட்டம், குழாய், மின்சாரவிளக்கு முதலிய நவீன வசதிகளுடன் கூடிய அருமையான வீடுகளில் தொழிலாளர் குடும்பங்கள் நாகரிகமாக வசிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

சிறைகள், சுதந்திர ஆடவர்களும் பெண்களும் வசிக்கும் அரண்மனைகளைப்போல் காட்சியளிக்கின்றன!

இவைபோன்ற பற்பல அதிசயக் காட்சிகளையும் நேரில் பார்த்து, அவைகளைப் பற்றிப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும் என்ற நல் நோக்கத்துடன் இந்தியக் குடியரசு சர்க்கார் பல ராஜ்யங்களி லிருந்தும் பல பாஷைப் பத்திரிகைப் பிரதிநிதிகளை டில்லிக்கு அழைத்திருந்தார்கள்.

அவ்வாறு அழைக்கப்பட்டிருந்த பதினாறு பத்திரிகைப் பிரதிநிதிகள் சென்ற பிப்ரவரி மாதம் முதல் பகுதியிலிருந்து





24-ந் தேதி வரையில் சுமார் பன்னிரண்டாயிரம் மைல் தூரம் பிரயாணம் செய்தார்கள். உத்தரப் பிரதேசம், பீஹார், ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம், அஸ்ஸாம் முதலிய பல ராஜ்யங்களிலும் சர்க்கார் நிறைவேற்றியுள்ள அரும் பெரும் சாதனைகளைக் கண்டு களிக்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

எங்களது நீண்ட தூரப் பிரயாணம் அலுப்புத் தட்டாமல் இருப்பதற்காக அதிகாரிகள் விசேஷ வசதிகளைச் செய்திருந்தார்கள்.

ஸ்விட்ஜர்லாந்திலிருந்து வந்திருந்த விசேஷ முதல் வகுப்பு ரயில் வண்டி ஒன்றை எங்கள் வசம் ஒப்புவித்திருந்தார்கள். ஸ்ரீ புல்கானின், ஸ்ரீ குருஷ்சேவ் முதலிய வெளிநாட்டுத் தலைவர்களின் யாத்திரைக்காகப் பலவித விசேஷ வசதிகளுடன் தயாரிக்கப்பட்ட சொகுசான பஸ், அழகிய மோட்டார்ப் படகு, படுபள்ளத்திலும் மேடுகளிலும் அனாயாசமாகச் செல்லும் ஜீப் மோட்டார் வண்டிகள், ஆகாய விமானங்கள், பயங்கரமான அடர்ந்த காடுகளைக் கிழித்துக் கொண்டு செல்லும் மலை போன்ற யானைகள், முதலியவை அந்தந்த இடத்துக்கு ஏற்றவாறு எங்கள் யாத்திரைக்கு இன்றியமையாத வாகனங்களாக இருந்தன.

* *

மேற்படி யாத்திரையின்போது ஆங்காங்கு இன்ஜினீயரிங் கலையிலும், விவசாயத் துறையிலும், வீடு நிர்மாணத் திட்டங்களிலும், மற்றும் பல்வேறு நவீன அற்புதத் தொழில் துறைகளிலும் இணையற்று விளங்கும் இந்திய நிபுணர்கள் சுதந்திர இந்தியாவில் நிறைவேற்றியுள்ள சாதனைகளை நேரில் கண்டு பிரமிப்பும் வியப்பும் அடைந்தேன்.

அவற்றையெல்லாம் பார்த்த போது, எனக்கு உலகில் சுதந்திரம் பெற்ற பல்வேறு நாடுகளின் ஆரம்ப காலச் சம்பவங்கள் நினைவுக்கு வந்தன.

இன்று உலக முன்னணியில் நிற்கும் அமெரிக்கா சுதந்திரம் பெற்ற ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகுதான் கைத்தொழில் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த முடிந்தது.

சுதந்திரம் அடைந்த முப்பது வருஷங்களுக்குப் பின்தான் ருஷ்யா கைத்தொழில்களில் ஆக்கம் பெறலாயிற்று.

இங்கிலாந்தில் சுதந்திரம் தோன்றிய பல நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் சுதந்திரப் புரட்சியும் யந்திர சகாப்தமும் ஆரம்பமாயின!

ஐரோப்பாவில் சரித்திரம் கண்டிராத மத வெறியும் மதப் போரும் தாண்டவமாடிய போது, ஏராளமானவர்கள் தங்கள் வீடு வாசல்களைத் துறந்து, இடம் பெயர்ந்து, இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்தனர். அப்போது பதினாயிரக்கணக்கான தொழில் நிபுணர்கள் நெதர்லண்ட்ஸிலிருந்து இங்கிலாந்துக்கு ஓட நேர்ந்தது. அவ்விதம் தங்கள் நாட்டை விட்டு ஓடிய நிபுணர்கள்தான் இ லாந்தின் நெசவுத் தொழிலுக்கு அஸ்திவாரம் அமைத்தார்கள். அவர்கள் இட்ட அஸ்திவாரம் பிறகு இங்கிலாந்து துணி உற்பத்தியில் மகோன்னத



தசையை அடைய ஹேதுவாயிற்று என்பது சரித்திரம் கண்ட உண்மை.

மதப் போருக்குப் பயந்து, பிரான்ஸிலிருந்து ஓடிய தொழில் நிபுணர்கள்தான் பிரிட்டிஷா ருக்குப் பட்டு நெசவுத் தொழிலைக் கற்றுக் கொடுத்தார்கள் என்றும் சரித்திரம் கூறுகிறது.

தொழில் துறையில் அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன் போன்ற மாபெரும் வல்லரசு களின் கதையே அப்படியெனில், மற்ற நாடுகள் கைத்தொழில்களில் முன்னேற்றம் அடைய எத்தனை எத்தனை ஆண்டுகளாயின என்பதைச் சொல்லவா வேண்டும்!

எனவே, உலக வல்லரசுகளுடன் ஒப்பிடும் போது, தொழில் துறைகளில் இந்தியாவின் அபிவிருத்தி அதிசயிக்கத் தக்கதல்லவா! எங்க ளுடைய யாத்திரையில் நானும் மற்ற நண்பர் களும் கண்ட காட்சிகள், சுதந்திரம் பெற்ற எட்டு ஆண்டுகளுக்குள் பாரத நாட்டின் எதிர் கால சுபிட்சத்துக்கு இன்றியமையாத அஸ்தி வாரம் அமைத்துள்ள தொழில் நிபுணர்களுக் கும் உழைப்பாளிகளுக்கும் இந்தியா என் றென்றும் கடமைப் பட்டிருக்கிறது என்று பறைசாற்றுவதுபோல் இருந்தன!

* * *

எங்களுடைய பிரயாணம் புது டில்லியி லிருந்து ஆரம்பமாயிற்று. எங்களுடன், இந்திய சர்க்கார் பொதுஜனத் தொடர்பு அதிகாரி ஸ்ரீ கமல குமாரும் அவரது சிப்பந்திகள் இரு வரும் வந்தனர்.

ஸ்ரீ கமல குமார் ஏழு ஆண்டுகள் வரையில் புது டில்லியில் ஐக்கிய நாடுகள் சபை விளம்பர இலாகா உதவி டைரக்டராக இருந்தவர். சென்ற மகா யுத்தத்துக்கு முன்பு இருந்த சர்வ தேச சங்கத்திலும் ஐ. நா. சபையிலும் இருபத்திரண்டு ஆண்டுகள் வரையில் அரிய தொண்டு ஆற்றியவர். சுதந்திர பாரதத்தின் உதவிப் பிரதம மந்திரியாக இருந்த பாரதத் தவப் புதல்வர் சர்தார் பட்டேல் அமரரான தினத்தன்று, மேற்படி விளம்பர இலாகா டைரக்டர் விருந்துபசாரம் அளித்ததை வன் மையாகக் கண்டித்து ஆயிரக்கணக்கான சம்ப ளத்தையும் உதவி டைரக்டர் பதவியையும் உதறித் தள்ளி விட்டு வெளியே வந்த தன் மான உணர்ச்சியுள்ள வீரர்.

பல ஆண்டுகள் சர்வதேச ராஜ தந்திரிகளுடன் பழகிய தன் காரணமாக ஸ்ரீ கமல குமாரிடம் விசால உள்ளம், பரந்த நோக்கம், கூரிய புத்தி முதலிய சிறந்த அம்சங்களைக் காண முடிந்தது.

புதுடில்லியிலிருந்து புறப் பட்ட நாங்கள், அங்கிருந்து சுமார் நூற்று அறுபது மைல் தூரமுள்ள பரீலி போய்ச் சேர்ந்தோம். பரீலிஸ்டேஷனில் எங்களை அழைத்துச் செல்லு வதற்காக ஒரு பஸ் வந்து நின்றது. அந்த பஸ்ஸைப் பார்த்ததும் என் கண்களையே நம்ப முடியவில்லை. உள்ளே விமானங்களில் இருப்பது போல் மெத்தைகளுடன் கூடிய தனித்தனி நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அதில் தண்ணீர்க் கூஜாய், நிலைக் கண்ணாடி முதலியவைகளும் இருந்தன. அவ்வளவு வசதி களுடன் கூடிய பஸ்ஸை அதற்கு முன் எங்களில் எவருமே பார்த்ததில்லை. அந்தச் சொகுசான பஸ்ஸில்தான் ருஷ்யத் தலைவர் களும் அவர்களுடைய கோஷ்டியினரும் ஆக்ரா முதலிய இடங்களுக்குச் சென்றார்களாம்!

இச் சந்தர்ப்பத்தில் பரீலி நகரை வாசக நேயர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண் டியது என் கடமையாகும்.

பாரத நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் சிறிய நகரமாக இருந்த பரீலியின் ஜனத் தொகை இப்போது மூன்று மடங்கு அதிகமாக, அதாவது மூன்று லட்சமாக உயர்ந்திருக்கிறது.

அங்கு சிறந்த கலாசாலை இருப்பதுடன், சர்க் கரைத் தொழிற்சாலைகள், தீக்குச்சித் தொழிற் சாலை, கத்தக் காம்புத் தொழிற்சாலை, கற் பூரத் தைலம், குங்கிலியம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை முதலிய பல்வேறு சிறந்த தொழிற்சாலைகள் இருக்கின்றன.

இவற்றைத் தவிர மரச் சாமான்கள், கம் பளங்கள், சரிகை வேலைகளுக்கும் பரீலி பெயர் பெற்ற இடமாகும்.

சென்ற நூறு வருஷங்களாகப் பரீலியில் பைத்தியக்கார ஆஸ்பத்திரியும் இருந்து வரு கிறது. சித்த சுவாதீனம் இழந்த துர்ப்பாக்கிய சாலிகளுக்குச் சிகிச்சை செய்வதற்கான சிறந்த நவீன முறைகள் இந்தியாவிலேயே அங்குதான் கையாளப்படுகின்றன.

பரீலி நகரில் உத்தரப் பிரதேசத்தின் இரா ணுவத் தலைமை ஸ்தாபனமும் அமைக்கப்பட் டிருக்கிறது.

நவ பாரதத்தில் இவ்வளவு பெருமையுடன் விளங்கும் பரீலி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ரோஹில்லா போர்களுக்கும், 1857-ல் நடந்த முதலாவது சுதந்திர யுத்தத் துக்கும் கேந்திர ஸ்தானமாக விளங்கிய புகழும் பரீலி நகருக்கு உண்டு!



ஸ்ரீ கமல குமார்


காலை ஆகாரத்துக்குப் பிறகு மேற்படி பஸ்ஸில் பரீலி யிலிருந்து இஸாத் நகருக்குப் புறப்பட்டுச் சென்றோம். இஸாத்நகரில்தான் உலகப் பிர சித்தி பெற்ற மிருக வைத்திய ஆராய்ச்சி நிலையம் அமைக்கப் பட்டிருக்கிறது.

அதைப் போன்ற ஆராய்ச்சி நிலையங்கள் உலகிலேயே மூன்றுதான் இருக்கின்றன. ஒன்று அமெரிக்காவிலும், மற் றொன்று இங்கிலாந்திலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இஸாத் நகரில் உள்ள மூன்றா வது நிலையத்தை நேரில் கண் டோம். இந்நிலையம் ஆசியாவி லேயே மிகச் சிறந்தது என்ற உண்மையை அறியும் எந்த

இந்தியரும் பெருமிதம் அடையாமல் இருக்க முடியாது.

அது 1889-ம் ஆண்டிலே புனாவில் ஆரம்பிக்கப்பட்ட மிகப் பழைய ஆராய்ச்சிநிலையம் ஆகும்.



பாரத நாட்டின் கபிட்சத்துக்கு இன்றியமையாதது கால்நடைச் செல்வம் அல்லவா! அந்தச் செல்வத்தைக் கொள்ளை கொண்டு போக ஏராளமான திருடர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திருடர்களிடமிருந்து கால்நடைச் செல்வத்தைக் காப்பதே அந்த இஸாத் நகர் மிருக வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் நோக்கமாகும்.

குறிப்பாக, இந்தியாவில் ஆடுகள், மாடுகள் முதலிய கால்நடைகளுக்கு யமனாக இருந்து வருபவை பூச்சி நோய், கோமாரி போன்ற கொடிய தொத்து நோய்கள்தான். அந்த நோய்களிலிருந்து கால்நடைச் செல்வத்துக்கு அழிவு ஏற்படாமல் பாதுகாப்பதற்கான ஔஷதங்களைக் கண்டு பிடிக்கவே புனாவில் ஆராய்ச்சி நிலையம் ஏற்பட்டது. எனினும் புனாவில் சீதோஷ்ண நிலை ஔஷத ஆராய்ச்சிக்கு உற்றதாக இராததால், அந்த நிலையத்தை 1893-ம் ஆண்டில் முக்தேசுவரம் என்ற நகருக்கு மாற்றினார்கள்.

முக்தேசுவரம் இமயமலைத் தொடரில் உள்ள குமான் என்னும் மலைப் பிரதேசத்தில், தரை மட்டத்திலிருந்து சுமார் 7,700 அடி உயரத்தில் இருக்கிறது.

முக்தேசுவரத்தில் ஒருபோதும் 87 டிகிரிக்கு மேல் உஷ்ணம் இருப்பதில்லை. அக்காலத்தில் குளிர் யந்திரம் கண்டு பிடிக்கப் படாததால், உஷ்ணமான பிரதேசங்களில் அம்மைப் பால், குத்தூசி மருந்துகள் முதலியவை அதிக நாள் கெடாமல் இருப்பதில்லை. அதனால்தான் புனாவில் ஏற்பட்ட ஆராய்ச்சி நிலையத்தைக் குளிர்ந்த மலைப்பிரதேசமான முக்தேசுவரத்துக்கு மாற்றினார்கள்.

எனினும் ஏராளமான மருந்துகள் உற்பத்திக்குச் சமவெளிப் பிரதேசமே ஏற்றதென்று தோன்றியதால், 1922-ம் வருஷம் இஸாத் நகரிலும் ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்தார்கள். அந்த ஸ்தாபனத்திலிருந்து உற்பத்தியாகும் கால்நடை நோய்களைத் தீர்ப்பதற்குரிய அம்மைப் பால்கள், குத்தூசி மருந்துகள் முதலியவை பாரத நாட்டில் உள்ள கால்நடைகளுக்கு உபயோகப்படுவதுடன், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், எகிப்து, இலங்கை, சயாம், மலேயா, சீனா முதலிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனவே, இஸாத் நகர் ஆராய்ச்சி நிலையத்தால் இரண்டு விதத்தில் நாட்டுக்கு மகத்தான பலன்கள் ஏற்பட்டு வருகின்றன.

1. அங்கு உற்பத்தியாகும் மருந்துகளால் கொடிய நோய்வாய்ப்பட்ட கால்நடைகள் இறந்து விடாமல் காப்பாற்றப் படுகின்றன.

2. உபரி மருந்துகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் நம் நாட்டின் மதிப்பு உயருவதுடன், நமக்கு வருமானமும் கிடைக்கிறது.

* * *

உலகிலேயே மிருகங்களிடமிருந்து அம்மைப் பாலும் குத்தூசி மருந்துகளும் உற்பத்தி செய்யும் ஒரே ஸ்தாபனம் இஸாத் நகர் மிருக வைத்திய ஆராய்ச்சி நிலையம்தான். இந்த உண்மையை அறிந்தபோது, நாங்கள் அத் துறையில் நமது நாட்டின் முன்னேற்றத்தைக் குறித்துப் பெருமிதம் அடைந்தோம்.

பல வருஷங்களாயினும் மருந்துகள் கெடாமல் வைத்திருப்பதற்கான அபூர்வ முறையைக் கண்டு பிடித்திருப்பதும் இஸாத் நகர் ஆராய்ச்சி நிபுணர்களின் சாதனைகளில் ஒன்றாகும். ஏற்கனவே அந்த மருந்துகளைச் சில நாட்களுக்கு மேல் கெடாமல் வைத்திருக்க முடியாது. ஆனால், இப்போதோ மேற்படி ஆராய்ச்சியின் பலனாக அம்மருந்துகளைப் பல ஆண்டுகள் கெடாமல் வைத்திருக்கும்படியான வசதி ஏற்பட் டிருக்கிறது.

எனவே, இஸாத் நகர் ஆராய்ச்சி நிலைய அபிவிருத்திக்காக இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்தில் சர்க்கார் ஒரு கோடி முப்பது லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருப்பதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

அந்த நிலையத்தில் செயற்கை கருத்தரித்தல் முறையின் மூலம் உயர்ந்த வகை மாடுகளை உற்பத்தி செய்கிறார்கள். கோழிகள், குதிரைகள் ஆடுகள் முதலியவைகளைச் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்கான வழிகளையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். அங்கிருந்து வருஷந்தோறும் லட்சக்கணக்கான சிறந்த கோழி முட்டைகள் இந்தியாவெங்கும் அனுப்பப் படுகின்றன. நாடெங்கும் அம்முறைகளை உபயோகித்துக் கால்நடைச் செல்வத்தை அபிவிருத்தி செய்வதற்காக அங்கு பட்டதாரிகள் பயிற்சிபெறவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

சில கொடிய நோய்கள் ஆடுமாடுகளின் தோல்களை அரித்து, அவை பிரயோஜனப் படாமல் போகும்படி செய்து விடுகின்றன. அதனால் நாட்டுக்கு எவ்வளவு நஷ்டம் உண்டாகிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது திகைக்காமல் இருக்க முடியாது.

உதாரணமாக, உலகிலே வெளிநாடுகளுக்குத் தோல் ஏற்றுமதி செய்வதில் இந்தியாதான் முதல் ஸ்தானம் வகிக்கிறது. ஆனால், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் தோல்கள் மிகவும் மட்டரகமாக இருப்பதால் சாதாரணமாக நூறு ரூபாய் பெறுமானமுள்ள தோல்களை வெளிநாட்டினர் பதினைந்து ரூபாய் கொடுத்து வாங்குவதற்குக் கூடத் தயங்குகின்றனர்! இந்தியா வருஷா வருஷம் ஐம்பது கோடி ரூபாய் பெறுமானமுள்ள தோல்களை ஏற்றுமதி செய்கின்றது. இதிலிருந்து நம் நாட்டுக்கு ஏற்படும் பெரும் நஷ்டத்தை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். (தொடரும்)



கூந்தல் மற்றும் மூளை அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவு கிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது. ஞாபகசக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோ ருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில் ரூ. 3-8-0
சிறிய பாட்டில் ரூ. 2-0-0

எங்கும் கிடைக்கும்




ராம்தீர்த் யோகாஷ்ரமம்
பம்பாய்-14. (C. Rly)

ஆரோக்கியமாகவும், நீடமாகவும் இருக்க யோகாசனங்களை விளக்கும் எங்கள் அழகான ஆசனப் படத்தித்து எழுதுங்கள். தபால் செலவு உள்பட ரூ. 1-14-0, மணியார்டர் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். வீட்டிலேயே ஆசனங்களை சுலபமாகப் பழகலாம்

சென்னை டெப்போ:
4/441. தங்கசாலைத் தெரு. சென்னை

குளிர்ந்த காற்று



HINDUSTAN

ஹிந்துஸ்தான் விசிறி

அக்மி மானுபாக்சரிங் கம்பெனி லிட., அன்டாப் ஹில், வடலா, பம்பாய்-31 (ஒரு வால்சந்த் க்ரூப் ஸ்தாபனம்)

சென்னை, ஆந்திரா ஏஜன்டுகள்:
மெஸர்ஸ். போம்ரா பிரதர்ஸ்
போம்ரா ஹவுஸ், தங்கசாலை தெரு, சென்னை

பாங்க் ஆப் மதுரை லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1943)

தலைமை ஆபீஸ்: **மதுரை**

கிளைகள்:

புதுக்கோட்டை, சேலம், கோயமுத்தூர்

நீங்கள் எங்கள் பாங்கில் "சேவிங்ஸ் கணக்கு" திறப்பதினால் உண்டாகும் நான்கு பெரும் நன்மைகள்.

1. ரூ. 5/- முதல் மேற்படி கணக்கில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
2. தினசரி இருப்புக்கு 3% வட்டி கிடைக்கிறது.
3. பாங்க் வழங்கும் "செக்குகள்" மூலம் பணம் திரும்பப் பெறலாம்.
4. முன் அறிவிப்பு எதுவுமின்றி வாரம் ஒன்றுக்கு அதிக பக்ஷம் ரூ. 1000/- கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

சுறுசுறுப்பும் மரியாதையும் நிறைந்த சேவை

பி. எஸ். விஸ்வநாதன்
காரியதரிசி

ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

29

நவஜீவன் பத்திரிகையின் வாசகர் ஒருவர் கேட்டார்: ''கடவுளை வணங்கு என்று அடிக்கடி சொல்லுகிறீர்கள். பிரார்த்தனை செலுத்து என்று அடிக்கடி சொல்லி வருகிறீர்கள். ஆனால் எந்த முறையில் எந்தப் பெயரில் கடவுளை வைத்துப் பிரார்த்தனை செய்வது என்பதை நீங்கள் சொல்லுவதில்லை. தயவுசெய்து கொஞ்சம் விளக்குங்கள்.''

இந்தக் கேள்விக்குப் பதிலாக எழுதுகிறேன்.

கடவுளை வழிபடுவது என்றால் ஆண்டவனை ஸ்தோத்திரம் செய்வதே. இதனால்தான் வழிபாட்டுக்குத் 'துதி' என்று பெயர். 'துதி' என்கிற சொல் ஸ்துதி என்கிற வடமொழியின் திரிபு. அதன் பொருள் ஸ்தோத்திரம் செய்வது அல்லது புகழ்வது. ஆண்டவனைப் போல் வேறு யார் புகழுக்கு உரியவர்? ஆண்டவனைத் துதிக்கும்போது நம்முடைய துன்பத்தையும் குறைகளையும் குற்றங்களையும் சொல்லி முறையிடுகிறோம்.

ஆண்டவனுக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு. அதாவது அவன் நாமமே இல்லாதவன். நமக்கு இஷ்டப்பட்ட பெயரை வைத்துப் பகவானை வணங்கலாம், அல்லது பிரார்த்திக்கலாம். சிலர் அவனை ராமன் என்று அழைக்கிறார்கள். சிலர் அவனைக் கிருஷ்ணன் என்கிறார்கள். வேறு சிலர் ரஹீம் என்கிறார்கள். ஸ்வாமி என்கிறார்கள், ஈஸ்வரன் என்கிறார்கள். GOD என்கிறார்கள். எந்தப் பெயர் வைத்தாலும் ஒரு சக்தியைத்தான் வணங்குகிறார்கள். உணவு வேறுபாட்டைப் போல் பெயர் வேறுபாடுகளும். எல்லா உணவும் எல்லாருக்கும் ஒத்துக்கொள்ளாது. அப்படியே நாம பேதங்களும். அவரவருடைய மனோபாவத்துக்கும் பயிற்சிக்கும் பொருந்தியவாறு பெயர் வைத்து வழிபடுவார்கள். அனைவருடைய உள்ளத்திலும் அவன் அந்தராத்மாவாக இருக்கிறபடியாலும், அனைத்தையும் அறிந்தவனானபடியாலும், எல்லையற்ற உணர்வு உடையவனானபடியாலும் அவரவர்கள் மனத்தில் உள்ள அந்தரங்க பாவங்களை அறிந்து அவரவர்களுடைய தகுதிக்கு இசைய எல்லாம் தருவான்.

வாயினால் அல்ல, பிரார்த்தனை செய்வதும் வழிபடுவதும். உள்ளத்தைக் கொண்டு பூஜை செலுத்த வேண்டும். வாயில்லா ஊமையும் ஆண்டவனுக்குப் பிரார்த்தனை செலுத்துவான். கொன்னல் பேச்சுக்காரனும் படிப்பு இல்லாதவனும் சுத்த மடையனும் எல்லாருமே ஆண்டவனை வழிபடலாம். தேன் கசியும் மொழியை ஆள்பவருங்கூட உள்ளத்தில் விஷத்தை மறைத்து வைத்திருப்பார் அல்லவோ? அத்தகையோருடைய பிரார்த்தனை ஆண்டவனைப் போய்ச் சேராது.

கடவுளைப் பூஜைசெய்யப் புகுவதற்கு முன், உள்ளத்தைத் துப்புரவாக்கிக் கொள்ள வேண்டும். ராமனுடைய நாமத்தை உச்சரித்து உச்சரித்தா ஹனுமான் பூஜைசெய்தான்? தன் உள்ளத்தில் அல்லவோ ராமனை வைத்து விட்டான்? அப்படி வைத்து விட்டதனால் அல்லவோ எல்லையற்ற சக்தியை ஹனுமான் அடைந்தான். அந்தச் சக்தியைக் கொண்டல்லவோ கடலைத் தாண்டினான், மலையைத் தூக்கினான். நாமும் அத்தகைய பக்தியைக் கொண்டு அலைகடல் சம்சாரத்தில் படகை ஓட்டலாம். பக்தியிருந்தால் மலையும் நகரும், கடலையும் நாம் தாண்ட முடியும்.

பக்தி என்றால் என்ன? அந்தரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் ஆண்டவனைக் கண் திறந்து உணர்வதுதான். இதைச் செய்து வெற்றி பெற்றவனுக்கு வேறு என்ன வேண்

> திருக்குறளுக்குச் சமமாகிய நூல் மக்களாய்ப் பிறந்தோர் பேசும் வேறு எம்மொழியிலும் காண முடியாது.
>
> — ரெவரண்டு பெர்சிவல்

டும். ஒன்றும் வேண்டியதில்லை. உடல் முழுதும் நோய்பட்டு அழுகிப் போயிருந்தாலும் அவன் ஆன்மா பூரண ஆரோக்கிய நிலையிலேயே சுத்தமாக இருக்கும். ஆத்ம சம்பத்தை அநுபவிப்பான்.

இந்த அளவுக்கு உள்ளத் துப்புரவு எப்படி அடைவது என்பது கேள்வி. பேசும் மொழியைச் சொல்லித் தரலாம். உள்ளத்தின் பாஷையை யார் சொல்லித்தர முடியும்? பக்தர்களுக்குத்தான் அந்த பாஷை தெரியும். அவர்கள்தான் சொல்லித்தர முடியும். பகவத் கீதையில் மூன்று இடத்தில் யார் உண்மை பக்தன் என்பதைக் கண்ணன் விளக்கியிருக்கிறான். பொதுவாக கீதை முழுவதிலுமே பக்தனைப் பற்றிச் சொல்லப்படுகிறது. பக்தனுடைய இலக்கணத்தைப் படித்து நாம் ஒன்றும் அடைய முடியாது. இந்த உலகத்தில் அந்த இலக்கணத்தில் அடங்கிய பக்தர்கள் வெகு சிலர். இதனாலேதான் நான் ஒரு எளிய முறையைச் சொல்லுகிறேன்—பிறருக்குச் சேவை செய்வதே வழிபாடு என்று. மக்களுக்குச் சேவை செய்தோமானால் நம்முடைய உள்ளத்தைத் தேடிக் கொண்டு ஆண்டவன் வந்து சேருவான். நல்ல இருப்பிடத்தை அவனே தேடிக்கொண்டு வருவான். ஆனபடியாலேதான் தெய்வத்தைக் கண்ட ஞானி நரசிம்ம மேத்தர் பாடினார், பிறர் துக்கத்தைக் கண்டு கரைந்து அழுகிறவனே உண்மை வைஷ்ணவன் என்று. அபூபென் ஆதமைப் பற்றியும் இதையே சொல்லுவார்கள். மக்களுக்கு அவன் சேவை செய்தான். ஆனபடியால் அவன் பெயர் ஆண்டவனுடைய புனிதப் பட்டியலில் முதல் இடம் பெற்றது. மக்களுக்குச் சேவை செய்தோமானால் ஆண்டவனுக்கே சேவை செய்ததாகும்.

யார் தீனர்கள்? யாருக்கு நாம் சேவை செய்ய வேண்டும்? வறுமையில் கஷ்டப்படுகிறவர்களுக்கு, திக்கற்றவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அப்படிச் செய்கிறவர்கள்தான் பக்தர்கள் ஆவார்கள். உடலும் உள்ளமும் செலுத்திச் சேவை செய்ய வேண்டும்.

பிறப்பினால் 'தீட்டு' என்று சிலரை ஒதுக்கி வைப்பவர்கள் எப்படி உடலைக் கொண்டு அவர்களுக்குச் சேவை செய்ய முடியும்? முடியாது. ஏழைகளுக்கு என்று நூல் நூற்கப் பிரியப்படாதவர்கள் ராட்டையைச் சுற்றுவதற்கு உடல் வலியாதவர்கள், நொண்டிச் சாக்குச் சொல்கிறவர்கள் இவர்களுக்குச் சேவை என்றால் பொருள் விளங்கவில்லை என்றே சொல்ல வேண்டும். ஆரோக்கியமாய் இருக்கும் ஒரு ஏழைக்குப் பிச்சை போடுவது தவறாகும். உழைத்து உணவடையச் செய்ய வேண்டும். பிச்சை தருவது அவனைத் தாழ்த்தும். அத்தகையோன் எதிரில் நாம் ராட்டையைச் சுழற்றி நூல் நூற்று அவனையும் அப்படியே செய் என்று வழி காட்டினோமானால் நாம் ஆண்டவனுக்கு நல்ல முறையில் கைங்கரியம் செய்தவர்கள் ஆவோம். இலையோ பூவோ ஒரு அற்பப் பழமோ பக்தியுடன் தந்தால் அவன் என் தாசன் ஆவான் என்று கண்ணன் கீதையில் சொல்லியிருக்கிறான். ஏழைகள் குடியிருக்கும் குச்சு வீடுகளிலல்லவோ ஆண்டவன் பாதம் வைத்து அருள்கிறான். அந்த ஏழைகளுக்காக நாம் ராட்டையைச் சுழற்றினால் அதுவே பெரிய பூஜையும் வேள்வியும் ஆகும்.

ஆகவே, எந்தப் பெயரை வைத்தும் பிரார்த்தனை செய்யலாம். பக்தி நிறைந்த உள்ளம் வேண்டும். உள்ளத்தில் பக்தியை நிறைப்பதற்கு வழி சேவை. இந்த யுகத்தில் தீண்டாதார்களுக்கு உள்ளத்தில் அன்போடு சேவை செய்யும் வைஷ்ணவர்களும் சைவர்களும், உண்மை வைஷ்ணவர்களும் சைவர்களும் ஆவார்கள். எந்த சமயத்தினர் ஆயினும், எந்தச் சம்பிரதாயத்தினர் ஆயினும் பக்தியோடும் அன்போடும் ஏழைகளுக்காக ராட்டையில் நூற்பவர்கள் ஆண்டவனுக்குப் பூஜை செலுத்துகிறவர் ஆவார்கள்.

யங் இந்தியா 24—9—'25



வேர்க்குரு விலிருந்து
துரிதமாக, நீடித்த நிவாரணம் பெற
சுலபமான இரு-வழி சிகிச்சை
1
ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் சோப் தேய்த்து ஸ்நானம் செய்வதால், அமிலங்களால் அடைபட்டு வேதனையூட்டும் சருமத் துவாரங்களுக்கு நிவாரணம் ஏற்படுகிறது. அதன் ஔஷத சக்தி வாய்ந்த நுரை உங்கள் சருமத்தினூடே எளிதில் புகுந்து, எரிச்சலை அதன் ஆரம்ப ஸ்தானத்திலேயே நீக்குகிறது.
2
ஸ்நானத்திற்குப் பின் உங்கள் சருமத்தை குளுமையுடனும், சுகமாயும் வைக்க ஜான்ஸன் ப்ரிக்லி ஹீட் பவுடர் உபயோகியுங்கள். இதமளிக்கும் இந்த கிருமிநாசினி பவுடர் வேர்க்குரு உபாதையிலிருந்து நீடித்த நிவாரணமளிக்கிறது.
Johnson's PRICKLY HEAT SOAP
Cooling Soothing & Refreshing
PRICKLY HEAT POWDER
Johnson's
ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் சோப் மற்றும் பவுடர்



அத்தியாயம் 20

இடி விழுந்தது

சாமிலிங்கம் சற்று நிறுத்தினார். தம் கண்களைத் துடைத்துக் கொண்டு பிறகு வானத்தைப் பார்த்துக் கொண்டே தொடர்ந்து கூறினார்.

"நான் அதன் பிறகுதான் உன்னை வந்து ஈசுவரமூர்த்தியிடமிருந்து காப்பாற்றினேன். பணமும் அனுப்பி வந்தேன். அதன் பிறகு எனக்கு இந்தப் பலாத்காரச் செயல்கள் பிடிக்காமல் போய் விட்டன. வீரமுத்து தூக்கிலிடப்பட்ட பிறகு எல்லாருக்கும் உற்சாகம் குன்றி விட்டது. பாலத்தை உடைப்பதும், ரயிலைக் கவிழ்ப்பதும் ஏழை மக்களையே பாதிக்கிறதென்று நான் உணர்ந்த போது என்னையே சபித்துக் கொண்டேன். நான் கடைசியாகச் சந்திரமணியைப் பார்த்து விட்டு வந்த பிறகு, போலீஸ் உபத்திரவம் வேறு அதிகரித்து விட்டதால் மலேயாவுக்குச் சென்று விட்டேன்.

பல வருஷங்கள் அங்கே திண்டாடிய பிறகு ஒருநாள் எனக்கு இந்துவையும், சந்திரமணியையும் பார்க்க வேண்டுமென்று தாங்க முடியாத வெறி பிடித்து விட்டது. சந்திரமணியை நான் விட்டு விட்டுச் சென்றதை நினைத்து மனம் நொந்து போனேன்.

நான் திரும்பி வரும்போது மனம் சங்கடப்பட்டுக் கொண்டே இருந்தது. ஒரே ஆவலாக நேரே குங்குமத்துறைக்கு வந்து சேர்ந்தேன். மாறு வேஷத்தில் வந்தேன். எனக்குத்தான் எப்பேர்ப்பட்ட பேரிடி விழுந்தது? அக்கம் பக்கத்தில் விசாரித்த போது சந்திரமணி இறந்து போய் இரண்டு நாட்கள் தான் ஆகியிருந்தன என்று தெரிய வந்தது. துயரம் தாங்க முடியாமல் இதே ஊமையன் கோட்டையில் வந்து உட்கார்ந்து விம்மி விம்மி அழுதேன்; கதறினேன். என்னைத் தேற்றுவார் யாரும் இல்லை.

பிறகு, இந்துவையாவது பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருந்தது. ஆனால் அவளிடம் என்னை அவளுடைய தந்தை என்று சொல்லிக் கொள்ள வெட்கமாக இருந்தது. அவளுக்கு என்ன தோன்றுமோ? நான் கொள்ளைக்

காரன் என்றெல்லாம் மனத்தில் எண்ணங்கள் ஏற்பட்டிருக்கலாம். என்னைப் பார்த்து அவள் வெறுப்புக் கொண்டு விட்டால் என்ன செய்வது என்று பயந்தேன். சந்திரமணி இருந்தபோது எனக்கு என் குழந்தையின் மீது பாத்தியதை இருந்தது. இப்போது திடீரென்று அந்தப் பந்தம் உடைந்து போய் விட்டது. அதுவரையில் தன்னைக் கவனிக்காமலேயே இருந்த கல் நெஞ்சன் என்று இந்துமதி என்னைப் பற்றி எண்ண மாட்டாளா?



மேலும் இந்துவுக்கு ஒரு குறையும் வராமல் புண்ணியவான் மந்திரமூர்த்தி பார்த்துக் கொள்ளும் போது எனக்கு என்ன கவலை என்று நினைத்தேன்.

இந்துவைத் தூரத்திலிருந்தாவது பார்த்து விட்டுப் போக வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருந்தது. ஆகவே மாறு வேஷத்தில் சுற்றினேன். ஒரு நாள் பாதிரித் தோட்டத்துக்கு இந்து போவதைப் பார்த்தேன். அதற்கு எதிர்ப் பக்கமாக வந்து அந்தச் சிவப்பு பங்களாவுக்குள் நுழைந்து மாடியில் ஒரு ஜன்னலைத் திறந்து வைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் நீயும் இந்துவும் பேசிக் கொண்டிருந்தீர்கள். எனக்கு நீ யாரென்பது அப்போது தெரியாதே. பிறகு உன்னைப் பற்றி அறிந்துகொள்ள முயற்சி செய்தேன். நீ தங்கபாண்டியனுக்கு நண்பன் என்றும், தங்கபாண்டியன் ரொம்ப நல்லவனாக இருக்கிறானென்றும் ஜமீன் ஆட்களிடமிருந்து தெரிந்து கொண்டேன். உன் பெயர் தெரிந்ததுமே நீ கந்தசாமியின் பிள்ளை தான் என்று ஊகித்தேன்.

என் மனத்துக்குச் சற்று ஆறுதல் உண்டாயிற்று. நீயும், தங்கபாண்டியனும் படிக்கும் கல்லூரிக்குச் சென்று உங்களைப் பற்றி விவரமாக விசாரித்தேன். நீ அதே ரங்கதுரைதான் என்பது ஊர்ஜிதமாயிற்று. அப்போது தான் நான் உண்மையிலேயே குதூகலமடைந்தேன்.

நான் திரும்பக் குங்குமத்துறைக்கு வந்தபோது, உனக்குச் சீமை செல்ல உத்தரவு வந்து விட்டதென்று கேள்விப் பட்டேன். நீ என்றைய தினத்தில் கிளம்புகிறாய் என்று தெரிந்து கொண்டதும், உன்னை எப்படியாவது சந்திக்க வேண்டுமென்று பாதிரித் தோட்டத்தில் வந்து காத்திருந்தேன். முதல் நாள் இந்துமதி வேலியருகில் நிற்பதைப் பார்த்தேன். உனக்காகத்தான் காத்திருக்கிறாள் என்றும், நீ வருவாயென்றும் ஊகித்தேன். ஆனால் நீ வரவில்லை.

மறுநாளும் பங்களாவின் மேல் மாடியில் ஏறி ஒளிந்து கொண்டிருந்தேன். இந்துமதியிடம் விடைபெற்றுச் செல்ல நீ வருவாயென்று நினைத்தேன்.

இருட்டிய பிறகு அரண்மனைப் பாதை வழியாக யாரோ வருவது தெரிந்தது. நீதான் என்று நினைத்தேன். ஆனால் அந்த உருவம் ஒரு வியக்கத்தக்க காரியம் செய்தது. தோட்டத்தைப் பெருக்கிக் குவித்திருந்த காய்ந்த இலைச் சருகுக் குப்பையின் மீது படுத்துக்கொண்டு, சருகுகளால் தன்னை நன்றாக மூடிக் கொண்டது. எனக்கு ஒரே வியப்பாகப் போயிற்று. ஒன்றும் விளங்கவில்லை.

ஐந்து நிமிஷங்களுக்குள் அதே பாதையில் வேறு யாரோ வந்தார். இது நிச்சயமாக நீதான் என்று நினைத்தேன். அந்த மனிதர் புன்னை மரத்தடியை அடைந்ததும் இந்து வந்தாள். எனக்கு ஏதோ விபரீதம் நடக்கப் போகிற

தென்று மாத்திரம் தெரிந்தது. என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டே இருக்கையில் நான் சிறிதும் எதிர்பாராத விஷயங்கள் நடந்து விட்டன.

நான் மாடியில் ஜன்னல் அருகில் நின்று கொண்டிருந்தேன். இறங்குவது என்றால் பின்பக்கம் சென்றுதான் இறங்க வேண்டும். நான் போய் விட்டால் அங்கு நடப்பதைப் பார்க்க முடியாதே என்று தயங்கினேன். அதே சமயத்திலே சருகுகளிலிருந்து அந்த உருவம் எழுந்தது. முன்னாலிருந்த உருவத்தைத் தாக்கியது.

என் இதயமே ஒரு கணம் ஓய்ந்து போய் விட்டது. உனக்குத்தான் ஆபத்து வந்து விட்டதென்று நினைத்தேன். அடுத்த கணம் புதிய உருவம் ஓடிற்று. இந்துமதியும் ஓடினாள். அதன் பிறகு நீயாக இருக்க முடியாதென்று தோன்றியது. ஓடுவது யாரென்று தெரிந்து கொள்ள விரும்பிப் பின் பக்கம் வந்து மாடியிலிருந்து குதித்தேன். அதற்குள் அந்த உருவம் எங்கே மறைந்ததென்று தெரியவில்லை. அடிபட்டது யாரென்று தெரிந்து கொள்ள விரும்பி அங்கே சென்று பார்த்தேன். சொக்கையா என்று தெரிந்ததும் ஆறுதலே உண்டாயிற்று. எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்து இந்து காப்பாற்றப் பட்டாளென்று தெரிந்து, காப்பாற்றிய மனிதனிடம் நன்றிகூட உண்டாயிற்று. அப்போது அங்கே யாரோ வருவது தெரியவே சட்டென்று மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டேன். சொக்கையாவின் அருகில் வந்து பார்த்ததும் அய்யாக்குட்டி என்று தெரிந்து வியப்படைந்தேன். அய்யாக்குட்டி வேகமாகப் போய் விட்டான். சொக்கையாவுக்கு உயிர் நிச்சயமாகப் போய் விட்டது என்று தெரிந்து விட்டது. ஆகவே அங்கே இருப்பதனால் ஆபத்து வரும் என்று நானும் வேகமாக ஓடிப் போய்விட்டேன்.

மறுநாள் ஊரே அல்லோலகல்லோலப் பட்டது. இந்த விவரங்கள் ஒன்றும் வெளி வராமலிருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டேன். அய்யாக்குட்டியைப் பற்றி ரொம்பக் கவலையாக இருந்தது. அவனைப்பற்றியும் பண்ணை ஆட்கள் மூலம் தெரிந்து கொண்டிருந்தேன். அவனால் இந்துவுக்கு ஏதாவது தீங்கு நேருமென்று தோன்றினால் அவனை மடக்கிப் பயமுறுத்துவதென்று தீர்மானித்திருந்தேன். அவன் அவ்வளவு தூரம் துணிய மாட்டானென்றும் நான் எதிர்பார்த்தேன்.

நான் அங்கே அதிக நாட்கள் இருக்க முடியவில்லை. சொக்கையாவின் கொலைக்குப் பிறகு எங்கே பார்த்தாலும் போலீஸார் சஞ்சரிக்க ஆரம்பித்தார்கள். ஜமையன் கோட்டைக்குக் கூட வந்து தேடினார்கள். ஆகவே நான் போக வேண்டியதாயிற்று. அய்யாக்குட்டியினால் இந்துவுக்கு எந்த அபாயமும் நேராது என்று எனக்குத் திடமாகத் தெரிந்த பிறகு புறப்பட்டேன். குங்குமத்துறையில் இருக்க எனக்கு இடமும் இல்லையல்லவா?

சுமார் ஒரு வருடம் கழித்து நான் திரும்பி வந்தபோது மந்திரமூர்த்திப் பண்ணையார் இறந்த விவரம் எனக்குத்



தெரிய வந்தது. இந்துவை அவர் யாரோ பத்மநாபன் என்ற வக்கீலிடம் ஒப்படைத்திருப்பதாகத் தெரிந்து கொண்டேன்.

குங்குமத்துறை குடியானத் தெருவில் தெரிந்து கொள்ள முடியாத விஷயமே கிடையாது. அங்கே இந்த அய்யாக்குட்டி இந்துவைத் தான் கல்யாணம்

செய்து கொள்ளப் போவதாகப் பேசிக் கொண்டிருனென்று தெரிய வந்தது. இதை அவன் குங்குமத்துறை ஜமீன் காரியஸ்தரிடம் சொல்லிக் கொண்டிருந்ததைத் தன் காதாலேயே கேட்டதாகக் கண்ணுசாமி சத்தியம் செய்தான். அவள் அதற்குச் சம்மதிக்கா விட்டால் அவளைப் பயமுறுத்தித் தன்னால் சம்மதிக்க வைக்க முடியுமென்றும் கூறினானாம். எனக்கு விஷயத்தை ஒருவாறு ஊகிக்க முடிந்தது. இந்து அவ்வளவு அவசரமாகப் பத்மநாபன் வீட்டுக்குச் சென்றுவிட்ட காரணமும் புரிந்தது.

என்னுடைய கோபத்தில் ஒருநாள் அவனுடைய சினிமாக் கொட்டகையை எரித்து விட்டேன். பிறகு அவனால் இந்துவுக்குக் கஷ்டம் ஏற்படக் கூடாதென்று ஒரு கடிதமும், நஷ்ட ஈடாகப் பணமும் கொடுத்தேன். நான் செய்தது வீண் போகவில்லை. பின்னால் அவன் நன்றியுடன் இந்துவுக்கு வேண்டிய உதவி செய்திருக்கிறான்'' என்று கூறி நிறுத்தினார் காசிலிங்கம்.

''பின்னே, இந்து அய்யாக்குட்டியின் மீது சந்தேகப் படுவதாக எழுதிக் கொடுத்திருக்கிறாளே. அப்போதே நான் நினைத்தேன், அது ராஜாராமாக இருக்க முடியாதென்று. அவருக்கு அவ்வளவு துணிவு கிடையாது! நிச்சயம் யாராக இருக்கலாமென்று ஊகித்தீர்கள்?''

''ஊகித்தேன் தம்பி. ஆனால் அதை நிரூபிக்க முடியாது. மேலும் உனக்கும் மனம் ரொம்பச் சங்கடப்படும்.''

''எப்படி யிருந்தாலும் அதைச் சொல்லி விடுங்கள்.''


காசிலிங்கம் சற்று யோசித்தார். ''தம்பி! அதைக் கூறுவது ரொம்ப அவசியமென்று தோன்றினால் பிறகு கூறுகிறேன். இப்போது அதைச் சொல்வதால் பயன் ஏதுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை'' என்று கூறினார். நான் அவர் யார்மீது சந்தேகப்படுகிறார் என்று ஊகிக்க முயன்றேன்.



காசிலிங்கம் எழுந்து அடுப்பைப் பற்ற வைத்தார். ''உன்னோடு பேசிக் கொண்டே இருந்ததில் சாப்பாட்டைப் பற்றிக் கூட மறந்து விட்டேன், தம்பி. மாப்பிள்ளைக்கு மாமனார் சாப்பாடு கூடப் போட வேண்டாமா? உன்னை இவ்வளவு தூரம் வரச் சொல்லிப் பட்டினியாகத் திருப்பி யனுப்பினேன் என்று தெரிந்தால் இந்துமதிக்குக் கோபம் வராதா?'' என்று சொல்லிக் கொண்டே அருகிலிருந்த பாழும் மண்டபத்துக்குச் சென்று ஒரு சிறிய மூட்டையையும், ஒரு கரியேறின பானையையும் எடுத்து வந்தார். சற்றுத் தூரத்தில் சலசல வென்ற ஒலியுடன் ஓடிக்கொண்டிருந்த ஓடையிலிருந்து அந்தப் பானையில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து அடுப்பின் மீது வைத்தார். மூட்டையைப் பிரித்து அதிலிருந்த அரிசியைப் பானையில் அப்படியே கொட்டினார்.


என்னைப் பார்த்துச் சிரித்து விட்டு, ''இப்படித்தான் தம்பி நான் வெகு நாட்களாகச் சமைத்துச் சாப்பிடுகிறேன். நீ என்னைப் பார்த்துப் பரிதாபப் படவே வேண்டாம். இந்துவைப் பற்றிய கவலை மட்டும் இல்லையானால் நான் ஆனந்தமாகக் காலங்கழித்து விடுவேன். அதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை. இந்து மட்டும் உன் கையைப் பிடித்திருந்தால் எனக்கு இந்த உலக பந்தமே அடியோடு விட்டுப் போயிருக்கும். ஒரு சந்நியாசியைப் போல் நான் வாழ்க்கை நடத்தி யிருப்பேன்'' என்றார்.

'' அதனால்தான் இப்படி உருவந் தெரியாமல் மெலிந்து போய்விட்டீர்கள்!''



இந்த முக க்ஷவரப் பரீக்ஷையை நீங்களே செய்து பாருங்கள்

சிறந்த பிளேட் எது என்பதை சுலபமாக நிர்ணயிக்க, எந்த பிளேட் வெகுகாலம் கூர்மையுடன் இருக்கிறது எனக் கவனியுங்கள். செவன் ஓ'க்ளாக் பிளேடுகள் மழுமழுப்பானது. ஒவ்வொரு பிளேடும் அதிகப்படியான சுக க்ஷவரங்களை அளிக்கின்றன என்று உங்களுக்குத் தெரியவரும். இதனால் உங்கள் பணம் மிச்சமாகிறது. வேறெந்த பிளேடுகளைக்காட்டிலும் செவன் ஓ'க்ளாக் பிளேடுகள்தான் நீங்கள் செலவழிக்கும் பணத்திற்கு அதிகப்படியான பெறுமானம் அளிக்கிறது. இன்றே அவைகளை வாங்கி பரீக்ஷியுங்கள்.



7 o'clock BLADES

செவன் ஓ'க்ளாக் பிளேடுகள்


ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல் பாத்திரங்கள்
உயர்ந்த ரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்-2


"அதெல்லாம் ஒன்றுமில்லை, தம்பி! நான் பட்ட கஷ்டங்களெல்லாம் எனக்கு உடல் வலிமையையே அளித்தன. ஒரு நாள்கூட நான் ஜுரமோ, தலைவலியோ வந்து படுத்ததே கிடையாது. பாதையே இல்லாத மலைக் காடுகளிலெல்லாம் நான் அநேக மைல்கள் ஏறி இறங்கியும் இருக்கிறேன். அப்பொழுதெல்லாம் நான் களைப்படைந்ததே இல்லை. சந்திரமணி இறந்து போன பிறகுதான் எனக்கு உடலில் சோர்வு என்பது ஒன்று உண்டு என்பது புலனாயிற்று. இந்து சிறைப்பட்ட செய்தி வந்த பிறகு எனக்கு உடம்பில் சக்தியே போய் விட்டது, துரை!"



"இப்போது நான் என்ன சொல்லி விட்டேன்! இதற்குப் போய் இந்தக் குதி குதிக்கிறீரே!"

"அட, நீங்க ஒண்ணு! வெய்யில் மேலே நிற்க முடியவில்லை, அதுக்குத் தான், ஐயா!"

* * *



முள்ளம் பன்றி (குட்டியிடம்):— அங்கெல்லாம் போய் விளையாடாதே! ஒரே சப்பாத்தி முள்ளாக இருக்கு. குத்திவிடப் போகிறது.

* * *



"என்ன வருத்தமா நிற்கிறீங்க!"

"பின்னே என்ன செய்வது! போனா வராது ஓடியாங்க, ஓடியாங்க என்று வியாபாரி கத்தினால் என்னால் ஓட முடிகிறதா! காலில் அடி! அதுக்குத்தான் வருத்தப்படறேன்."

"எந்தத் தந்தைக்குத்தான் இந்த மாதிரி ஒரு விஷயத்தைக் கேட்டுச் சகித்துக் கொண்டிருக்க முடியும்?"

"அதிலும் எனக்கு இந்துவின் அருகில் இருக்க முடியவில்லை அல்லவா? வழக்கு விவரங்களைப் பத்திரிகையில் அல்லவா படித்தேன்? அவைகளில் இந்துவைப் பரிகசித்துச் சில பத்திரிகைகளும் அவளுக்கு இரக்கப்பட்டுச் சில பத்திரிகைகளும் எழுதியிருந்தன. ஆமாம், தம்பி! வழக்கு நடந்த விவரங்களை நான் முழுதும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. நீ ஒவ்வொரு விஷயத்தையும் விவரமாகச் சொல்லேன்."

"சொல்லுகிறேன். அதை நினைக்கும் போதெல்லாம் எனக்கு உள்ளமும் உடலும் பற்றி எரிகின்றன. சந்தர்ப்ப சாட்சியங்கள் எல்லாம் இந்துவுக்கு விரோதமாக அல்லவா இருந்தன?"

"ஆமாம், தம்பி! நான் உன்னைச் சந்தித்து, 'இந்து சொக்கையாவைக் கொல்லவில்லை. இன்னொரு உருவம் கொன்றதைக் கண்ணால் பார்த்தேன்' என்பதைக் கூறியிருந்தால், அப்போதே சாட்சிக் கூண்டிலேறிச் சொல்லியிருந்தால் இந்துவை விடுவித்து இருப்பார்களே? அப்படிச் செய்யாமல் இருந்து விட்டேனே என்று வருத்தமாக இருக்கிறது!"

"நீங்கள் வருத்தப்பட வேண்டாம். நீங்கள் அவ்வாறு கூறியிருந்தால் அவளுடைய குற்றத்தை மறைக்கப் பார்க்கிறீர்கள் என்று தோன்றும். உங்கள் மீது வேறு வாரண்டுகள் இருப்பதால் நீங்களும் சிறை சென்றிருப்பீர்கள். அதனால் ஒருவித லாபமும் ஏற்பட்டிருக்காது" என்றேன்.

"சரி! அப்படியே இருந்தாலும் இனிமேல் அதைப்பற்றி வருந்திப் பயன் இல்லை. நீ சொல்லு தம்பி. இந்துவுக்கு விரோதமாகச் சாட்சி சொன்னவர்கள் யார்? என்னவென்ன சொன்னார்கள் என்பதைச் சொல்லு" என்று கூறிவிட்டு இரண்டொரு சுள்ளிகளைப் பொறுக்கி அடுப்பில் செருகினார். பிறகு என் எதிரில் உட்கார்ந்தார்.

நாங்கள் ஒரு உயரமான தேக்கு மரத்தின் அடியில் உட்கார்ந்திருந்தோம். சுற்றிலும் தேக்கு மரச் சருகுகள் சர சர வென்ற ஒலியை உண்டாக்கிக் கொண்டு காற்றில் பறந்தன.

எதிர்ப் பக்கத்திலும் நாலைந்து உயரமான தேக்கு மரங்கள் நின்றன. அவற்றின் வெள்ளி இலைகள் வெய்யிலில் பளபளவென்று ஒளிவீசி மின்னின.



"ஊரெல்லாம் பேசுமமாதிரி பிரமாதமா ஒரு காரியம் செய்யலாம்னு இருக்கேன்."
"இப்போது நீங்க என்ன செய்தாலும் ஜனங்கள் வெய்யிலைப்பற்றித்தான் பேச வாங்க. அதனாலே நீங்க செய்யறதைக் கொஞ்ச நாள் கழிச்சுச் செய்யுங்க!"

கொஞ்ச தூரத்தில் ஒரு குன்றிமணிச் செடி காய்ந்து கிடந்தது. அதன் சிவந்த ரத்தினம் போன்ற மணிகள் கேட்பாரற்றுக் கீழே சிதறியிருந்தன.

இந்துவுக்குக் குன்றிமணி என்றால் மிகவும் பிரியம். முன்பு பல்லாங்குழி விளையாடுவதற்கு ஒரு சிறிய பெட்டி நிறையக் குன்றிமணிகள் வைத்திருந்தான். அந்தக் குழந்தை போன்ற இதயமுள்ள இந்து சொக்கையாவைக் கொன்று விட்டதாகப் பழி சுமந்திருக்கிறார்களே, இது என்ன அக்ரமம்?

"என்ன தம்பி! சிந்தனையில் மூழ்கி விட்டாயா?" என்றார் காசிலிங்கம்.

"உலகத்தில் நடக்கும் அக்கிரமங்களையும், மனித உருக்கொண்ட ராக்ஷசர்களையும் நினைத்தால் நெஞ்சு கொதிக்கிறது. பத்மநாபன் கூசாமல் கூறிய பொய்களை நினைத்தால் எனக்கே அவருடைய கழுத்தைத் திருகிவிட வேண்டுமென்று ஆத்திரம் பொங்குகிறது."

"அவர் என்ன சொன்னார் தம்பி?"

"மந்திரமூர்த்திப் பண்ணையார் 'சொக்கையா கொலை நடந்தது பற்றி இந்துவின் மீது சந்தேகம் ஏற்படக் காரணம் இல்லையே?' என்று பத்மநாபனைக் கேட்டாராம். அதற்கு இவர் 'சந்தேகம் ஏற்பட முகாந்திரமில்லை' என்று கூறினாராம். இந்துவுக்குச் சொக்கையா என் பெயர் போட்டுக் கடிதம் எழுதியது, இந்து அங்கே போய்விட்டு வந்தது, அன்று அவனுக்கு ஜுரம் வந்தது, மறுநாள் சொக்கையா கொலை செய்யப்பட்' செய்தி தெரிந்ததும் தாம் இந்துவிடம் விசாரித்தது முதலிய எல்லா விவரங்களையும் மந்திரமூர்த்திப் பண்ணையார் பத்மநாபனிடம் கூறினாராம். கடிதத்தைத் தாம் எரித்து விட்டதாகவும் பண்ணையார் கூறினாராம்.

"இதையெல்லாம் பத்மநாபன் கூறவே பிராஸிக்யூஷன் தரப்பில் இந்துமதி தான் குற்றம் செய்தாளென்பது மந்திரமூர்த்திக்குத் தெரிந்திருந்தது என்றும், பத்மநாபனிடம் அவர் இதையெல்லாம் கேட்டதும், கடிதத்தை எரித்ததும் பயத்தினாலேயே என்றும் வாதாட இடம் உண்டாயிற்று."

"ஏன் தம்பி! நமது வக்கீல் பத்மநாபனை ஒன்றும் குறுக்குக் கேள்விகள் கேட்கவில்லையா?"

"கேட்டார். ஆனால் பத்மநாபன் அதற்குச் சளைத்து விடக் கூடியவரா? சுடச்சுடப் பதில் சொல்லிச் சமாளித்துக் கொண்டார். நமது வக்கீல் 'எதிரி உங்கள் வீட்டிலிருந்து ஓடிப் போனதாகக் கூறினீர்களே? ஏன் போனார் என்று கூற முடியுமா?' என்று கேட்டார்.

பத்மநாபன் 'ஓடிப்போனவனைத்தான் கேட்க வேண்டும்' என்றார்.

'நீங்கள் ஊகித்த காரணம்?' என்று நம் வக்கீல் கேட்டதும், பிராஸிக்யூஷன் வக்கீல் 'இதெல்லாம் வழக்குக்குச் சம்பந்தமில்லாத விஷயங்கள்' என்று மறுத்தார். நீதிபதியிடம் நமது வக்கீல் சம்பந்தமுள்ளதுதான் என்று வாதாடிச் சம்மதம் பெறவேண்டியிருந்தது.

பிறகு பத்மநாபன், 'அவளுக்குத் திருமணம் செய்து வைப்பதாக நான் மந்திரமூர்த்திக்கு வாக்களித்திருந்தேன். சகுவரமூர்த்தி என்ற என் நண்பர் அவளை மணந்து கொள்ள விரும்பினார். நான் அவளுடைய சம்மதத்தைக் கேட்டேன். அப்போது யோசித்துச் சொல்வதாகக் கூறிவிட்டு இரண்டு நாட்களுக்குப் பின் ஓடிப் போய் விட்டாள்' என்று கூறினார்.

'சகுவரமூர்த்தியைத்தான் மணந்து கொள்ள வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்தினீர்களா?' என்று நம் வக்கீல் நீலகண்டன் கேட்டார்.

'இல்லவே இல்லை. அவளுக்கு இஷ்டமில்லை என்று கூறியிருந்தால் மணம் செய்து வைத்திருக்கவே மாட்டேன்' என்றார் பத்மநாபன்.

'பின் ஏன் நீங்கள் அவருடைய கார்டியனாக இருந்தும் அவளைத் தேடிக் கண்டு பிடிக்கவில்லை. அது தவறல்லவா?' என்றார் நீலகண்டன். (தொடரும்)



நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும்
பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு
காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்த
லின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி
எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை
வாங்கி பணத்தை
மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்



தீங்கற்றது — ஏனெனில் இந்த
பார்லி டின்னில்
அடைக்கப்பட்டது
புஷ்டியளிக்க உயர்ந்த ரகத்
தானியங்களிலிருந்து தயா
ரிக்கப்படுவதால் ராபின்ஸ
ன்ஸ் பேர்ல் பார்லி நல்ல
போஷணையை அளிக்கிறது
சுலபமாக ஜீரணிக்கக்கூடி
யது. காற்றுப்புகாமல் சுகா
தார முறைப்படி டின்களில்
அடைக்கப்படுவதால் இந்த
பார்லியை குழந்தைகள்,
நோயாளிகள், பாலூட்டும்
தாய்மார்கள் முதலியவர்க
ளுக்கு முழு நம்பிக்கையு
டன் கொடுக்கலாம்.
ROBINSON'S
PEARL
BARLEY
ராபின்ஸன்ஸ் பேர்ல்
பார்லியையே
கேட்டு வாங்குங்கள்
முற்றிலும் சுத்தமானது



"ஸார்...!" என்று கூப்பிட்டுக் கொண்டே சர்மா வீட்டுக்குள் நாராயணன் நுழைந்தான். வெளித் தாழ்வாரத்திலேயே சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த சர்மா, "வா அப்பா, நாராயணா!" என்று மிகவும் அன்போடு வரவேற்றார். அவருக்கு அருகில் இருந்த நாற்காலியில் அவனை உட்காரச் சொன்னார்.

நாற்காலியில் உட்கார்ந்த நாராயணன், "ஸார், இன்றைக்குத் தருவதாகச் சொன்னீர்களே என்று வந்தேன்...!" என்றான்.

"அடடா! என்ன மறதி போ! உனக்குச் சொன்னது நினைவில்லாமல் காலையில் பால்காரனுக்குக் கொடுத்து விட்டேன்... உம்... சரி. நாளை, அதற்கு மறுநாள் இரண்டு நாளும் கழித்து ஞாயிற்றுக் கிழமையன்று மத்தியானம் வா. கட்டாயம் கொடுத்து விடுகிறேன்!" என்று சர்மா மிகவும் கனிந்த குரலில் சொன்னார்.

"சரி, நான் அப்புறம் வந்து பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு நாராயணன் புறப்பட்டான்.

ஞாயிற்றுக் கிழமை வந்தது. நாராயணனும் நினைவாகச் சர்மா வீட்டுக்குப் போனான். சர்மாவைக் காணவில்லை; இரண்டு நாள் கழித்து மீண்டும் சர்மாவின் வீட்டுக்குச் சென்றான். சர்மா தாழ்வாரத்தில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்.

"நமஸ்காரம், ஸார்!" என்று நாராயணன் கைகூப்பியதும் சர்மா அவனை அன்போடு வரவேற்றார்.

"நான் ஞாயிற்றுக் கிழமை வந்திருந்தேன். உங்களைப் பார்க்க முடியவில்லை. அப்புறம் இரண்டு நாள் கழித்து வந்தேன்; அப்பொழுதும் நீங்கள் வீட்டில் இல்லை. அன்று நீங்கள் அவ்வளவு நிச்சயமாகச் சொன்னதினாலேயே நான் ரொம்ப நம்பிக்கையோடு வந்தேன்...... கடைசியில் நீங்கள்......!"

"அப்படிச் சொல்லாதே, அப்பா! உன்னை நம்பிக்கை மோசம் செய்ய வேண்டும் என்று எனக்குத் துளியும் அபிப்பிராயம் இல்லை. ஒரு அவசரக் காரியமாக ஊரில் இருந்து தந்தி வந்தது. நான் உடனே புறப்பட்டுச் செங்கல்பட்டுக்குப் போகும்படியாகி விட்டது. தயவு செய்து வித்தியாசமாக நினைக்காதே. நாளைக் காலையில் வா. அவசியம் கொடுத்து விடுகிறேன்!" என்று சமாதானமாகச் சொல்லி, சர்மா நாராயணனை அனுப்பி வைத்தார்.


மறுநாள் காலை நாராயணன் குறிப்பிட்ட நேரம் தவறாமல் சர்மா வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே சர்மாவின் நண்பர்கள் ஏழெட்டுப் பேர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். சர்மா நாராயணனைப் பார்த்துப் புன்னகை புரிந்து, "வா, அப்பா!" என்று அன்பாக வரவேற்றார். நாராயணன் பதிலுக்கு மௌனமாக வந்தனம் செலுத்திவிட்டு ஆசனத்தில் அமர்ந்தான். சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆகியும் சர்மா இவன் பக்கம் திரும்புகிற வழியாயில்லை. உற்சாகமாகப் பேச்சு தொடர்ந்து கொண்டேயிருந்தது. இடையிடையே, பேரலை போன்ற ஒலியோடு பெருஞ்சிரிப்பு எழுந்த வண்ணமாயிருந்தது. நாராயணன் நினைவே சர்மாவுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. நாராயணன் அலுத்துப் போய் அவரிடம் சொல்லிக் கொள்ளாமலே நழுவி விட்டான்.

இரண்டு மூன்று நாட்கள் சென்றதும், நாராயணன் சர்மா வீட்டுக்குப் போனான். வழக்கம் போல் சர்மா வாசல் வராந்தாவில் அமர்ந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்ததும் நாராயணனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இன்றைக்கு அவரிடம் 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டாக'க் கேட்டு விடுவது என்று நிர்மானித்துக் கொண்டு வேகமாக வாசற்படி ஏறினான்.

"வா, அப்பா நாராயணன், உனக்கு ஆயுசு நூறு! இப்பொழுதுதான் உன்னை நினைத்தேன்!" என்றார் சர்மா.

அதுவும் அப்படியா!



நாராயணனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அந்தச் சமயம் பார்த்துச் சர்மாவின் நண்பர் ஒருவர் அங்கு வந்தார்.

நாராயணன் அவரைச் சிறிதும் பொருட் படுத்தாமல் தள்ளிக் கொண்டு முன்னேறிச் சர்மாவிடம் சென்றான்.

"உண்மைதான், ஸார்! உங்கள் வீட்டுக்கு ஓயாமல் நடப்பதற்கு நூறு ஆயுசு போதாது! உங்களால் கொடுக்க முடிய வில்லை என்றால் ஒரே வார்த்தையில் 'இல்லை' என்று சொல்லி விடலாமே! எதற்காக என்னை இழுக்கடிக்க வேண்டும்? ஐந்து ரூபாய்க் காசுக்கு என்னை இத்தனை தடவை அலைய வைத்ததை நினைக்க எனக்கே ரொம்ப வெட்கமாயிருக்கிறது. இனிமேல் நான் உங்களைக் கேட்க மாட்டேன். இதோ இப்பொழுதே போய் அந்த ஐந்து ரூபாய்க்கு ஒரு முழுக்குப் போட்டு விடுகிறேன்!" என்று சீறிவிட்டு, சர்மா வின் பதிலை எதிர்பாராமல் நாராயணன் 'விர்' என்று வெளியேறினான்.

சர்மாவைப் பார்க்க வந்த நண்பர் ஒன்றும் புரியாமல் குழப்பத்தோடு வெளியிலேயே நின்று கொண்டிருந்தார். நாராயணன் போனதும் சர்மாவிடம் போனார்.

சர்மா அவரை "வாருங்கள்" என்று கைகூப்பி வரவேற்று, நாற்காலியை இழுத்துப் போட்டு, உட்காரச் சொன்னார்.

வந்தவர் குழம்பிய மனத்தோடு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "என்ன சர்மா ஸார்! வரவேற்பு இருக்கட்டும்... நீங்கள் என்ன இந்தப் பொடிப் பசங்களிட மெல்லாம் பேச்சு வைத்துக் கொள் கிறீர்கள்? நான் சொல்லுகிறேனே என்று வித்தியாசமாக நினைக்கப்படாது. உங்க ளுடைய அந்தஸ்தென்ன, இந்தப் பயல் யோக்கியதை என்ன? போயும் போயும் இவனிடம் கடன் வாங்குவார்களா? அது வும் ஐந்து ரூபாய்க் காசுக்கு எத்தனை பேச்சுப் பேசி விட்டானே! அவனிடம் கடன் வாங்கும்படியாக உமக்கு...!" நண்பர் தம் பேச்சை முடிக்கவில்லை. சர்மா அவரை இடைமறித்துப் பேசினார்:

"......சரிதான் போங்கள். இவனிடம் போய் நான் ஏன் கடன் வாங்குகிறேன்? இவன் ஒருவனிடம் ஐந்து ரூபாய் கடன் வாங்கி யிருந்தானாம். அதைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் தவித்தான். அதற்காக என்னிடம் ஐந்து ரூபாய் கைமாற்றுக் கேட்டிருந்தான். நானும் சரி யென்று சொல்லி யிருந்தேன். அப்புறம் இவனு டைய அதிர்ஷ்டம், இவன் வந்து கேட்ட போதெல்லாம் என்னிடம் ஐந்து ரூபாயாக இல்லை. என்ன செய்வது?"

சர்மா சொன்னதைக் கேட்ட நண்பர் ஆச்சரியத்தால் அயர்ந்து போனார்!



எல்லாவித மரச் சாமான்களுக்கும்... உட்பூச்சுக்கும், வெளிப்பூச்சுக்கும்
எவ்வித சீதோஷ்ண ஸ்திதியாலும் பாதிக்கப் படாதது
ஷாலிமார்
பூசுவதற்குத் தயாரான பெயிண்டு
ஷாலிமார்
அலுமினியம் பெயிண்டு
ஒரு கழுவக்கூடிய, சுவர்களுக்கேற்ற பெயிண்டு
பலவித வேலைகளுக்கேற்ற சிறந்த எனமல்
ஷாலிமார்
சுவர்களுக்கேற்ற பெயிண்டு
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., PRIVATE LTD.
Post Box 136, MADRAS-1



தூய உள்ளம்

உமாதேவி

பிரபலமான பஞ்சாலையின் முதலாளி சங்கர்லால் மாளிகை போன்ற தமது வீட்டின் ஒரு அறையில் சிந்தனையே உருவாக உலாவிக் கொண்டிருந்தார். காரணம் அவரது மில்லிலும் வேலை நிறுத்தத்துக்கான அறிகுறி தென்பட்டதுதான். 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்று ஆரம்பித்த அவரது பஞ்சாலை பல்கிப் பெருகி வளர்ந்து மாபெரும் ஆல விருக்ஷம் போலப் பலருக்கும் நன்மை பயப்பதாக அமைந்திருந்தது. தம் முயற்சியால் முன்னுக்கு வந்த அவர் - தொழிலாளிகளின் சௌகரியா சௌகரியங்களை நன்கு உணர்ந்திருந்த அவர் – தொழிலாளருக்கு ஒருவிதக் குறைவும் இல்லாமல்தான் கவனித்து வந்தார். அப்படியும் அவர் ஆலையில் வேலை நிறுத்தக் காற்று வீசவே, அவருக்கு மனத்தை என்னவோ செய்தது.

இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த பொழுதுதான் 'போன்'மணி அடித்து வேலை நிறுத்தம் ஆரம்பமாகி விட்டது என்பதைத் தெரிவித்தது. உடனே காரை எடுத்துக் கொண்டு மில்லுக்குப் புறப்பட்டார்.

அவரைப் பார்த்ததும் "தொழிலாளர் வாழ்க! முதலாளிகள் ஒழிக!" என்ற கோஷம் வானைப் பிளந்தது. "எங்கள் கோரிக்கைக்கு இணங்க வேண்டும்! இல்லாவிட்டால் கால வரையறையில்லாத வேலை நிறுத்தம்தான்!" என்றது ஒரு குரல்.

சங்கர்லால் திரும்பிப் பார்த்தார். ஆச்சரியத்துடன் அவர் வாய் அடைத்தது. தொழிலாளர் தலைவனாக, அவர் வளர்த்து ஆளாக்கிய அவர் வளர்ப்பு மகன் ராம்லாலே அங்கே நின்றான்.

"ராம் லால்!" என்று கூப்பிட்டார்.

அவர் குரலில் ஒரு தகப்பன் தனயனைக் கண்டிக்கும் தோரணை தொனித்தது.

"நிஜமாகவே உனக்குச் சீர்திருத்த மனப்பான்மை இருக்கிறதா? இருந்தால் எனக்குச் சந்தோஷமே. ஆனால் உலகில் ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும். பிறகுதான் பிறரைச் சீர்திருத்த முற்பட வேண்டும்? இருபது வருஷங்களாகச் சந்துஷ்டியோடு வாழ்ந்த மக்களுக்கு இன்று திடீரென்று என் நிர்வாகத்தில் குற்றம் கண்டு பிடிக்கும் மனப்பான்மை எங்கிருந்து வந்தது? படிப்பு வாசனையறியாத மக்களை உன் அடுக்குச் சொற்களுக்குப் பலியாக்கி ஏன் புத்தி பேதலிக்கச் செய்கிறாய்?"

இதைக் கூறியவர் கூடியிருந்தவர்களைப் பார்த்து, "சகோதரர்களே!" என்று ஆரம்பித்தார். "நாங்களெல்லோரும் உன் சகோதரனாயிருந்தால் இப்படியா யிருப்போம்? சுகமாக உன்னைப் போல் காரில் வந்து இறங்க மாட்டோமா?" என்று கூறினான் ஒருவன்.

"இத்தனை வருஷங்களாக இல்லாமல் என்மீது காரணமில்லாமல் இவ்வளவு பகைமை உங்களுக்கு ஏற்படக் காரணம்?"

"காரணமா? அதைச் சொல்லத்தானே இங்கு கூடியிருக்கிறோம்? எங்களுக்குச் சம்பள உயர்வு வேண்டும்!"

"எத்தனை எதிர்பார்க்கிறீர்கள்?"

"சரி பாதி!"

"தாராளமாக வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால் ஒரு விஷயம். ஏதாவது ஒரு வருஷம்

லாபமே வராமல் ஆலை கடனில் மூழ்கினால் நீங்கள் அவ் வருஷம் உங்கள் சம்பளத்தி லிருந்து நஷ்டத்தை ஈடு செய்கிறீர்களா?"

'ஓஹோ' என்று கடலைப் போல் இரைச்சல் எழுந்தது. "அது எப்படி இயா முடியும்? அது உன் சொந்த விஷயம். நாங்கள் உழைப்பாளிகள் தானே? எங்களுக்கென்ன அக்கறை?" என்றனர் பலர்.

"சுகத்தில் சம உரிமை கேட்கும் நீங்கள் கஷ்டத்திலும் சம உரிமை பெறத் தயாரா யிருந்தால் நான் சித்தமா யிருக்கிறேன், உங்கள் கோரிக்கைக்கு இணங்க. சம உரிமை என்று வெறும் வாய் வேதாந்தம் பேசுவதா யிருந்தால் நான் என்பொழுதை வீணாக்கத் தயாரா யில்லை. ஆறுமாதங்களுக்கு முன்புதான் உங்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறேன். இப்பொழுது ஆலை இருக்கும் நிலைமையில் சம்பள உயர்வுக்குச் சாத்தியமில்லை!" என்று கூறிய சங்கர்லால் அதற்குமேல் நிற்கவில்லை.



வழி முழுவதும் அவருடைய தேகம் பதறியது. மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. நியாயம், தர்மம் என்று போகிறவர்களையும், அதர்மமே தொழிலாகக் கொண்டவர்களையும் ஒன்றாகப் பேசும் உலக இயல்பை எண்ணி எண்ணி வியந்தார். அவரும் எவ்வளவோ வருஷங்களாக வியாபாரத் துறையில் பழகி வருகிறார். எவ்வளவோ யுகங்களாகத்தான் ராஜாக்களென்றும், சர்க்காரென்றும் பலவிதம் உலகில் இருக்கிறது. அதனால் எல்லோருமே சாப்பாட்டுக்குக் கஷ்டப்படாமல் சௌக்கியமாக இருக்கிறார்களா? கடவுள் என்ற ஒரு நியதியும், பாவ புண்ணியம் என்ற ஒரு நியதியும் இருக்கும் வரையில் உலகில் கஷ்டமும் சுகமும் சேர்ந்துதான் இருக்க முடியு மென்பது அவர் நம்பிக்கை.


சங்கர் லாலின் தந்தை மனோஹர் லால் ஆமதாபாத்தில் ஒரு ஆலையில் கூலியாளாக இருந்து வந்தார். பெரிய வியாபார ஸ்தலமாகிய ஆமதாபாத்தில் அவர் தம் ஆயுளை ஒரு குடிசையில் கூலியாளாகவே கடத்தி விட்டார். அவர் இறக்கும் பொழுது சங்கர்லாலுக்குப் பத்து வயது. தாயார் சிறு வயதிலேயே இறந்து விட்டாள். சுற்றமென்று அவருக்கு யாரும் இல்லை.

தந்தைக்குப் பிறகு அவருக்கும் அந்த ஆலையே புகல் அளித்தது. இரவு பகலென்று பாராமல் ஆலையின் யந்திரங்களுக்கிடையில் உழைத்தார்.

தாயன்பு, தந்தையன்பு இரண்டையுமே இளவயதில் இழந்து விட்ட சங்கர்லாலுக்குத் தெய்வம் ஆஷா என்னும் ஜோதியை அன்புருவில் கொண்டு வந்து விட்டது. அநாதைக்கு அநாதை தானே துணை சேருவார்கள்? ஆஷா என்னும் அப் பெண் அந்த வருஷம்தான் தன் தாய் மாமன்,

மாமியுடன் அங்கு வந்திருந்தாள். அவளை முதல் முதல் சந்தித்த போதே சங்கர்லாலின் உள்ளத்தில் அவளுக்கும் தனக்கும் ஏதோ ஜன்மாந்திரத் தொடர்பு இருப்பதாகத் தோன்றியது. அழகே உருவான ஆஷாவும் சங்கர்லாலும் நெருங்கிப் பழகினார்கள்; அவர்களிருவரும் அன்புக்கு வித்திட்டுக் கொண்டார்கள்.

ஆனால் ஆஷாவின் எழில் உருவத்தில் மயங்கிய ஆங்கிலேயன் ஒருவன் அவள் மேல் வெகு நாட்களாக ஒரு கண் வைத்திருந்தான். தன்னுடைய வெள்ளைத் தோலைப் பார்த்து அவள் மயங்கி விடுவாளென்றும் அவன் எண்ணியிருந்தான். மேலும் அவளையடைய இல்லாத பல முயற்சிகளும் செய்து வந்தான்.



ஒருநாள் சங்கர்லால் வேலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும் பொழுது 'ஐயோ, ஐயோ!' என்று அலறும் பெண் குரல் கேட்டது. ஒரு கிபிஷம் தயங்கிய சங்கர்லாலுக்கு அது ஆஷாவின் குரல் என்று அறிந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை. அலறிப் புடைத்துக் கொண்டு ஓடினார். அதற்குள் ஆஷா ரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தாள். பக்கத்தில் யாருமில்லை. 'என் கண்ணே!' என்று கதறியவர் அவளைத் தூக்கி மடி மேல் போட்டுக் கொண்டு உதவிக்காக அழைத்தார். ஆஷா நாலிமை போல் ஓடிக் கொண்டிருந்த மூச்சுடன் சிரமப்பட்டு, "ஜான்ஸன் பாவி நான் அவனுக்கு இணங்கவில்லை என்பதற்காகக் கொன்று விட்டான்!" என்றாள். அடுத்த கணம் அவள் ஆவி பிரிந்தது. இதற்குள் எல்லோரும் கூடி விட்டார்கள். போலீசார் வந்து சங்கர்லாலை விலங்கிட்டு அழைத்துச் சென்றனர். சங்கர்லால் கொடுத்த வாக்குமூலத்தில் ஆஷா மரண சமயத்தில் சொன்னவைகளைக் கூறினார். ஜான்ஸனும் கைது செய்யப்பட்டான். ஜான்ஸன் சொன்ன வாக்குமூலத்தில் தனக்கு ஒன்றுமே தெரியாதென்று பலமாகச் சாதித்து விட்டான்.

எனவே, சட்டம் சங்கர்லாலுக்குக் கடுங்காவல் தண்டனை அளித்தது!

எதிர்பாராத விதமாக, தண்டனைக் காலம் முடிவதற்குள் அவர் மேல் சுமத்தப்பட்டிருந்த கொலைக் குற்றமும் நீங்கியது. அதற்குக் காரணம் ஆஷா வளர்த்து வந்த ஒரு நாய்தான்.

அது எப்பொழுதும் ஆஷாவுடனேயே இருக்கும். மாமன் வீட்டில் அவளுக்கு இடப்படும் அரை வயிற்று உணவில் அதற்கும் அவள் பங்கு கொடுப்பாள். மனித ஜாதியை விட மிருக ஜாதிக்கு என்றுமே நன்றி அதிகம். அது ஒருநாள் ரப்பர் தோட்டத்திலிருந்து ஒருசிறிய கைத் துப்பாக்கியை வாயில் கவ்விக் கொண்டு தொழிலாளிகள் இருந்த இடத்துக்கு வந்து ஊளையிட்டது. அதை எல்லோரும் சூழ்ந்து கொண்டு பார்த்ததில் அத் துப்பாக்கியில் அந்த ஆங்கிலேயனின் பெயர் பொறித்திருந்தது தெரிந்தது.

எனவே மீண்டும் ஆங்கிலேயன் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கேஸ் ஆதி முதல் விசாரிக்கப்பட்டு ஆங்கிலேயனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டது. சங்கர்லால் விடுதலை பெற்றார். அப்புறம் அவர் வாழ்க்கையில் ஒரு திருப்பம். அவர் கைவைத்த இடம் எல்லாம் பொன்னாகி

> கிரேக்கர்களிடம் ஹோமர் திகழ்ந்தது போலத் தமிழர்களிடம் திருவள்ளுவர் திகழ்ந்தார் என்பது மறுக்க முடியாததோர் உண்மையாகும். திருக்குறள் ஒரு கல்விக் களஞ்சியம். பாவலர்க்கு உறுதுணை. ஒப்புயர்வற்ற சொல்திறம் நிறைந்த ஒழுக்க நூல். தமிழர்களின் மனப்போக்கு, உயரொழுக்கத்தையே நாடி நின்றது என்பது தெளிவாக விளங்கும்.
>
> — *சார்ல்ஸ் ஈ கவர்*

பது. சிறுகச் சிறுகப் பணம் சேர்த்தது. அவர் பிரபல ஆலை முதலாளியானார். தம் விடுதலைக்குக் காரணமாயிருந்த தொழிலாளர்களை அவர் என்றும் மறக்கவில்லை. அவர்களுடைய நலனுக்காகவே வாழ்ந்தார். ஆஷா மறைந்த பிறகு அவர் கலியாணத்தைப் பற்றியே சிந்திக்கவில்லை.

ராம்லால் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரியின் புதல்வன். உறவு என்பதற்காக அவர் அவனிடம் இரக்கம் கொள்ளவில்லை. தம்மைப் போல அநாதை என்பதற்காகத்தான் அவனிடம் இரக்கம் காட்டினார். ஆனால் ராம்லால் பலவிதத்திலும் அவருக்கு நன்மை செய்வதுபோல் நடித்து வெளியில் புரட்சியை உண்டு பண்ணிக் கொண்டிருந்தான்.

சங்கர்லாலுக்கு இவ்வளவு வருஷங்களாக வராமல் இருந்த பழைய கால நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தன. மறுநாளும் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடந்தது. இன்று எப்படியும் ஒரு வழி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில்தான் மில்லை நோக்கி விரைந்தார்.

இரண்டு மூன்று ஆண்டுகளாக மழையின்மையால் பருத்தியே விளையவில்லை. அப்படியும் அவர் க்ஷேம நிதியிலிருந்து எல்லோருக்கும் வழக்கம் போல் போனஸ், சம்பள உயர்வு முதலியன கொடுத்தார். அப்படியும் அவர்கள் போதாதென்று கூப்பாடு போட்டனர். அவர் காரிலிருந்து இறங்கு முன்பே ராம்லால் முன் வந்து, "என்ன முடிவு செய்திருக்கிறீங்க? இந்த ஏழைகள் வயிற்றில் இன்னும் அடிக்கவா போகிறீங்க?" என்றான்.

"சீ! அல்பகாயே! நானா என் குழந்தைகள் வயிற்றில் அடிக்கிறேன்? போதும், நிறுத்து! அவர்களை அகாரணமாகத் தூண்டி விட்டு அவர்கள் வாழ்வை நீதான் கெடுக்கிறாய்!" என்று கூறிக் கொண்டே உள்ளே நுழைந்தார் சங்கர்லால்.

"எங்கள் கோரிக்கைக்குச் சரியான பதில் நீங்கள் கூறினால்தான் உள்ளே நுழையலாம்!" என்றான் ராம்லால்.

"என்ன? குப்பையில் கிடந்த உன்னை மனிதனாக்கியது யார் தெரியும் அல்லவா? என்னைத் தடுக்க நீ யார்?" என்று கூறி உள்ளே நுழைந்தார் சங்கர்லால்.

ஜனக் கூட்டம், "ஒழிக, முதலாளி வர்க்கம்!" என்று கூக்குரலிட்டது.

சங்கர்லால் சாந்தமாக, "தோழர்களே! நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள். நாம் ஏன் பகைமை பாராட்ட வேண்டும்?" என்று ஆரம்பித்தார்.

"கடவுளின் பெயரைச் சொல்லி யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்!" என்று வெறி கொண்டது போல் கத்திப் பெரிய பெரிய கற்களை எடுத்துக் கொண்டு வாயிற்புறம் தோட்டத்தில் வைத்திருந்த சலவைக் கல் கிருஷ்ண விக்கிரகத்தை நோக்கி எறிந்தார்கள் தொழிலாளிகள். படாரென்ற சத்தத்துடன் விக்கிரகம் இரண்டாய் உடைந்தது. "ஐயோ பாவிகளா!" என்ற சத்தத்துடன் சங்கர்லால் கீழே சாய்ந்தார். தர்மம் ஒன்றையே தம் உயிர் நாடியாகக் கொண்டிருந்த சங்கர்லாலின் ஆத்மா அதனுடனேயே கலந்தது. வெறியர்கள் வெறி அடங்கினதும்தான் தாங்கள் செய்த காரியத்தின் விளைவைக் கவனித்தார்கள். ஏதோ பிறர் தூண்டுதலினால் செய்தாலும் தங்களுக்கு அன்னமிட்டு ஆதரித்த தர்மவானுக்குக் கண்ணீர் சிந்தாமல் அவர்களால் இருக்க முடியவில்லை.

சங்கர்லால் எழுதி வைத்திருந்த உயிலின் படி, மில் ராம்லால் கைக்கு வந்தது.

ராம்லால் அன்று முதலாளி ஸ்தானத்தில் உள்ளே நுழைந்தான்.

"தோழருக்கு வணக்கம். தோழருக்கு ஜே!" என்ற கூக்குரல் வானைப் பிளந்தது.

தோழன் ராம்லால் ஒரு கத்தை நோட்டுகளைக் கொடுத்துத் தொழிலாளிகளிடம் விநியோகிக்கச் சொன்னான்.

அதில் "சங்கர்லால் இருந்த காலத்தில் அநாவசியமாக ஆதரவு காட்டி அளவுக்கு மேல் ஆட்களை வேலைக்கு நியமித்து விட்டதாகவும், அதுவுமின்றி மில்லுக்கு அதிகக் கடன் இருப்பதாயும், ஆகையால் ஆறு மாதத்துக்குள் மில்லில் ஆள் குறைப்பு ஏற்படுத்தப் போவதாகவும் தொழிலாளர்களில் கால்வாசிப் பேராவது முன் கூட்டியே வேறு வேலை தேடிக் கொள்ளலாம்" என்றும் கண்டிருந்தது.

யாரை நம்பி அருமையான எஜமானனை விரோதித்துக் கொண்டார்களோ, அவனே இன்று தன் கைக்குப் பதவி வந்ததும் எப்படி மாறிவிட்டான்! இதை நினைத்துப் பார்த்தபொழுதுதான் சங்கர்லாலின் தூய உள்ளம் அவர்களுக்குப் புரிந்தது!

கான்க்ரீட் ரஸ்தாக்கள்

நிரந்தர சேவைக்கு


கான்க்ரீட் ரஸ்தாக்கள் தொந்தரவில்லாமல் அநேக வருஷங்கள் உழைப்பு அளிக்கின்றன.

பாதுகாப்பு

கான்க்ரீட்டின் வழுக்கலில்லாத தளம் எல்லா பருவ காலங்களிலும் நிச்சயமான பாதுகாப்பை அளிக்கிறது.


சிக்கனம்

கான்க்ரீட் ரஸ்தா போடும் செலவு மிகவும் மிதமானது பராமரிப்பிற்காக விசேஷமான செலவுகள் ஒன்றுமில்லை.



கிராண்ட் ஸதர்ன் டிரங்க் ரோடு (மதராஸ்—கன்யாகுமரி)

மதராஸ்—கள்ளிக்கோட்டை ரோடு (வேலூர் சமீபம்)




உறுதியாக
நிலைத்து நிற்க
ஏசிசி
சிமெண்டினால்
கட்டப்பட்டது

ஏ சீ சீ

தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்
சேல்ஸ் மானேஜர்கள்:
தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிட்

TAM SISTA'S CMI-348





'அனசின்'

விஞ்ஞான முறையில் நான்கு மருந்துகளின் ஒரு கலப்பு.


'அனசின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனசினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் :—

1. கொயினா : ஜுர தடுப்புகுணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பீன் : பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினாஸிடின் : ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட் : தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்குவதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனசினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனசின்' வயிற்று நலத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறுண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனசினையே கேட்டு வாங்குங்கள்.



லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.



தூய்மையின் வடிவம்

ரா. பாலகிருஷ்ணன்

"அயோக்கியர்களுக்கும், துரோகிகளுக்குந்தான் சார், இது காலம்! நல்லவனுக்கு இல்லை! எங்க அண்ணன் மகன் இருக்கான், பாருங்க—அந்தப் பயலைப் படிக்க வைச்சு, ஒரு கம்பெனியிலே வேலை வாங்கிக் கொடுத்து ஆளாக்கிவிட்டேன் பாருங்க! என் புத்தியைச் செ......லே அடிக்கணும்! அந்தப் பயல் சொல்றானாம் — 'எங்கப்பா உயிரோட இருந்தா, என்னைக் காலேஜில் படிக்க வைச்சிருப்பாரு. சித்தப்பாவாலேதான் இப்படிக் குமாஸ்தாவா நான் பிராணனை விடவேண்டியிருக்கு. சொந்தப் பிள்ளையாக இருந்தா என்னையும் மேலே படிக்க வைச்சிருப்பாரே!'ன்னு கேட்கிறானாம்! என் வயிறு எரியுதுங்க!" என்றார் சங்கரம் பிள்ளை விரக்தியும் கோபமும் கலந்த குரலில்.

"பிள்ளைவாள்! உங்க மனச்சாட்சிக்குத் தெரியும், நீங்க அந்தப் பையனுக்குச் செய்த உபகாரம். அவன் என்ன சொன்னால் என்ன! செய்தால் என்ன! அதற்காக நீங்கள் உலகத்தையே வெறுத்துவிட்டது போலப் பேசவே வேண்டாம்" என்று சமாதானம் கூறினேன்.

"எல்லாருமே அப்படிக் கர்மயோகி போலக் கடமையைச் செய்துவிட்டுச் சும்மா இருந்துடணும்னு முடியுதுங்களா! நாம் சும்மா இருந்தாலும், இருக்க விடறானுங்களா! இந்த மாதிரி பேசினால், 'ஏண்டா உபகாரம் செய்தோம்'னுதானே நினைக்கத் தோணுது! நீங்க என்னதான் சொல்லுங்க — இது நல்லவனுக்குக் காலம்னு எனக்குத் தோணவேயில்லீங்க" என்றார் சங்கரலிங்கம் பிள்ளை, ஆயாசத்துடன்.

"என்ன சொல்லுகிறீர் பிள்ளை! நல்லவர்களுக்கு இது காலம் இல்லையென்றால் நாம் எல்லாரும் கௌரவமாக வாழ்கிறோமே, இது பொய்யா!" என்று கேட்டவாறு உள்ளே நுழைந்தார் சர்மா.

"சொந்த அனுபவத்தில் ஏற்பட்ட ஒரு மனக்கசப்பைத்தான் அப்படி வெளியிட்டார், பிள்ளை!" என்று சர்மாவுக்கு விளக்கினேன்.

"தேன் கொட்டிச் சாகிறவன் லட்சத்திலே ஒருவன் இருப்பான். அதனால், தேன் கொட்டினால் சாவுதான் என்று முடிவுகட்டிவிட முடியுமா! போக்கிரிகளுக்கும், நன்றிகெட்டவர்களுக்கும் ஆரம்பத்தில் நன்மைக்கு மேல் நன்மை, லாபத்துக்குமேல் லாபம் வந்து கொண்டிருப்பதுபோல்தான் தெரியும். இறுதியில் நல்லவர்களுக்குத்தான் நிரந்தரமான சுகம்! இதைத்தான் பாரதியார்கூடச் சொல்கிறார்: 'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்லும்'—என்று. தேன் கொட்டியதும் ஏற்படுகிற வலியைப் போன்றுதான், நல்லோர் ஆரம்பத்தில் படுகிற கஷ்டம். கொட்டின தேனைத் தேடிப் பிடித்து அதன் கொடுக்கை நறுக்கி, அதையும் அடித்துப் போடுகிறோமல்லவா! தேனுக்கு இறுதியில் ஏற்படுகிற முடிவுதான் அயோக்கியர்களுக்கும். இதுதான் பிள்ளைவாள், நான் அறிந்த உண்மை அனுபவம் எல்லாம்" என்று ஆணித்தரமாகக் கூறி நிறுத்தினார் சர்மா.

சங்கரலிங்கம், நரைத்த கேசத்தை முடித்தவாறு, "சரியோ, தப்போ சர்மா மேற்கோள் காட்டிப் பேச ஆரம்பிச்சாருன்னா அதை எல்லாருமே ஒத்துக்க வேண்டியதுதான். இருந்தாலும் பாருங்க, என்னதான் நல்லவங்க கடைசியிலே சுகப்பட்டாலும், இடையிலே படுகிற கஷ்டம் இருக்குதே — அதைச் சமாளிக்கிறதுதானே பெரும் பாடாயிருக்கு! சினிமாவிலே கூட, படம் முடியறதுக்கு அஞ்சு நிமிஷம் வரைக்கும் வில்லன்தான் சுகப்படுகிறான்; கதாநாயகன் கஷ்டத்தைத்தான் அனுபவிக்கிறான். இல்லையா!" என்றார். சங்கரலிங்கத்தின் இந்தக் கேள்வி, அவர் மனக்கசப்பு இன்னும் நீங்கவில்லை என்பதைத்தான் வெளிக்குக் காட்டியது.

சர்மா கூறினார்: "வாழ்க்கை வேறு, சினிமாக் காட்சி வேறு, பிள்ளைவாள்! பணத்துக்காகச் சினிமாப் படம் எடுக்கிறார்கள். ஆனால், வாழ்க்கைக்காக ஏற்பட்டது பணம். பணத்துக்காக அல்ல வாழ்வு! அந்தப் பணத்தைச் சம்பாதிப்பதில் எவ்வளவோ நாணயக் குறைவாக நடந்து

கொள்ளுகிறோம். அது வேறு விஷயம்......''

ஒரு நிமிஷத்துக்குப்பின் தொடர்ந்தார் சர்மா.

''ஜடாவல்லபரைத் தெரியாதே உங்களுக்கு! ரயில்வேயிலே நல்லமைக் குமாஸ்தாவாக இருந்து பதினான்காயிரம் ரூபாய் சேம நிதியுடன் ஓய்வு பெற்றவர். சம்பளத்திலே மிச்சம் பிடித்தது ஒரு ஐந்து, பத்துகூட இருந்திருக்கும் என்று வைத்துக் கொள்ளுங்களேன்! தப்பு தண்டாவுக்கே போகமாட்டார். பைசாக்கூட லஞ்சம் வாங்கியதில்லை, வெள்ளைக்காரன் நிர்வாகத்திலேயே! அந்தமாதிரி மனிதரைப் பார்த்தாலே நம் பாவம் விலகும். அவ்வளவு சீலர். சாஸ்திரங்கள் எல்லாம் படித்தவர். கனுந்தம் அத்யயனம் கூடச் செய்தவர்தான், பால்யத்தில். கீதை என்றால் அவருக்கு உயிர். தினம் ஒரு பத்து சுலோகமாவது சொல்லாமல் சாப்பிட மாட்டார்.

வெளியுலகில் அவர் நல்ல பெயர் எடுத்தது கூட ஆச்சரியமில்லை. காலணா லஞ்சம் வாங்காமல், பிறரை முகஸ்துதி செய்யாமல் முப்பது வருஷங்கள் உழைத்து உத்தியோகத்திலும் நல்ல பெயர் எடுத்தாரே, அதுதான் விசேஷம்! குமாஸ்தாக்களுக்கெல்லாம் அந்தக் காலத்தில் மாதம் இருபது, முப்பது ரூபாய்க்கு மேல் சம்பளமிருக்கவில்லை என்பதை நினைவு படுத்திக்கொண்டால் நான் சொல்லுவதன் கருத்து உங்களுக்குப் பிடிபடும்.

ஜடாவல்லபரின் ஆசைக்கும் ஆஸ்திக்குமாகப் பிறந்த ஒரே பிள்ளை ஸ்ரீகண்டன். பிள்ளை பிறந்த வேளையோ, அல்லது ஜடாவல்லபரின் துரதிர்ஷ்டந்தானோ—ஆறுவது வயதில் தாயை 'உருட்டி' விட்டான். அகாலத்தில் மனைவியை இழந்த துக்கத்தை, தாய்க்குத் தாயாகவும், தகப்பனுக்குத் தகப்பனாகவுமிருந்து பிள்ளையை வளர்க்கும் பொறுப்பில் மறந்து விட்டார், ஜடாவல்லபர். மறப்பது கஷ்டமாய்த்தான் இருந்தது அவருக்கு. எதிலும், யாரிடத்திலும் அளவு கடந்த அன்பு வைப்பது கஷ்டத்தில் தான் வந்து முடிகிறது.

அப்போது அவர் மறுவிவாகம் செய்து கொண்டிருந்தால் அவரை யாருமே குறை கூறியிருக்க முடியாது. குழந்தைக்காக அவர் செய்த நல்ல முடிவு என்றுதான் உலகம் தீர்மானிக்கும். ஆழ்ந்த யோசனை செய்து, 'மறுவிவாகம் கூடாது' என்று உறுதி பூண்டாரே—அதைத்தான் குழந்தைக்காகச் செய்த தியாகம் என்று நான் சொல்லுவேன்.

ஸ்ரீகண்டன் நன்றாகப் படித்தான். வயதுக்கேற்ற பொறுப்புணர்ச்சியும் அவனிடமிருந்தது. தகப்பனாரிடத்திலும் பிரியத்துக்குக் குறைவில்லை.

ஜடாவல்லபர், பையனுக்காகவே உயிர் வாழ்ந்தார் என்றால் மிகையாகாது. சினிமா நாடகம் என்று அவன் எங்கேயாவது போய் இருந்தாலும் அவன் திரும்பி வரும் வரை சாப்பிடாமலேயே காத்திருப்பார். அவனுக்குப் பன்னிரண்டு வயது ஆகும் வரையில், சனி புதன் தவறாமல் தம் கையாலேயே எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி வந்தார். அதற்கு மேல், வெட்கமாயிருக்கிறதென்று அவனே மறுத்துவிடவே அந்த வேலை அவரைவிட்டது.

ஸ்ரீகண்டன் எம். ஏ. பட்டம் பெற்றதும் சீமைக்குப் போய் மேலே படிக்கச் சர்க்கார் உபகாரச் சம்பளம் கிட்டியது அவனுக்கு. அவனை விட்டுப் பிரிவதில் அவருக்கு இஷ்டமேயில்லை. ஆனால், தன்னுடைய பாசத்தின் காரணமாக அவன் முன்னேற்றத்துக்குக் குறுக்கே நிற்க விரும்பவில்லை, அவர்.

'பணத்தைப் பற்றிக் கவலைப்படாதேடா, குழந்தை! இஷ்டப்படி தாராளமாகச் செலவு செய்து கொள். பாங்கியில் கடைசிக் காலணா மிச்சம் இருக்கும்வரை நீ கேட்டபோதெல்லாம் அனுப்பிக் கொண்டிருக்கிறேன். நீ பத்திரமாகத் திரும்பி வரவேண்டுமே என்பதுதான் என் கவலை. உடல் நலத்தைக் கவனித்துக் கொள்' என்று பையனுக்கு உற்சாகமூட்டி, பம்பாய் வரையில் சென்று வழியனுப்பி விட்டுத் திரும்பினார்.

பையன் தகப்பனார் சொன்ன பிரகாரம் நடந்து கொள்ளத் தவறவில்லை. படிப்பு விஷயத்திலும் மிகுந்த அக்கறை காட்டினான். செலவைப் பற்றி அவன் லட்சியமே செய்யவில்லை. அவன் பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு திரும்பி வந்தபோது ஜடாவல்லபரின் பாங்கிக் கணக்கில் மெய்யாகவே மிச்சமேதும் இல்லை. அதற்காக அவர் கவலைப்படவில்லை. பிள்ளையாண்டான் சம்பாதிக்கத் தொடங்கி விட்டால் அவருக்குக் குறையென்ன! பெற்ற தகப்பனுக்கு ஒரு வாய் கஞ்சி ஊற்றக் கூடவா அவன் சம்பளம் போதாது!



ஜடாவல்லபர் எண்ணியது வீண் போக வில்லை. சீமையிலிருந்து கப்பலேறுமுன்னே ஸ்ரீகண்டனுக்குப் பம்பாயில் எழுநூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை நிச்சயமாகி விட்டது. முதல் மாதம் கை நிறையச் சம்பளம் வாங்கிக் கொண்டு வந்து ஸ்ரீகண்டன் தன் தகப்பனு ரிடம் கொடுத்துவிட்டுப் பணிவுடன் நமஸ் கரித்த போது அவர் உள்ளம் பெருமிதத்தால் பூரித்தது. ஜன்ம சாபல்யமடைந்து விட்டது போலிருந்தது அவருக்கு. பெற்றவள் இருந்து பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்ற குறையை எண்ணி உள்ளூற அவர் வருந்தவும் செய்தார்.

வாழ்க்கையில் சுகம் துக்கம் எதுதான் நீடித்து நிலைக்கிறது! இரண்டுமே நீர்க்குமிழ் போலத்தான்!

எவ்வளவோ பேர் அவனுக்குப் பெண் கொடுக்க முன்வந்தனர். பணக்காரர்களிடத் தில் சம்பந்தம் செய்ய ஜடாவல்லபருக்கு அவ்வளவாக விருப்பமில்லை. சாதாரண வரு வாய் உள்ள கண்யமான குடும்பத்தில் சம் பந்தம் செய்யத்தான் அவர் மனம் விழைந் தது. ஆனால், ரிடையர்ட் ஜட்ஜ் ஒருவரின் பெண் ஞானபிடத்தில் ஸ்ரீகண்டனின் மனம் லயித்து விட்டது. டாக்டருக்குப் படித்து



விட்டுப் பிறகு 'ஹௌஸ் ஸர்ஜ'னாக வேலை பார்த்து வந்தாள் அவள்.

பிள்ளையாண்டான் இஷ்டப்படியே விட்டு விட்டார் ஜடாவல்லபர். எதிர்காலம் அவ னுடையது தானே! ஆதி முதல் தம் மகனின் விருப்பம்தானே அவர் விருப்பமும்! கல்யாணம் தடபுடலாகத் தஞ்சாவூர் பாண்ட், நாட்டியக் கச்சேரி இவைகளுடன் நடந்தேறியது. அன்று அவருக்கும் சனியன் பிடித்தது!'' சர்மா சற்று நிறுத்திவிட்டு, "என்ன, சங்கரலிங்கம் பிள்ளை! தூக்கமா!'' என்று கேட்டார்.

"தூக்கம் இல்லை. யோசனைதான்! இப்படி ஏதாவது நேரும் என்று நான் எதிர்பார்த் தேன். அந்தக் கட்டத்துக்குத்தான் நீங்களும் வந்திருக்கிறீர்கள் இப்போது'' என்று கூறினர் சங்கரலிங்கம்.

சர்மா தொடர்ந்து கூறினர்: "வெளுத்திருந்த வானம் திடீரென்று இருண்டு, இடியும் மின்ன லும் புயலும் வீசினால் எப்படி யிருக்கும்! அத்தகைய நிகழ்ச்சிகள் ஜடாவல்லபரின் வாழ்க்கையில் நடந்தேறின.

அதுவரை தனக்கென வாழ்ந்த ஸ்ரீகண்டன் இப்போது வேறொருத்திக்காக வாழத் தொடங் கினன். வாழ்க்கையின் போக்கையே முற்றி லும் மாற்றியமைத்துக் கொண்டான். படித்த மனைவி; டாக்டராக இருப்பவள்; நவநாகரிகத் தில் திளைத்திருப்பவள். தகப்பனர் ஆசார சீலர் என்பதற்காக அவனும் அப்படி யிருக்க முடியுமா!

மேஜைச் சாப்பாடு, தகப்பனரின் பூஜை அறை வரைக்கும் கால் செருப்பைக் கூடக் கழற்றாமல் நடப்பது, ஐரோப்பிய நண்பர் களுக்கு வீட்டில் 'காக்டெய்ல் பார்ட்டி'— ரீதியில் போகத் தொடங்கியது ஸ்ரீகண்டனின் போக்கு. பிள்ளைக்கும் தகப்பனுக்குமிடையே யிருந்த சகஜ பாவமும் குன்றத் தொடங்கியது. இவ்வளவுக்கும், அந்தப் பெண் ஞானபி என்னவோ தன் மாமனரிடத்தில் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளவே யில்லை. பண்பு குறையாமல், குடித்தனப் பாங்காகத்தான் வீட்டில் நடந்து கொண்டாள். தானும், தன் தகப்பனரும் சுத்த ஸர்வாடகம் என்று அவள் எண்ணி விடப் போகிருளே என்று ஸ்ரீகண்டன் தான் வெகுவாகக் கவலைப்பட்டான். அதற் காகவே அதி சீக்கிரத்தில் தன் பழக்க வழக் கங்களையும் மாற்றிக் கொண்டு விட்டான்.

ஜடாவல்லபர் மானி. சூக்ஷ்மமான அறிவு உடையவர். பிள்ளையாண்டான் தம்மிட மிருந்து விலகி வெகு தூரம் சென்று விட்டான் என்பதை எளிதில் கண்டுகொண்டார். அவரும் அதற்கேற்ப, விலகியேதான் இருந்து வந்தார். புத்தி சொல்லித் திருத்தும் வயதா, பிள்ளைக்கு!

ஏகாதசி, சனிக்கிழமை முதலிய தினங்களில் ஜடாவல்லபர் உபவாசமிருந்து பூஜை செய் வது வழக்கம். உத்தியோகத்திலிருந்த போது பூஜை மட்டுந்தான். ரிடையரான பிறகு உபவாசமும் சேர்ந்து கொண்டது. ஒரு சனிக் கிழமை அவர் தம் வீட்டில் பஜனை நடத்து வதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டார். ஜடாவல்லபரின் நண்பர்கள் அனைவரும் வந்து கூடி விட்டனர். நாமாவளிகள் பாடிக் கொண்

புதுமை பெறுக!

இதம் பெறுக! நன்மையாய் இருங்கள்!

நாள் முழுதும்!

சார்மிஸ் டால்கம் பவுடரை உபயோகித்து, அதன் சிறந்த நறுமணத்தை அனுபவியுங்கள். குளித்த பின் சார்மிஸ் டால்கம் பவுடரை மேலெங்கும் தூவுக. அது புதுமையும் குளுமையும் தருகிறது. அரிப்பு வராமல் அதன் பட்டுப்படலம் பாதுகாக்கிறது. சார்மிஸ் டால்கம் பவுடர் சிக்கனமான அத்யாவசியப் பொருள். இன்பம், அழகின் இரகசியம் அது.



சார்மிஸ்

டால்கம் பவுடர்

மிகவும்

சிறந்த இன்ப மணமுள்ளது

கால்கேட் சார்மிஸ் வாசனைத் திரவியங்களில் சகல-உபயோகிக்கும் ஸ்நோவும் டென்னை-எல்லாவித சருமங்களுக்கும் ஏற்ற இரு பிரபல வதன கிரீம்கள்

CM-TP6/5

ஆஸ்த்மா சளி

முதல் நாளே கரைகிறது

ஆஸ்த்மா, பிராங்கைட்டிஸ், அலர்ஜி தொடர்ந்த நாள் மூச்சுத்திணறல், இருமல், அம்மல், மூச்சடைப்பு உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இப்போது மெண்டாகோ (Mendaco) அருந்தி அற்புத நிவாரணம் அடைகிறார்கள். இந்த நவீன, விஞ்ஞான, அமெரிக்க மருந்து இரத்தத்தின் வழியே சுவாசப் பைகள், சுவாசக் குழாய்கள், மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் அம்மலின்றி சுகமாக சுவாசித்து குழந்தைபோல் தூங்கலாம். கெமிஸ்டிடம் மெண்டாகோ (Mendaco) வாங்குக. திருப்தி இன்றேல் பணம் வாபஸ்.

உலக மார்க்

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி



100 வருடங்களுக்கு மேலாக பிரக்யாதி பெற்றது

MA

ORIGINAL SHUNMUGAM SNUFF (ESTD-1839) CO.
POST BOX 140 MADRAS-1

டிருக்கையில் ஸ்ரீகண்டன் வீடு திரும்பினான். எரித்து விடுவது போலத் தன் தந்தையைப் பார்த்தான். நல்ல வேளையாக, அந்தப் பார்வையில் தகித்த கனலை மற்றவர்கள் கவனிக்கவில்லை. 'பூட்ஸ்' டக், டக் கென்று ஒலிக்க மாடியேறிச் சென்று விட்டான்.

அன்றிரவு பஜனை முடிந்து ஜடாவல்லபரின் நண்பர்கள் வீடு திரும்பியதும், புகைந்து கொண்டிருந்த நெருப்பு ஜுவாலை விட்டு எரிய ஆரம்பித்து விட்டது.

"இதென்ன, வீடா அல்லது பஜனை மடமா! தாம், தூம் என்று குதிப்பதும் ஓரேயடியாகப் பத்துப் பதினைந்து பேர்கள் கூச்சல் போடுவதும். சேச்சே! வீடு திரும்பினால் நிம்மதியாகப் படுக்க முடியவில்லையே!" மாடியிலிருந்தபடியே ஜடாவல்லபரின் காது கேட்க முணுமுணுத்தான் ஸ்ரீகண்டன்.

அவர் வாய் திறக்கவில்லை. தம் நிலைமை அவருக்குத் தெளிவாகி விட்டது. அதுதான் அவர் வீட்டில் நடந்த கடைசி பஜனை!

அதுவரை அவனுக்கு ஏணியாக இருந்தார் ஜடாவல்லபர். படிப்படியாக ஏறி மேலே போய் விட்டான் அவன். ஏணி இனிமேல் அவனுக்குத் தேவையில்லை. அதைத் தூர எறிந்துவிடவும் அவன் தயங்கவில்லை!

மைந்தனின் மீதுள்ள அபரிமிதமான பாசத்தின் காரணமாக, அவர் தம் இதய வேதனையைச் சகித்துக் கொண்டு மௌனமாக இருந்தார். வீட்டை விட்டு வெளியேற மட்டும் அவரால் முடியவில்லை. காரணம் பாசந்தான்!

மேலும் எட்டு மாதங்கள் இதே ரீதியில் ஊர்ந்தன. ஒரு நாள்.

'தசரத நந்தன ராம் ராம்
தசமுக மர்த்தன ராம் ராம்'—

தெருக்கோடியில் பஜனை கோஷ்டியினரின் குரல்கள் கேட்டன. பனி வாடையால் கரகரத்திருந்த கிழட்டுக் குரல்களுக்கு 'ஜங், ஜிங்' என்று ஜாலராக்கள் சுருதி கூட்டின. சால்வையை உதறிவிட்டு எழுந்து உட்கார்ந்த ஜடாவல்லபர் சாளரத்தின் மேல் கதவுகளைத் திறந்தார். 'ஜில்'லென்று வீசிய குளிர் காற்றில் சதைப்பற்று இல்லாத அவர் உடல் ஒரு முறை குலுங்கியது. 'மப்ளரை' எடுத்துக் காதுகளை மூடித் தலையைச் சுற்றிக் கழுத்தில் கட்டிக் கொண்டு வாசல் விளக்கைப் பொருத்தினார். மார்கழிப் பனி சதையைக் கடித்தது. ஒரு கணம் வாசல் வராந்தாவில் தயங்கி நின்றார்.

பிள்ளையாண்டானை எழுப்பிக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொள்ளச் சொல்ல வேண்டுமே! ஒரு வாரமாகவே இதே பிரச்னைதான்! மெல்ல நடந்து மாடிப்படி அருகில் சென்று, "அப்பா, குழந்தே!" என்றழைத்தார். மாடியிலிருந்து பதிலே இல்லை.

மறுபடியும் சற்று உரக்கக் கூப்பிட்டார். அவர் குரல் குளிரினால் நடுங்கியதோ, பயத்தினால் நடுங்கியதோ!

"இதோ வருகிறேன், மாமா!" என்று ஜானகி பதில் சொன்னதும், "நீ படுத்துக் கொள், ஜானகி! நான் போகிறேன்" என்று அவளிடம் கூறிவிட்டு, தடதட வென்று படி இறங்கி வந்தான் ஸ்ரீகண்டன்.




குடை: பிறந்தாலும் விசிறியாகப் பிறக்கணும். என்னைச் சொல்லு! கொளுத்தற வெய்யிலில் போயிட்டு வர வேண்டியிருக்கு......உன்பாடு தேவலை! வீட்டிலேயே காத்தாட இருக்கறே!

"எட்டு மாதக் கர்ப்பிணி! அவளை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள், அப்பா! நான்தான் ஒருத்தன் இருக்கிறேனே — இந்தச் சில்லறை வேலைக்கெல்லாம்! தூக்கக் கலக்கத்தில் அவள் மாடிப்படியில் விழுந்து வைத்தால் என்னவாகும்! இதுகூடவா தெரியவில்லை, உங்களுக்கு!" பொரிந்து தள்ளினான் அவன்.

"உன்னைத்தான் கூப்பிட்டேன். அவள் விழித்துக் கொண்டு விட்டாள்...உம், கொஞ்சம் கதவை......" தடுமாறினார் கிழவர். இந்த உபத்திரவத்தைத் தவிர்ப்பதற்காகவே, வாசல் வராந்தாவிலேயே படுத்துக் கொண்டு விடலாம் என்று கூடத் தீர்மானித்தார் அவர். சில்லென்ற பனி வாடை அதற்கு இடந்தரவில்லை. உறைந்து ஓடாகி விட்ட உடல். குளிர் காற்று சுரீரென்று நேரே எலும்புக்குள் பாய்ந்து தாக்கும் வேதனையைப் பொறுத்துக் கொள்ள அந்தக் கிழ சரீரத்துக்கு வலுவில்லையே!

கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார் ஜடாவல்லபர். படாரென்ற ஓசையுடன் கதவைச் சாத்திய ஸ்ரீகண்டன், "தினம் இது ஒரு 'நியூஸென்'சாப் போச்சு! வயசு ஆனாலே பிறத்தியாருடைய சிரமம் தெரியாது போலிருக்கு! வயசான காலத்திலே வீட்டோடு இருக்காமல் பஜனை, கூத்து — இதெல்லாம் என்ன வேண்டியிருக்கு வேஷம்!"—வைகறைத் துயில் கலைந்த ஆத்திரத்தில் என்ன பேசுகிறோம் என்றே தெரியாமல் வார்த்தைகளைக் கொட்டி விட்டான்.

ஜடாவல்லபருக்குத் தலை சுற்றியது. அவன் சொல்லிய ஒவ்வொரு வார்த்தையும் தெளிவாக அவர் செவியுள் நுழைந்தது. இதயத்தில் தைத்த முட்கள் பலவற்றை அதுவரையில் பல சந்தர்ப்பங்களில் எடுத்து எறிந்திருக்கிறார், பெற்ற பாசத்தின் காரணமாக. ஆனால் கடைசியாக ஸ்ரீகண்டன் கூறியது, நெஞ்சில் கோடரி விழுந்து பிளப்பது போலிருந்தது அவருக்கு.



சென்னை, மைசூர் பார்டிலைசர் கம்பெனியின் மானேஜிங் பார்ட்னர் ஸ்ரீ ஜி. ராஜகோபால் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி ஜி. நாகேந்த்ர பிரசாத்திற்கும், குப்பம் ஈஸ்ட் இந்தியன் சாண்டல் ஆயில் டிஸ்டிலரீஸ் லிமிடெட்டின் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ வி. வெங்கடரத்னம் அவர்களின் புதல்வி சௌ. குமாரி வஸந்தாவிற்கும் குப்பத்தில் சமீபத்தில் திருமணம் நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள் !

" 'நியூஸென்ஸ்' தான். இனிமேல் இந்த 'நியூஸென்ஸ்' இல்லாமல் சௌக்கியமா யிரு !" என்று சொல்லி விட்டு வெளியேறி வந்தார். நாளதுவரை அந்த வீட்டுப் பக்கம் எட்டிக் கூடப் பார்க்கவில்லை அவர்—" ஒரு நிமிஷம் இந்த இடத்தில் நிறுத்தி விட்டுச் சங்கரலிங்கத்தை ஏறிட்டுப் பார்த்தார், சர்மா.

"என்ன பிள்ளைவாள் ! அந்த ஜடாவல்லபர் அநுபவித்ததைவிட உமக்கு உமது அண்ணன் மகனால் என்ன கஷ்டம் வந்து விட்டது ! இந்தக் கேள்விக்குத்தான் உம்முடைய பதிலை எதிர்பார்க்கிறார் சர்மா !" என்றேன் நான்.

"என் பதில் இருக்கட்டுங்க ! மேலே கதையைச் சொல்லட்டுமுங்க !" என்றார் பிள்ளை.

சர்மா கூறினார்: "கட்டின வேஷ்டியோடு அன்று போனவர்தான் ஜடாவல்லபர் ! அவர் எங்கே போனார், என்ன செய்தார் என்றெல்லாம் எனக்கே ஐந்தாறு வருடங்களுக்கு ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. அவர் கர்மயோகி ; வலுவில் உயிரை விட்டு விடக் கூடியவரல்ல என்று தெரிந்திருந்தும் நான் தற்கொலை செய்து கொண்டிருப்பாரோ என்று கூடப் பயந்தேன்.

வீட்டை விட்டுச் சென்ற ஜடாவல்லபருக்கு ஒரு தர்ம ஸ்தாபனத்தில் சம்ஸ்கிருத வாத்தியாராக வேலைகிடைத்தது, சொற்பச் சம்பளத்தில். பிள்ளையின் தயவை எதிர்பார்க்காமல் அரை வயிற்றையாவது நிரப்பலாமல்லவா என்று உள்ளூறத் திருப்தி யடைந்திருந்தார் அவர். ஓழிந்தபோது இதை வகுப்புக்கள் நடத்தி வந்தாராம். சம்ஸ்கிருதப் பள்ளியில் வேலை பார்க்க முடியாத அளவுக்கு அவர் உடல் நலம் குன்றிவிட்ட நிலையில் யாரோ ஒரு நண்பர் அவரைத் தம் வீட்டோடு வந்து வசிக்கும்படி கேட்டுக் கொண்டாராம். அதற்கு ஜடாவல்லபர் மறுத்து விட்டார். 'உழைக்காமல் ஒரு வேளைச் சாப்பாட்டுக்குக்கூட யார் தயவையும் எதிர்பார்க்கிறதில்லை' என்று உறுதி பூண்டு விட்ட அவர் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து அந்த வரும்படியில் வாழச் சம்மதித்தார். அப்போது தான் அந்த எதிர்பாராத சந்திப்பு நிகழ்ந்தது.

அவர் டியூஷன் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தபோது, 'போர்டிகோ'வில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கியது வேறு யாருமில்லை ; சாட்சாத் ஸ்ரீகண்டன் தான் ! தகப்பனாரை முதலில் அடையாளங் கண்டு கொண்டது அவன்தான். தன் நண்பனைச் சந்திக்கவந்த இடத்தில் தகப்பனாரையே—டியூஷன் வாத்தியாராகச் சந்தித்ததும் அவன் பிரமித்து நின்றான்.

"அப்பா !" என்று வாய் நிறைய அழைத்தான். தன் தவற்றை புணர்ந்த பாவம் அந்த வார்த்தையில் பிரதிபலித்தது.

ஜடாவல்லபர் ஜாடையாகக் கையமர்த்தி, "இந்த நிலைமையிலிருக்கும் என்னை 'அப்பா' என்று அழைத்தால் இவர்கள் உன்னைப் பற்றிக் குறைவாக எண்ண இடமுண்டாகும். என்னைத் தெரியாதது போல் உள்ளே போய்விடு...உம், ஜானகி சௌக்கியந்தானே ! உன் குழந்தை... பெண்ணா, பிள்ளையா !" என்று மெல்லிய குரலில் கேட்டார்.

கண்களில் நீர் சோர, சாஷ்டாங்கமாக அவரை நமஸ்கரித்து எழுந்த ஸ்ரீகண்டன், "என்னை மன்னித்து விடுங்கள், அப்பா ! உங்களிடம் நான் நடந்து கொண்டதற்குத் தண்டனையாக இனி எனக்குக் குழந்தையே இல்லை என்றாகிவிட்டது. ஜானகி பிழைத்ததே புனர் ஜன்மம் !" என்று விம்மல்களுக் கிடையே கூறியவன், தகப்பனாரைத் தன்னோடு வந்து விடும்படி மன்றாடினான்.

"இரைந்து பேசாதே ! உன் விலாசத்தைக் கொடு. நாளைக் காலையில் நானே வருகிறேன்" என்று சொன்னார் ஜடாவல்லபர்.

ஜடாவல்லபருக்கு இந்த உலகில் சொந்தமாயிருந்தது ஒரு சிறு ஓலைப் பெட்டிதான். அதற்குள்தான் அவருடைய பூஜைச் சாமான்கள் சில இருந்தன. அந்தப் பெட்டியை மட்டும் எடுத்துக் கொண்டு இரவோடு இரவாக எங்கேயோ சென்று விட்டார் அவர். பிள்ளையின் வீடு தேடிப் போக அவருக்கென்ன, பைத்தியமா !" என்று கேட்டு நிறுத்தினார் சர்மா.

சங்கரலிங்கம் சர்மாவை நோக்கி, "நீங்கள் சொன்னதுபோல, ஏதோ நல்ல நிலைமையிலே இருக்கிறபோதே அண்ணன் மகன் ஏதோ சொன்னான்னு மனசைக் குழப்பிக்கிட்டேனே, நான் ! ஜடாவல்லபருக்கு ஏற்பட்டதைப்போல ஒரு அநுபவம் ஏற்பட்டிருந்தால் என்னாலே அதிலிருந்து மீளவே முடியாதுங்க. அந்த நிலைமையிலும் படபடப்பாக ஒரு வார்த்தை சொல்லாமலிருந்தாரே — அவரு சாதாரண மனிதரா ! தூய்மையின் வடிவம் !" என்று ஒப்புக்கொண்டு எழுந்தார்.

சர்மா சிரித்தவாறு அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டார்.


மேம்பட்ட புருஷர்கள்
இந்த அடையாளத்தையே
தேர்ந்தெடுக்கிறார்கள்
தி நியூ ஷொராக்

தேவியின் கடிதம்

பண்பாடு வேண்டும்

—வசுமதி ராமசாமி—

அன்புக்குரிய சகோதரி சுஜாதா.

சிலரை நாம் பார்க்கப் போனால் நம் சுகத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கேட்க மாட்டார்கள். தங்கள் பெருமையையோ தங்கள் குழந்தைகளின் பெருமையையோ அல்லது இல்லாத குறைகளையோ அடுக்கிக் கொண்டே போவார்கள். ஒரு மணி நேரம் பொறுமையாக இருந்து கேட்ட பிறகு நாமாக நம்மைப் பற்றிச் சொல்லிக் கொள்ள நாவெழாமல் திரும்ப வேண்டியதுதான்.

நல்ல கடும் வெய்யிலில் ஒரு வீட்டுக்குப் போகிறோம். தாகத்துக்குத் தண்ணீர்கூடத் தேவையாவெனக் கேட்காமல் இருந்து விடுகிறார்கள். அதுகூடத் தேவலை. 'நீங்களென்ன, எங்கள் வீட்டில் சாப்பிடுவீர்களா?' என்று சொல்கிறார்களே அதுதான் பொறுக்க முடியாதது. 'ஏன் சாப்பிட மாட்டேன்? கொண்டு வாருங்கள்' எனச் சொல்லத் தைரியம் வருவதில்லை. அதிகமாக வற்புறுத்திக் கடுக்காய் கஷாயம் போன்ற காப்பியைக் கொடுத்து உபசாரம் செய்வதும் கஷ்டமாகத்தானிருக்கிறது. எதிலும் மிதமிருக்கிறதல்லவா?

நம்முடைய வீட்டுக்கு ஒருவர் வந்தால் கூடியமட்டும் அவர்கள் விரும்பும் விஷயத்தைப் பேசி அன்புடன் உபசரித்து வாசல் வரையில் சென்று வழி அனுப்புவதுதான் தகுந்த மரியாதை. சில சமயம் வருகிறவர்கள்கூட யாராவது புது சகோதரியை அழைத்து வரலாம். அவர்கள் யாரென்று நாம் மரியாதையாகக் கேட்டறிந்து கொள்வது நலம். ஏனென்றால் நாம் அறியாமல் யாரையாவது பற்றிக் குறையாகப் பேசுவோம். அவர் நமக்கு எதிரிலேயே நிற்கும் புது சகோதரியாக இருக்கலாம். பிறகு நிலைமை எக்கச்சக்கமாய் விடும். கூடிய மட்டும் தனிப்பட்டவர்களைப் பற்றிப் பேசுவதை விடுத்து, பொது விஷயங்களைப் பற்றிப் பேசத்தான் முயற்சி செய்ய வேண்டும். நாமும் ரஸமாகப் பேசினால்தான் கேட்பவரும் விரும்புவார்கள்.

கோடைக்கானலில் ஒரு தோழி வீட்டுக்குப் போயிருந்தோம். திரும்பும்போது, குடையை அங்கேயே வைத்துவிட்டு மறந்து விட்டோம். சிறிது தூரம் வந்த பிறகு நினைவு வந்தது. மறுபடியும் அவர்கள் வீட்டுக்குப் போனோம். வீட்டுக்கார அம்மாள், "இவள் மஞ்சளை வாரிப் பூசிக் கொண்டு மஞ்சள் காமாலைக்காரி மாதிரி இருக்கிறாள். பட்டிக்காடு" என்றாள். அவள் பெரிய பெண் — இரட்டைப் பின்னல் கொல்லென்று சிரித்தாள். என்னைக் கண்டதும் அந்தம்மாள் முகத்தில் அசடு தட்டியது. வீட்டுக்கு யாராவது வந்து விட்டுப் போனால் அவர்களைப் பற்றி விமரிசனம் செய்வதோ பரிகசிப்பதோ மிகவும் தவறு.

ஒரு சமயம் என் தோழி வீட்டுக்குப் போயிருந்தேன். அவள் என்னை அன்போடு வரவேற்று உபசரித்தாள். பிறகு தன் ஆறுவயது நிரம்பிய பெண்ணைக் கூப்பிட்டு, "ஏன் பள்ளி கொண்டீரய்யா?" என்ற பதத்துக்கு அபிநயம் பிடித்துக் காட்டச் சொன்னாள். குழந்தை நல்ல சமர்த்துத்தான். அன்று அதற்கு மனமில்லை. என் சிநேகிதி விடுவதாக இல்லை. அதை வற்புறுத்திச் சொல்லச் சொல்ல அதற்குப் பிடிவாதம் அதிகமாயிற்று. குழந்தை பிடிவாதத்துக்குமேல் என் தோழிக்கு அதிகமாகக் கோபம் வந்தது. அதை மிரட்டி அதட்டிச் சொல்லவே குழந்தை அழ ஆரம்பித்தது. "பரவாயில்லை! குழந்தையை விட்டு விடு. இன்னொரு சமயம் ரொம்ப நன்றாகச்செய்து காட்டுவாள்" என்றெல்லாம் சொல்லிப் பார்த்தேன். அவள் காதில் விழவேயில்லை. எனக்கு அவள் கொடுத்த காப்பியை அருந்தக்கூடத் தோன்றவில்லை. இது என்ன அறியாமை?


என் தோழி அத்துடன் விட்டாளா? நாங்கள் விடைபெற்றுக் கொண்டு காரில் ஏறினோம். சின்ன ஒன்றரை வயதுப் பையனை எடுத்துக் கொண்டு, 'மாமிக்கு 'டாட்டா' சொல்லு' என்றாள். குழந்தையோ விழிக்கிறது. அவளோ வண்டியைப் பிடித்துக் கொண்டு நிற்கிறாள். எங்கள் வண்டிக்கு மிகவும் கௌரவம் கொடுத்திருக்கிறோம். அது இஷ்டமிருந்து புறப்பட்டு விட்டால் பிறகு நிற்காது. நின்றால் கிளம்பாது. திருவாரூர் தேர்தான். 'குழந்தை கையை ஆட்டி விட்டானே சமர்த்துக் கண்ணு' என்றெல்லாம் ஆர்ப்பாட்டமாகச் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்த்தேன். அவள் அதற்கெல்லாம் ஏமாறவில்லை. 'பாபு நன்றாகச் சொல்வானே. இன்னொரு தடவை சொல்லடா' என்றாள். குழந்தை திருதிருவென்று விழித்தது. என் தோழி முகத்தில் அசடு வழிந்தது. இதைப் பார்க்கச் சகிக்காமல் கார் உடனே அங்கிருந்து கிளம்பி விட்டது.

—பூமாதேவி

இந்த வித்தியாசத்தைக் கவனியுங்கள் :

வெண்மையான ஆடைகளை அதிவெண்மையாக்குகிறது





சாதாரண சோப்பினால் சுத்தம் செய்த பின் உங்களுடைய வெண்மையான ஆடைகளுக்கு டினோபால் உபயோகிப்பதால், நீங்கள் எவ்வித தோற்றமளிக்கின்றீர்கள் எனப் பாருங்கள், வெண்மையான ஆடைகளைப் பிரகாசமாகவும், பளபளப்பான வெண்மையுடனும் வைக்கச் செய்யும் பிரத்தியேகமான தொருகுணம் டினோபாலிலடங்கியுள்ளது.



டினோபால்

ஜே. ஆர். கேய்கி, எஸ். ஏ. (பாஸ்லி, ஸ்விட்சர்லாந்து)
வின் ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க் "டினோபால்"

அமால்கமேடட் கெமிக்கல்ஸ் அண்ட் டைஸ்டப்ஸ் கோ, பிரைவேட் லிட்.,
பி. ஓ. பாக்ஸ் 965, பம்பாய்.



தாமரைப்புரத்தில் பெரிய கல்லூரி. இந்த ஊரைப் படத்திலாவது புத்தகத்திலாவது தேடாதீர்கள். அது உண்மைப் பெயரல்ல. கல்லூரி மாணவர்கள் 'சோஷல் ஸர்விஸ்' செய்யப் புறப்பட்டார்கள். கணக்கு வாத்தியாரின் தலைமையில் புறப்பட்டார்கள். 'சோஷல் ஸர்விஸ்' என்றால் ஏழைகளுக்கு உபகாரம் செய்வது.

பக்கத்தில் வேட்டுவன் பட்டியில் மழை அதிகமாகப் பெய்து வீடுகளுக்குச் சேதம் உண்டாயிற்று.

மாணவர்கள் புறப்பட்டார்கள். திமுதிமு வென்று லாரியிலிருந்து கிராமத்தில் இறங்கினார்கள்.

அவர்களைப் பார்த்ததும் "சுவாமி! வீடுகளெல்லாம் ஒழுகி ரொம்பக் கஷ்டப்படுகிறோம்" என்றார்கள் அந்தக் கிராமத்துக் குடிகள்.

"எல்லாவற்றையும் நாம் சரிப்படுத்தி விடுகிறோம்!" என்றார் கணக்கு வாத்தியார்.

"ஏறுங்கள் வீட்டு மேலே!" என்றார் வாத்தியார். மாணவர்கள் கொஞ்சம் தயங்கினார்கள். அவர்களுக்கு இந்த விதமான காரியங்கள் புதிசு.

"ஏன் சும்மா நிற்கிறீர்கள்? நான் ஏறிக் காட்டுகிறேன்!" என்று கணக்கு வாத்தியார் ஏறினார். கிழவர் ஏறியதைக் கண்டு மாணவர்களும் ஏறினார்கள். சிலர் ஏறிக் கூரைமேல் நின்றார்கள். அவர்களைக் கூரைமேல் பார்த்ததும் மற்றவர்களுக்கு உற்சாகம் உண்டாயிற்று. எல்லாரும் வேகமாக ஏறினார்கள்.

"ஐயோ! ஈர ஓட்டின் மேல் இப்படி ஏறி நடந்தால் எல்லாம் உடைந்து போகுமே!" என்று கதறினாள் வீட்டுக்காரி.

அப்படியேஆயிற்று! இங்கும் அங்கும் நடந்து ஓட்டைப் பார்த்தார்கள். நடந்த இடமெல்லாம் ஓடு உடைந்தது. மழையில் சேதமாகாத ஓடுகளும் உடைந்தன. கணக்கு வாத்தியாருக்கு ஈர ஓடுகளின் விஷயம் தெரியாது. மாணவர்கள், பாவம், என்ன கண்டார்கள்?

"ஏமே இறங்குங்கள்! இறங்குங்கள்!" என்று அந்த வீட்டுக்கார ஏழை பலமாகக் கத்தினான். எல்லாரும் இறங்கினார்கள்.

"பயப்படாதே, அண்ணனே! நாம் எல்லாம் சரிப்படுத்தி விடுவோம். புது ஓடுகள் வாங்கப் பணத்துக்கு எழுதி வரவழைத்து எல்லாம் மராமத்து செய்து விடுவோம்" என்றார் கணக்கு வாத்தியார்.

அவர்கள் தாமரைப்புரம் திரும்பினார்கள். அந்த ராத்திரியும் வேட்டுவன் பட்டியில் மழை பெய்தது. ஏழை வீட்டில் குழந்தை குட்டிகள் ரொம்பக் கஷ்டப்பட்டார்கள். வீட்டுக்காரி தன் புருஷனை மிகவும் நொந்து கொண்டாள்.

"இந்தமாதிரி குரங்குகளை வீட்டின்மேல் ஏற்றி எல்லாம் கெடுத்தீர்களே!" என்று சொல்லிச் சொல்லி அழுதாள்.

பாவம், அவன் என்ன செய்வான்! வாத்தியாருடைய அறியாமையும் சோஷல் ஸர்விஸ் ஊக்கமும் இப்படி முடிந்தது.

கணக்கு வாத்தியார் மேலுக்கு எழுதி எழுதிப் பார்த்தார். உடைந்த ஓடுகளுக்கு பர்த்தி செய்யப் பணம் கொடுக்கச் சொல்லி விண்ணப்பம் செய்தார். சர்க்கார் காரியதரிசி முடியாது என்று சொல்லி விட்டார். மாணவர்களும் வாத்தியாரும், பாவம் தங்களுக்குள்ளேயே பணம்

வசூல்செய்து குடியானவனுக்குக் கொடுத்தார்கள். இதற்கு மூன்று மாதங்களாயிற்று.

ஈர ஓட்டின் மேல் அவசரப்பட்டு ஏறக் கூடாது என்கிற படிப்பை அடைந்தார்கள். வசூலித்த பணத்தைக் கொடுக்க அந்தக் கிராமத்துக்கு வாத்தியாரும் சில மாணவர்களும் சென்றார்கள்.

"நீங்கள் மகாராஜாவாக இருங்கள்!" என்றாள் வீட்டுக்காரி. பணத்தைக் கண்டதும் அவளுக்கு வெகு சந்தோஷம்.

வாத்தியாருக்கும் ரொம்ப சந்தோஷம், அவளிடம் 'திட்டு வாங்காமல் திரும்பினோமே!' என்று.

'இனிமேல் அவசரப்பட்டு நமக்குத் தெரியாத காரியங்களில் பிரவேசிக்கக் கூடாது' என்று மாணவர்கள் தீர்மானித்தார்கள்.

'ஓடு எப்படிச் செய்கிறார்கள்? எங்கே செய்கிறார்கள்?' என்றெல்லாம் தெரிந்து கொள்ள அந்தக் கிராமத்துக் குயவன் வீட்டண்டை சென்றார்கள். களிமண்ணையும் சக்கரத்தையும் குயவன் வேலையையும் பார்த்தார்கள். களிமண்ணிலிருந்து பாண்டங்கள் உண்டாவதைப் பார்த்து மாணவர்கள் வியந்தார்கள்.

"போகலாம், திரும்பிப் போகலாம்! நேரமாயிற்று!" என்று வாத்தியார் சொன்னார். மாணவர்களுக்கு அந்த இடத்தை விட்டுத் திரும்பவே மனமில்லை.




"என்ன விளக்கமான படங்கள்! உன்னிடம் மிகவும் விலையுயர்ந்த காமிரா இருக்கிறதா?"
"இல்லையே — சாதாரண 'ப்ரௌனி' காமிராதான். ஆனால் நான் கோடக் 'ப்ளஸ்-X' பிலிம் உபயோகிக்கிறேன். விளக்கமாய் படங்கள் எடுக்க அது மிகப் பிரமாதமானது."
Kodak
Kodak PLUS-X
Kodak PLUS-X SAFETY FILM
கோடக் 'ப்ளஸ்-X' பிலிம் உபயோகிப்பதால் தெளிவானதும், சுத்தமானதுமான படங்களைப் பெறுவதுடன், சிறிய நெகட்டிவ்களிலிருந்தும் கூட அழகான என்லார்ஜ்மெண்டுகள் உங்களுக்கு எடுக்க முடியும்.
சேர்த்தியான படங்கள் எடுக்க, 'கோடக்' பிலிம் எப்பொழுதும் உபயோகியுங்கள். மேலும் கையில் பிலிம் இல்லாமல் அரிய சந்தர்ப்பங்கள் நழுவுவதைத் தவிர்க்க, எப்பொழுதும் உங்கள் கோடக் வியாபாரியிடம், உபயோகத்திற்கு ஒன்றும், கைவசத்திற்கொன்றுமாக இரண்டு சுருள்கள் வாங்குவது உத்தமம்.
கோடக் லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது : கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்



பெட்டி எங்கே?

"விசுவம்"

ரங்குவின் அக்காவுக்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமை கலியாணம் நிச்சயமாகி யிருந்தது. ஊரிலிருந்து ரங்குவின் மாமா வந்திருந்தார். ரங்கு வீட்டுக்குள் ஏக அமர்க்களமா யிருந்தது.

மாமாவைக் கண்டதும் ரங்கு ஒரே குதியாய்க் குதித்தான். அவர் தான் கொண்டு வந்த பெட்டியை வாசல் பக்கம் ஒரு மூலையில் வைத்து விட்டு உள்ளே போனார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த யாரோ ஒரு திருடன் சத்தம் செய்யாமல் பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓட்டம் பிடித்தான். எல்லோரும் உள் பக்கம் பேசிக் கொண்டிருந்ததால் திருடன் பெட்டியை எடுத்துச் சென்றதை ஒருவரும் கவனிக்கவில்லை. ரங்கு மாமாவைக் குளித்து விட்டுச் சாப்பிடும்படி சொன்னான். அவன் மாமா மணிபர்ஸை எடுத்து முன் ஹாலில் இருந்த சோபா மீது வைத்து விட்டுக் குளிப்பதற்காகக் குழாயடிக்குப் போனார். அப்போது ஒரு நாய் ரங்கு வீட்டுக்குள் வேகமாக ஓடி வந்து குரைத்தது. எல்லாரும் அதை விரட்டினார்கள். நாய் ரங்கு மாமா சோபா மீது வைத்திருந்த மணிபர்ஸை வாயில் கௌவிக் கொண்டு ஓடியது. "மணிபர்ஸ்! மணிபர்ஸ்!" என்று சொல்லிக் கொண்டு எல்லாரும் நாயைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள். நாய் சற்று முன்னால் பெட்டியை எடுத்துக் கொண்டு ஓடும் திருடன் சென்ற திசையில் வேகமாக ஓடியது.

அந்தத் திருடன் நாய் துரத்துவதைக் கண்டு விட்டு மேலும் வேகமாக ஓடினான். நாய் அவனை நெருங்கி முன்னால் போய் வழி மறித்துக் கொண்டு அவனை மேலே போக விடாமல் தடுத்து விட்டது. இதற்குள் நாயைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தவர்கள் அங்கே வந்து விட்டார்கள். திருடன் வைத்திருந்த பெட்டியின் மீது ரங்குவின் மாமா பெயர் எழுதப் பட்டிருந்தது. திருடனைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டு திரும்பி வந்தார்கள்.

இதற்குள் அந்த நாய் மணிபர்ஸுடன் வேகமாக ரங்கு வீட்டுக்கு ஓடிப் போய் பர்ஸைப் பழையபடியே சோபாவின் மீது போட்டு விட்டு எங்கேயோ மறைந்து விட்டது.

ரங்கு வீட்டில் இருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. நாய் எதற்கு மணிபர்ஸை எடுத்துக் கொண்டு போயிற்று? மறுபடியும் ஏன் கொண்டு வந்து பழையபடியே வைத்து விட்டு மறைந்து விட்டது என்று அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள்.

திருடனைப் பிடித்துக் கொண்டு வந்தவர்களில் ஒருவர், "நாய் மட்டும் இத் திருடனைக் காண்பிக்கவில்லையென்றால் இன்று இந்தப் பெட்டியும் இதிலுள்ள சாமான்களும் போயிருக்கும்" என்றார்.

"ஆமாம்; நாய் எதற்கு மணிபர்ஸை எடுத்துக் கொண்டு ஓடியது?" என்று கேட்டார் மற்றொருவர்.

"அது மணிபர்ஸை எடுத்துக்கொண்டு ஓடியதால்தானே நாம் அதைத் துரத்திக் கொண்டு சென்றோம்? அது நமக்குத் திருடனைக் காட்டிக் கொடுக்கவே அப்படிச் செய்திருக்கிறது. அது குரைத்தபோது நாம் யாவரும் கவனிக்கவில்லை. அதனால் மணிபர்ஸைத் தூக்கிக் கொண்டு ஓடிற்று!" என்றார் இன்னொருவர்.

"அது ரொம்ப அறிவுள்ள நாய். அதை நாம் வளர்க்கலாம்" என்றார் ஒருவர்.

"மணிபர்ஸ் எங்கே?" என்று கேட்டார் ரங்குவின் மாமா.

"அதை நாய் கொண்டு வந்து பழையபடியே வைத்துவிட்டது" என்றான் ரங்கு.

"அடாடா! நாய்க்கு என்ன புத்தி!" என்று வியந்தார்கள் அனைவரும்.

பலூன், பலூன்!

ராஜி

சந்துருவும், அவன் தங்கை சங்கரியும் கடற்கரைக்கு வந்திருந்தார்கள். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆனதால் கடற்கரையில் ஏராளமான கூட்டம். அன்று சிறுவர்கள் கூட்டமும் அதிகம். விளையாட்டுச் சாமான் விற்கும் வியாபாரிகளுக்குக் கொண்டாட்டந்தானே? சந்துருவும், சங்கரியும் உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு அருகே ஒருவன் பலூன்களை விற்றுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் ஏராளமான பலூன்களை ஒரு கழியில் அடுக்கு அடுக்காகக் கட்டி வைத்திருந்தான். அவை பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தன. சந்துருவும் சங்கரியும் பலூன்களைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தனர். அப்போது பலூன் விற்பவன் சந்துருவைக் கூப்பிட்டு, "தம்பி! கொஞ்ச நேரம் இந்தப் பலூன்கள் கட்டி இருக்கும் கழியைப் பிடித்துக் கொண்டிரு. இதோ வந்து விடுகிறேன். திரும்பி வந்ததும் உங்கள் இருவருக்கும் ஆளுக்கு ஒரு பலூன் தருகிறேன்" என்றான்.

சந்துருவும், "சரி" என்றான்.

பலூன்களைக் கட்டி வைத்திருக்கும் கழியைச் சந்துருவும், சங்கரியும் மிகவும் சந்தோஷத்துடன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு கிழவர் அழுது கொண்டிருக்கும் ஒரு பையனைக் கையில் பிடித்துக் கொண்டு அங்கே வந்தார். வந்தவர், "தம்பி! இந்தப் பலூன்கள் என்ன விலை?" என்று சந்துருவைக் கேட்டார்.

சந்துரு, "தாத்தா! பலூன்காரர் சீக்கிரம் வந்து விடுவார். சற்று நேரம் இருங்கள்" என்றான்.

தாத்தா சற்று நேரம் காத்திருந்தார். ஆனால் அவருடன் வந்த சிறுவன் பலமாக அழத் தொடங்கினான். ஒரு பலூனைச் சுட்டிக் காட்டி, "இப்பவே வாங்கித் தந்தால் ஆச்சு" என்று அடம் பிடித்தான். உடனே கிழவர், "எனக்கு இந்தப் பையன் தொந்தரவு பொறுக்க முடியவில்லை. நாலணா தருகிறேன். அதோ அந்த நடுவிலிருக்கும் பலூனை எடுத்துக் கொடு" என்று கேட்டார்.

சந்துரு, பலூன்காரர் தன்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னாரே தவிர, விற்கச் சொல்லவில்லையே. என்ன செய்வது என்று யோசித்தான்.

உடனே சங்கரி, "ஒரு பலூனை நாலணாவுக்கு விற்றால் பலூன்காரர் நம்முடைய சாமர்த்தியத்தைக் கண்டு மிகவும் சந்தோஷப் படுவார்" என்றான்.

சந்துரு உடனே, "சங்கரி! நீ உட்கார்ந்து



கொண்டு கழியைக் கெட்டியாகப் பிடித்துக் கொள். நான் நடுவிலே இருக்கும் பலூனைக் கழற்றித் தாத்தாவிடம் கொடுக்கிறேன்" என்று அந்தப் பலூனை எடுக்க முயன்றான். அது நன்றாகக் கட்டப்பட்டிருந்ததால் சந்துருவின் கைகளுக்கு வரவில்லை. சந்துரு சற்றுக் கோபத்துடன் பலூனைக் கழற்றினான். அப்பொழுது 'டபார்' என்று ஓசைப் பட்டது. பலூன்களெல்லாம் அடுக்கு அடுக்காக ஒரே கயிற்றில் சேர்த்துக் கட்டப்பட்டிருந்ததால் கயிறு அறுந்தவுடன் அவை கயிற்றைவிட்டு வெளியே பறக்க ஆரம்பித்தன. அப்பொழுது பலமான காற்று வீசவே எல்லாப் பலூன்களும் வானத்தில் பறக்க ஆரம்பித்தன.

"வா, அண்ணா! கைக்கு அகப்படுகிற பலூன்களையாவது கொண்டு வரலாம்" என்றாள் சங்கரி. இருவரும் பறக்கும் பலூன்களைத் துரத்திக் கொண்டே ஓடினார்கள்.

இதைக் கண்ட எல்லாக் குழந்தைகளும் 'ஓ' வென்று சந்தோஷத்தோடு குதித்துக் கொண்டு பின்னால் ஓடினார்கள். ஆனால் என்ன பிரயோஜனம்? ஒரு பலூனையாவது ஒரு குழந்தையும் கைப்பற்றவில்லை. சில பலூன்கள் பறக்கும் பொழுதே 'படார்' என்று வெடித்தன. சில பலூன்கள் ஒருவர் கையிலும் அகப்படாமல் எங்கெங்கோ சென்று மறைந்தன. "பலூன்காரர் வந்தால் என்ன செய்வது?" என்று சந்துருவும் சங்கரியும் பயந்தனர்.


அப்போது ஒருவர் அங்கே வந்து சந்தோஷத்துடன், "உங்கள் பெயர் என்ன?" என்று கேட்டார். இருவரும் தங்கள் பெயர்களைச் சொன்னார்கள்.

உடனே அவர், "குழந்தைகளே! ரொம்ப சந்தோஷம்! நான் ஒரு சினிமா டைரக்டர். நாங்கள் தயாரிக்கப் போகும் படத்துக்குச் சமுத்திரக் கரையில் குழந்தைகள் கூட்டமாக விளையாடும் காட்சி ஒன்று தேவையாக இருந்தது. நீங்கள் பலூன்களைப் பறக்க விடாவிட்டால் இந்த மாதிரியான குழந்தைகள் கூட்டத்தை நாங்கள் படம் பிடித்திருக்க முடியாது. பலூன்காரனுக்குச் சேர வேண்டிய தொகையை விசாரித்து நான் கொடுத்து விடுகிறேன். இப்பொழுது எல்லாரும் உட்காருங்கள். உங்கள் எல்லோருக்கும் தித்திப்பான தின்பண்டங்கள் வாங்கி வரச் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது கொடுப்பார்கள். உங்கள் இருவரால் மற்றக் குழந்தைகளுக்கெல்லாம் கூட சந்தோஷம், இல்லையா?" என்றார்.




வேடிக்கை விளையாட்டு





பூச்சாண்டி! நீ போய் விடு. இல்லாட்டா அப்பாவைக் கூப்பிடுவேன்!




நடுவிலிருக்கும் கருப்பு வட்டங்களில் எந்த வட்டம் பெரிது யூகமாகச் சொல்லுங்கள். பிறகு அளந்து பாருங்கள்.



1
காக்கா பார்! சாப்பிட்டுடு!
எனக்கு காக்கா வேண்டாம் மயில் காட்டு
2
மயில் கேட்டயே, வந்துத்து பார்!



மிருகங்களின் வால் வெவ்வேறு இடத்தில் இருக்கிறது. எந்தெந்த வால் எங்கெங்கே இருக்க வேண்டும் என்பதைக் கண்டுபிடி. குரங்கின் வாலை மட்டும் தேட வேண்டாம்! அது வாலில்லாக் குரங்கு.
1
2
3
4
5



1
2
3

ருஷ்ய நாட்டு நாடோடிக் கதை

ஆப்பிள்




முன்னொரு காலத்தில் பேர்னடீ என்றோர் அரசன் இருந்தான். அவ னுக்கு மூன்று புதல்வர்கள். கடைசி மகனுடைய பெயர்தான் ஐவான்.

அரசனுக்கு அழகானதோர் நந்த வனம் இருந்தது. அந்தத் தோட் டத்தில் தங்க ஆப்பிள்கள் காய்க் கும் ஓர் ஆப்பிள் மரமும் இருந்தது.

ஒரு நாள், அந்த அழகிய தோட்டத்தில் இருந்து தங்க ஆப் பிள்களை யாரோ திருடிக் கொண்டு போகிறார்கள் என்கிற செய்தி வந்தது. அதைக் கேட்டு அரசன் ரொம்பவும் வருத்தப் பட்டான். ஆயினும் நல்ல காவல்காரர்களைத் தோட்டத்துக்கு அனுப்பித் திருட னைக் கண்டு பிடிக்கச் சொன்னான். அவர்களால் திருடனைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

இதை அறிந்து ஸாரின் வருத் தம் இன்னும் அதிகமாகியது. இந்த வருத்தத்தில் அன்ன ஆகாரம் ஒன் றும் வேண்டியிருக்கவில்லை. தந்தை யின் இந்த நிலையைக் கண்ட புதல் வர்கள், "அப்பா! இதற்காக நீங்கள் வருத்தப் படாதீர்கள். நாங்களே தோட்டத்தைக் காவல் காத்துத் திருடனைக் கண்டு பிடிக்கிறோம்" என்றனர்.


அதற்கேற்ப மூத்தவன் "இன்று நான் காவல் இருக்கிறேன்" என்று



மொழிபெயர்ப்பு:

எஸ்.வி.எஸ்.

திருடன்



மிகவும் உற்சாகமாகக் கூறினான்.

மற்றவர்களும் இதற்குச் சம்மதிக்கவே மூத்த புதல்வன் காவல் காக்கத் தோட்டத்துக்குப் போனான். சாயங்காலம் வரையில் தோட்டத்தில் அலைந்தான். திருடன் யாரும் அவன் கண்ணில் படவில்லை! அதனால் இரவு வந்ததும், தோட்டத்துப் புல்லில் படுத்துத் தூங்கிப் போய் விட்டான்!


மறுநாள் காலை அரண்மனைக்குப் போனான். அரசனும் அவனை, "என்னப்பா! நல்ல சமாசாரம் ஏதாகிலும் உண்டோ? திருடனைக் கண்டு பிடித்தாயா?" என்று ஆர்வத்தோடு கேட்டான்.

"இல்லையப்பா! இராத்திரி யெல்லாம் கண் இமைக்காமல் விழித்திருந்தேன். ஒருவனும் கண்ணில் படவில்லையே?" என்றான்.

அடுத்தநாள் இரண்டாவது மகன் காவல் காக்கப் போனான். அவனும் மூத்தவனைப் போலவே தூங்கிப் போய் விட்டான். மறுநாள் அரண்மனைக்கு வந்து தான் ஒரு திருடனையும் பார்க்கவில்லை என்று சொன்னான்.

இப்பொழுது கடைசிக் குமாரனுடைய முறை வந்தது. அவன் தந்தையின் தோட்டத்துக்குப் போனான். போய்ச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான். உட்காரவே இல்லை. உட்காரவே இல்லை என்றால் அவன் படுத்திருப்பானா? தூக்கம் வரும்போல் தோன்றினால் முகத்தில் தண்ணீர்தெளித்துத் துடைத்துக் கொண்டு தூக்கத்தைக் கலைத்துக் கொள்வான். ஆந்தை போல் விழித்துக் காவல் காத்தான்.

இப்படி விழித்துக் கொண்டிருந்தபோதே அங்கே அவன் கண்களுக்கு ஒரு காட்சி தட்டுப்பட்டது! அது என்னவென்றால், எங்கிருந்தோ ஒரு ஒளி அந்தத் தோட்டத்தில் சொரிவது போல் தோன்றியது. அந்த ஒளி கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகியது. பிறகு அந்தத் தோட்டமே தேஜோ மயமாக ஒளிர்ந்தது. இதற்குக் காரணம் என்னவென்று ஐவான் சுற்று முற்றும் பார்த்தான். அப்போது அந்த ஆப்பிள் மரத்தின் மீது ஒரு தீப் பறவை அமர்ந்து ஆப்பிள் பழத்தைக் கொத்திக் கொண்டிருந்தது. 'ஆ! ஆப்பிள் திருடன் அகப்பட்டுவிட்டான்' என்று மனத்துக்குள்ளே சொல்லிக் கொண்டான்.



இளவரசன் ஐவான் அந்த மரத்தை மெல்ல நெருங்கிப் போனான். மரத்தில் அந்தப் பறவைக்குத் தெரியாமல் ஏறினான். பின் புறமாகச் சென்று பறவையைப் பிடிக்க முயன்றான். ஆனால் அதற்குள் பறவை அவன் பிடியிலிருந்து தப்பி ஓடிவிட்டது. அப்படி ஓடிய போது அந்தப் பறவை ஒரே ஒரு இறகு மட்டும் அவன் கையில் விட்டுச் சென்றது.

மறுநாள் இளவரசன் ஐவான் அரசனிடம் சென்றான்.

"என்னப்பா, மகனே! நீயாகிலும் அந்தத் திருடனைக் கண்டு பிடித்தாயா?" என்று ஆர்வத்தோடு கேட்டான் அரசன்.

"அப்பா! நான் திருடனைப் பிடிக்கவில்லை. ஆனால் அது யார் என்பதைக் கண்டுபிடித்து விட்டேன். இதோ பாருங்கள் இந்த இறகை! அந்தத் திருடன் தன் ஞாபகார்த்தமாக நமக்கு இதைக் கொடுத்திருக்கிறான். இந்தச் சிறகைப் பெற்ற பறவைதான் திருடியது" என்றான்.

அரசன் இறகை எடுத்துக் கொண்டான். அந்த நிமிஷத்திலிருந்தே அரசனுக்குச் சற்று உற்சாகம் ஏற்பட்டு விட்டது. இனி திருடனைக் கண்டு பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை பிறந்து விட்டது. அந்த நம்பிக்கையில் நன்றாகச் சாப்பிடலானான். சந்தோஷமாக இருக்கலானான்.

** ** **

ஒரு நாள் அரசன் இந்தத் தீப் பறவையைப் பற்றி யோசிக்கலானான். வெகு நேரம் யோசித்துத் தன் புதல்வர்கள் மூவரையும் வரவழைத்தான். அவர்களிடம் சொன்னான்:

"என் அருமைப் புதல்வர்களே! உங்கள் நம்பிக்கைக்குகந்த குதிரைகள்மீது ஏறிக்

கொள்ளுங்கள். உலகம் முழுதும் சுற்றிப் பார்த்துவிட்டு வாருங்கள். அப்படிச் சுற்றி வரும்போது எங்கேயாகிலும் இந்தத் தீப் பறவை உங்கள் கண்ணில் படலாம்; உடனே அதைப் பிடித்து வாருங்கள்'' என்று கூறினான்.

பிள்ளைகள் தந்தையின் வாக்கை ஆமோதித்தார்கள். தந்தையை வணங்கி விடை பெற்றுக் கொண்டு தங்கள் நம்பிக்கைக்குகந்த குதிரைகளின் மீது ஆரோகணித்து உலகத்தைப் பார்க்கவும் தீப் பறவையைப் பிடித்து வரவும் புறப்பட்டு விட்டார்கள்.

மூத்தவன் ஒரு சாலை வழியே சென்றான்; இரண்டாமவன் இன்னொரு சாலை வழியே சென்றான்; மூன்றாமவன் மூன்றாவது சாலை வழியே சென்றான்.

மூன்றாவது மகனாகிய இளவரசன் ஐவான் எத்தனை தூரம் சென்றான் என்பது யாருக்குத் தெரியும்?

ஒரு நாள் நல்ல வெயில் வேளையில் ஐவான் மிகவும் களைத்துப் போனான். தன்



குதிரையை விட்டுக் கீழே இறங்கி ஒரு மர நிழலில் படுத்தான். அவ்வளவுதான்; தூங்கிப் போய்விட்டான். இவன் இப்படி எத்தனை நாழிகை தூங்கினான் என்று யாருக்குமே தெரியாது! தூக்கம் விழித்து எழுந்தபோது அவன் குதிரையைக் காணவில்லை. 'குதிரை எங்கே? எங்கே?' என்று தேடிக்கொண்டு போனான், போனான், போனான். நெடுந்தூரம் போனான். அப்படிப் போய்க் கடைசியில் குதிரையின் எலும்புகளைக் கண்டான்!

இதைப் பார்த்தவுடன் அவனுக்குத் திக்கென்றது. சொல்ல முடியாத வருத்தம். ஆம், அவன் இனி எப்படித் தன் பிரயாணத்தைத் தொடர முடியும்?

இப்படிச் சற்று நேரம் இளவரசன் ஐவான் வருத்த முற்றாலும் அவன் உள்ளம் சோர்ந்து விடவில்லை. 'நான், இருக்கிற வசதியைக் கொண்டு சமாளித்தே யாக வேண்டும்'' என்று தீர்மானித்து நடக்க ஆரம்பித்தான்! ஆம், அவனுடைய கால்கள் தவிர வேறு என்ன வசதி அவனுக்கு இருந்தது?

இப்படி நடந்து நடந்து அவன் கால்கள் சோர்ந்து போயின. களைத்துப் போய் விட்டான். மேலே நடக்க முடியாமல் அப்படியே புல்தரையில் அமர்ந்து விட்டான். அப்போது எங்கிருந்தோ ஒரு ஓநாய் ஓடி வந்து சேர்ந்தது.

"இளவரசே! ஐவானே! ஏன் இப்படி உள்ளம் சோர்ந்து உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டது ஓநாய்.

"நான் வருத்தப்படாமல் என்ன செய்வது ஓநாயே! என் அருமைக் குதிரையை இழந்து விட்டேனே! இனி நான் என்ன செய்வேன்?'' என்றான் ஐவான்.

"இளவரசே! நான்தான் உங்கள் குதிரையைச் சாப்பிட்டது. உங்கள் குதிரையைக் கொன்றதற்கு ரொம்பவும் வருத்தப்படுகிறேன். வீட்டை விட்டு இவ்வளவு தூரம் எங்கே வந்தீர்கள்? என்ன செய்கிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டது.

"என் தகப்பனார் தீப் பறவையைத் தேடிப் பிடித்துக் கொண்டு வரும்படி கட்டளை யிட்டிருக்கிறார். அதைக் கருதித்தான் புறப்பட்டு வந்திருக்கிறேன்'' என்றான் ஐவான்.

"மூன்று வருஷங்கள் அந்தக் குதிரைமீது சவாரி செய்தாலும் அந்தத் தீப்பறவையைப் பிடிக்க முடியாதே! எனக்கு மட்டுந்தான் அது எங்கேயிருக்கிறது என்பது தெரியும். சரி, சரி, உங்கள் குதிரையைத் தின்று விட்டேன். அதற்குப் பிராயச்சித்தமாக உங்களுக்கு ஊழியனாக இருந்து வேலை செய்கிறேன். எங்கே, என் முதுகின் மீது ஏறிக் கொள்ளுங்கள். என் பிடரியை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். போகலாம்'' என்றது ஓநாய்.

இளவரசன் ஐவான் அதன் முதுகின் மீது ஏறிக் கொண்டான். ஓநாய் வேகமாகப் பறந்தது. அந்த வேகத்தில் காடுகள் வேகமாக மறைந்தன. நீல ஏரிகள் மறைந்தன. கடைசியில் மிக உயர்ந்த மதில்ச் சுவர் கொண்ட கோட்டைக்கு வந்து சேர்ந்தது.

"இளவரசே! நான் சொல்லுவதைக் கவனமாகக் கேளுங்கள். அத்துடன் அதை ஜாக்கிரதையாக நினைவிலும் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அந்த மதில் சுவரின் மீது ஏறிக் கொள்ளுங்கள். நாம் நல்ல அதிர்ஷ்ட வேளையில் தான் வந்திருக்கிறோம். ஏனெனில் கோட்டைக் காவல்காரர்கள் எல்லாரும் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். யாரையும்


அவன் ஒரு கவலையுற்ற தாயாராக யிருந்தாள் - இது அவளுடைய முதல் குழந்தை - அவனோ எப்பொழுதும் அசௌகரியத்துடன் கதறிய வண்ண மிருந்தான் - அவனுடைய எடையில் மாறுதலே இல்லை -வளர்ச்சியே கிடையாது.
ஒரு நாள், சந்தோஷமாயும், திடமாயுமுள்ள தன் குழந்தையுடனிருக்கும் தன் சிநேகிதியை விசாரித்தாள். விசேஷ மென்னவென்றால் சிநேகிதியின் குழந்தையும் அவளுடைய குழந்தையும் ஒரு வயதுக் குழந்தைகள்!
சிநேகிதி சொன்னாள் "என் குழந்தைக்கு 'க்ளாக்ஸோ' கொடுக்கிறேன்". 'க்ளாக்ஸோ' சுத்தமான புஷ்டியூட்டும் பால் - உணவு. குழந்தைகளின் எலும்புகளும், பற்களும் உறுதியாக வளர 'விடமின் டி'யும் ரத்தம் வளம் பெற இரும்பு சத்தும் சேர்க்கப்பட்டுள்ளன.
SUNSHINE
Glaxo
அந்தத்தாயார் அன்றைக்கே 'க்ளாக்ஸோ' கொண்டு வந்தாள். இப்பொழுது குழந்தையைப் பாருங்கள். அவன் குதூகலத்துக்கு அளவில்லை. அயர்ந்து தூங்கவும் செய்கிறான்! எடையும் நிதானமாக அதிகரித்துக்கொண்டு வருகிறது. 'க்ளாக்ஸோ'வுக்கு நன்றி.
Glaxo
'க்ளாக்ஸோ'-குழந்தைகளின் மிகச் சுத்தமான பால்-உணவு
D. 34



மூஞ்சூறு :— நான்தான் அப்பவே சொன்னேனே. இந்தத் தெருக் கோடிப் பள்ளிக்கூட 'சீஸல்ட்'டை நம்பினால் நமக்கு ஒரு தேங்காய் கூடக் கிடைக்காது என்று!

கண்டு பயப்பட வேண்டியதில்லை. கோட்டைக்குள் ஓர் அறையில் ஒரு ஜன்னல் இருக்கும். அந்த ஜன்னலில் ஒரு தங்கக் கூண்டு தொங்கும். அந்தக் கூண்டுக்குள்தான் தீப்பறவை யிருக்கிறது. அந்தப் பறவையை எடுத்து மார்பில் மறைத்து வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் கூண்டைத் தொடாதீர்கள்! ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தது.

இளவரசன் ஐவான், ஓநாய் சொன்னபடியே மதில் சுவர் மீது ஏறினான். தங்கக் கூண்டுள்ள அறையைப் பார்த்தான். அந்தக் கூண்டுக்குள் தீப்பறவை யிருந்ததையும் பார்த்தான். ஐவான் பறவையை எடுத்துக் கொண்டான். தன் மார்பில் மறைத்துக் கொண்டான். ஆனால் அவனால் அந்த அழகிய தங்கக் கூண்டிலிருந்து தன் பார்வையை அகற்றவே முடியவில்லை. "ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது. நான் இதை எப்படி இங்கேயே விட்டு விட்டுப் போவேன்!'' என்று ஏக்கம் நிறைந்த குரலில் சொல்லிக் கொண்டான். இப்படி நினைக்கத் தொடங்கிய மாத்திரத்தில் ஓநாயின் எச்சரிக்கையை மறந்து விட்டான். கூண்டை எடுக்கப் போனான். அவ்வளவுதான். அவன் கை பட்டதோ இல்லையோ எங்கும் பலத்த ஆரவாரமும் சத்தமும் அந்தக் கோட்டைக்குள் எழலாயின. மத்தளங்கள், முரசுகள், பேரிகைகள் எல்லாம் முழங்கின. காவல் காத்துக் கொண்டிருந்த படை வீரர்கள் விழித்துக் கொண்டார்கள். இளவரசன் ஐவானைப் பற்றி அழைத்துப் போய் அந்நாட்டு அரசனான ஸார் அப்ரான் முன்னிலையில் நிறுத்தினார்கள்.

அந்த அரசன், "நீ யார் ஐயா? எங்கிருந்து வந்திருக்கிறாய்?'' என்று கோபத்தோடு கேட்டான்.

"நான் இளவரசன் ஐவான். பெர்னடே அரசனின் மகன்'' என்றான்.

"சே! அரச குலத்தில் பிறந்து விட்டுத் திருடப் புறப்பட்டாயே? வெட்கமாக இல்லை!'' என்று அந்த அரசன் கேட்டான்.

அதற்கு இளவரசன் ஐவான், "உண்மை! ஆனால் நீங்கள், உங்கள் பறவையை எங்கள் தோட்டத்துக்கு வந்து ஆப்பிளைத் திருட விட்டிருக்கக் கூடாது'' என்றான்.

"அப்படியா சமாசாரம்? எனக்குத் தெரியவே தெரியாது. ஆனால் நீ இதை நேரே என்னிடமே யோக்கியமாகச் சொல்லி யிருக்க வேண்டும். சொல்லி யிருந்தால், உங்கள் தகப்பனாரின் கௌரவத்தைக் கருதி, உனக்கு அந்தத் தீப்பறவையைப் பரிசளித்திருப்பேன். ஆனால் நீ திருடத் துணிந்து விட்டாய்; உங்கள் குலத்துக்கு ஒரு களங்கத்தை யுண்டாக்கி விட்டாய். இக்தக் கெட்ட பெயரைத் திக்குகளெல்லாம் பரப்புகிறேன்...இல்லை...அப்படிச் செய்யவில்லை. பிழைத்துப் போ! நீ எனக்கு ஒரு உதவி செய்தால் உன்னை மன்னித்து விடுகிறேன்! 'நான் கோரும் உதவி என்ன தெரியுமா? ஏதோ ஒரு ராஜ்யத்தில் குஸ்மன் என்றோர் அரசன் இருக்கிறானாம். அவனிடம் தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரை யிருக்கிறதாம். எனக்கு அந்தக் குதிரையைக் கொண்டு வந்து கொடு. கொடுத்தால் தீப்பறவை, தங்கக் கூண்டு எல்லாம் பரிசாக வழங்குகிறேன்'' என்றான்.

இதைக் கேட்டதும் இளவரசன் ஐவானுக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. நேரே ஓநாயிடம் போனான்.

ஓநாயோ, "நான்தான் அப்போதே 'கூண்டைத் தொடாதீர்கள்' என்று எச்சரிக்கை செய்தேனே? அதை ஏன் கேட்கவில்லை?'' என்று கேட்டது.

"ஓநாயே! நான் அசட்டுத்தனம்தான் பண்ணிவிட்டேன். தயவு செய்து என்னை மன்னித்துவிடு, ஓநாயே!'' என்று கெஞ்சினான் ஐவான்.

"நீ இப்படியெல்லாம் வருத்தப்பட்டு என்ன புண்ணியம்? சரி, என் முதுகின் மேல் ஏறிக் கொள். நான் உமக்கு உதவுவதாக வாக்களித்து விட்டேன்! என்னால் அதை மாற்ற முடியாது! வாருங்கள், போவோம்'' என்றது ஓநாய்.

அடுத்த கணம் இளவரசன் ஐவான், ஓநாயின் முதுகின் மீது ஏறிக் கொண்

டான். ஓநாய் ஓடியது! இப்படி எத்தனை நாழிகை, எவ்வளவு தூரம் சென்றார்கள் என்று யாரால் சொல்ல முடியும்? எப்படியோ கடைசியில் தங்கப் பிடரி மயிர் கொண்ட குதிரையிருக்கும் கோட்டைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்தக் கோட்டையின் மதில் சுவர்கள் வானளாவ எழும்பியிருந்தன. அதைப் பார்த்து இளவரசன் மலைத்தான். அப்போது ஓநாய், "பயப்படாதீர்கள்! இந்த மதில் சுவரின்மேல் ஏறுங்கள்! காவலாளிகள் அத்தனை பேரும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் துணிந்து தைரியமாகக் குதிரை லாயத்துக்குப் போங்கள். உங்களை யாரும் பிடிக்க மாட்டார்கள். அங்கு பொன் பிடரி கொண்ட குதிரையிருக்கும். அதன் மேல் ஏறிக் கொண்டு வாருங்கள். ஆனால் அதன் கடிவாளத்தை மட்டும் தொடாதீர்கள். எச்சரிக்கை செய்கிறேன்" என்றது.

இளவரசன் ஐவான் கோட்டைக்குள் நுழைந்தான். எல்லாக் காவலாளிகளும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அதனால் தைரியமாக லாயத்துக்குப் போனான். பளபளவென்று மின்னும் பொன் பிடரி மயிர் கொண்ட குதிரையைப் பார்த்தான். அவ்வளவுதான். தான் தேடிவந்த குதிரை அதுதான் என்று கண்டு கொண்டான். உடனே அதன் பிடரியைப் பற்றி எம்பிக் குதிரையின்மேல் அமர்ந்தான். ஆயினும் அவனால் குதிரையின் கடிவாளத்தைக் கையினால் தொடாமலிருக்க முடியவில்லை.

ஆகா! அந்தக் கடிவாளம்தான் எவ்வளவு அழகாக இருந்தது! அந்தக் கடிவாளம் தங்கத்தினாலேயே செய்யப்பட்டிருந்தது. அந்தக் கடிவாளத்தில் நவரத்தினங்கள் வைத்து இழைக்கப்பட்டிருந்தன! அந்த நவரத்தினங்கள் பளபளவென்று மின்னின! பல வர்ணங்களில் ஒளிக் கிரணங்களை வீசிப் பார்ப்பவர் கண்களைப் பறித்தன! இப்படிப்பட்ட கடிவாளத்தை யாரால் தொட்டுப் பார்க்காமலிருக்க முடியும்?

ஆகவே ஐவான் தொட்டு வைத்ததில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

கடிவாளத்தை ஐவான் தொட்டானோ இல்லையோ கோட்டைக்குள் ஒரே கலவரமாகி விட்டது. இரைச்சலும் சத்தமும் அமர்க்களப்பட்டது. முரசுகள், தம்பட்டங்கள் எல்லாம் முழங்கின. அரைத் தூக்கத்திலிருந்த காவலாளிகள் எல்லாரும் விழித்துக் கொண்டார்கள். ஏதோ ரகளை நடந்து விட்டது என்று ஓடி வந்தார்கள். பொன் பிடரிக் குதிரை மீது இளவரசன் ஐவான் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து விட்டார்கள். உடனே அவரைச் சிறைப்படுத்தித் தங்கள் அரசன் குஸ்மான் முன்னிலையில் கொண்டு போய் நிறுத்தினார்கள். அரசன் ஐவானைப் பார்த்ததும், "நீ யார்? எங்கிருந்து வந்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"நான்தான் இளவரசன் ஐவான்" என்று சொல்லிக் கொண்டான்.

"என்ன, இளவரசனா! அரசனாய்ப் பிறந்தா திருட்டுத் தொழிலில் இறங்கினாய்? என்ன! ஆச்சரியமாக இருக்கிறதே! சரி, உன்னை மன்னித்து விடுகிறேன்! ஆனால் ஒரு காரியம் செய்ய வேண்டும்!" என்றான் அரசன். (அடுத்த இதழில் முடியும்)

வெய்யில் வேளையிலே!



Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam

Registered as a Newspaper in Ceylon
REGISTERED No. M. 4392

